# கிழக்குவாழ் தமிழரின் அரசியல்

## பயணத்திற்கான தேடல்

*மக்கள் பகிர்ந்துகொண்டதிலிருந்து.......*



அனுசரணை

**தமிழ் சிவில் சமூகஅமையம்**
**திருகோணமலை**

பங்களிப்பு

**திருகோணமலை மாவட்ட சமூகசெயற்பாட்டாளர் இணையம்**

மற்றும்

**நீதிக்கும் மாற்றத்திற்குமான நிலையம்**

**2018**

## கிழக்கு மாகாண தமிழ் அரசியல் பிரதிநிதித்துவமும் சவால்களும் தீர்வுகளும்
## சமூகச்செயற்பாட்டாளர்கள் குழு – நீதிக்கும் மாற்றத்துக்குமான நிலையம்
## முதல்படி ஆய்வு

**முன்னுரை:**
மூவின மக்களும் தனித்தும் கலந்தும் வாழும் கிழக்கு மாகாணம்,2012 மக்கள் கணக்கெடுப்புக்கிணங்க,617,295 தமிழ் மக்களையும் (39.79%),569,738முஸ்லிம் மக்களையும் (36.72% ),359,136 சிங்கள மக்களையும் (23.15%) ஏனையோர் என்ற வகையில் கணிக்கப்படும் 5,212 பறங்கியரையும் (0.34% ) உள்ளடக்கியுள்ளது.

நீண்ட வரலாற்றைக் கொண்ட வடகிழக்குத் தமிழர்களின் அரசியல் வாழ்வு, பல கட்டங்களைத் தன்னகத்தே கொண்டதும்கூட. இலங்கை சுதந்திரம் அடைந்ததன்பின் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வாக சமஸ்டி, சுயநிர்ணயம், தனித்தமிழ் ஈழம் போன்ற அரசியல் இலக்குகள் தமிழ் தலைவர்களால் முன்வைக்கப்பட்டு வடகிழக்கிலே முன்னெடுக்கப்பட்டு ஈற்றில் எதுவுமே எதிர்பார்த்த மாற்றங்களைத் தரவில்லை. ஜனநாயகவழிப் போராட்ட அரசியலின் தோல்வியால் 1970 களில் தமிழ் இளையோரிடையே தோன்றிய அடக்குமுறைக்கெதிரான இனவிடுதலைத்தாகம் ஆயுதப்போராட்டமாகப் பரிணமித்தது. 1983இல் இடம்பெற்ற இனக்கலவரம் இனவிடுதலைப் போராட்டத்தை தமிழர்களிடையே வலுப்பெறச்செய்து, வடகிழக்கெங்கும் தமிழர் தாயக மீட்புப்போராட்டமாக,தமிழ் தேசியம் என்ற உணர்ச்சியலையில் ஒருங்கிணைக்கப்பட்டு,கொழுந்துவிட்டெரியும் நெருப்பாக மாறியது. சுமார் 30 வருட ஆயுத இனவிடுதலைப்போர் ஈற்றில் 2009 வைகாசியில் வழமைபோன்று தீர்வற்ற தீர்வாக முடிவுக்குவர மீண்டும் ஜனநாயக வழி அரசியல் விடுதலை போராட்டம் என்றதொன்றே ஒரே வழியாகத் தமிழருக்கு மாறியது. இருந்தபோதிலும் சமஸ்டி முறையிலான தீர்வு இன்றும் போராடு பொருளாக தமிழ்த் தரப்பு கொண்டுள்ளது.

இத்தகைய வரலாற்றுச் சூழலில் வடகிழக்குத் தமிழர்கள் தமது அரசியல் எதிர்காலம், இருப்பு, அடையாளம் என்பன திட்டமிடப்பட்டவகையில் சிதைக்கப்பட்டுவிடுமோ என்ற பெரும் அங்கலாய்ப்பில் இன்று வாழ்கின்றனர். இத்தகைய மனக்குமுறல் வடமாகாணத்திலிருந்து கிழக்கு மாகாணம், நிர்வாக ரீதியாக நிரந்தரமாகப் பிரிக்கப்பட்ட 2006 புரட்டாதி 16ம் நாளின் பின்னான காலத்தில் இருந்து வலுப்பெற்றதாக மாறிக்கொண்டே வருகிறது. கிழக்கின் பல் இனச் சமூகச் சூழலில், இருப்பதையும் இழந்து விடுவோமோ என்ற தவிப்பில் கடும் விமர்சனங்களை திறந்தபொதுவெளியில் தமிழ் தரப்பார் பலரும் பலவகையில்கட்சிபேதமின்றி வெளியிட்டுவருவது கண்கூடு. அத்தகையதொரு சூழ்நிலை,தனிக் கிழக்குத் தமிழர் அரசியலின் சமகாலப்போக்கு, இருப்பு, பிரதிநிதித்துவம், அடையாளம் பற்றிய **"மக்கள் கருத்தாடல் தளம்"** பலமட்டங்களிலும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்டதாக அமையாத சூழ்நிலையில், ஆரோக்கியமற்ற அதேவேளை எவ்வித நேர்தகு மாற்றத்துக்கும் இட்டுச்செல்லாத அத்தகைய திறந்தவெளி விமர்சனங்கள், சேறுபூசு அரசியலின்பால் பட்டதாகவே பொதுவாக உணரப்படுகின்றது. தமிழ் வாக்காளர்களும் தமிழ் அரசியல் வாதிகளும், அவர்களது தலைமைகளும் தம்மை சுய ஆய்வுக்கு உட்படுத்தி தமது தந்திரோபாயத்தை புதுப்பித்துக்கொள்ளும்வகையில் அவை கட்டமைக்கப்பட்டு நல் மாற்றங்களை ஏற்படுத்துவனவாக உருமாற்றம் பெறவேண்டும் என்பது மறுக்கமுடியாத வரலாற்றுத்தேவை.

கிழக்குத் தமிழர்களுக்கும் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்ய விழைபவர்களுக்குமான இருபக்கத் தொடர்பாடல் அல்லது கருத்தாடல் தளம் (கீழிருந்து மேல்நோக்கி – மேலிருந்து அடி மட்டம்வரை) ஒன்று இருப்பதாக யாரும் காணாத அல்லது எண்ணாத சூழ்நிலையில், தமிழ் கட்சிகளின் அரசியல் தொடர்ச்சியாகவே இடம்பெற்று வருகின்றமை ஆரோக்கயமற்றதென்பது வரலாறு காட்டும் உண்மை.அத்துடன்**பெரும்பான்மையான தமிழ் வாக்காளர்களின் ஏகோபித்த கருத்துக்கள், அபிலாசைகள், உள்ளக்கிடக்கைகளை உள்ளீர்த்த மக்கள் அரசியல்** இடம் பெறவில்லை என்ற விமர்சனம் எல்லாமட்டங்களிலும் வியாபித்து நிற்கின்றது. இத்தகைய அம்சம் விமர்சனங்களுக்கப்பால் வாக்களிப்பு விகிதாசாரம்,பெறும் தமிழ் பிரதிநிதித்துவம் என்பனவற்றில் செல்வாக்குச்செலுத்துவனவாக இருந்தும் வருகிறது.

இத்தகையதொரு நிலையில், அரசியல் சாயமின்றி, பக்கச்சார்பின்றி கிழக்குத் தமிழர்களின் அரசியல் எதிர்காலம், இருப்பு, அடையாளம், இவற்றை தமிழர்களுக்கும் வெளிஉலகுக்கும் பறைசாற்றவல்லதும் பேரம் பேசி அதிகாரத்தை தக்கவைக்க இயலுமை கொண்டதுமான கிழக்குத் தமிழரின் சிதறாத வாக்களிப்பு,அதிகரித்த பிரதிநிதித்துவம் என்பன மட்டில் சாதாரண தமிழ் வாக்காளப் பெருமக்கள் என்ன நினைக்கின்றனர், எவற்றைத் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் கூற விரும்புகின்றனர், உண்மையில் பிரித்துத் தொகுத்துப் பார்த்தால் வாக்களிப்பு விகிதம் மேல்நோக்கியும் முன்னோக்கியும் செல்கிறதா? அல்லது படிப்படியாக வீழ்ச்சி கண்டு வருகின்றதா? அடுத்துவரும் மாகாண சபைத்தேர்தலில் நிலைமை என்னவாக இருக்கப்போகிறது? அவ்வாறெனின் தமிழ் அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் உடனடியாகச் செய்யவேண்டியதென்ன? என்பன பற்றிய ஆய்வை கட்சிகளுடன் நேரடியாகத் தொடர்புபடாத அதேவேளை கிழக்குத்தமிழர்களின் அரசியல் வாழ்வில் அக்கறைகொண்ட அனைத்துத் தரப்பாரிடமும் தமிழ் வாக்காளர்களிடமும் முன்னெடுத்தல் மிக மிக அவசியமாகிறது.

மேலும் 2006ன் பின்னான கிழக்கு மாகாணத்தில் தமிழ் வாக்காளர்களின் வாக்களிப்பு புள்ளிவிபரத்தை முறையாக ஆராய்ந்து பெறும் பெறுபேற்றின் அடிபடையில் வரவிருக்கும் மாகாணசபைத்தேர்தலில் தமிழ் பிரதிநிதித்துவத்தின் சாத்தியப்பாடுகளை எதிர்வுகூறுவதன் வாயிலாக சாத்தியமான முன்னேற்பாடுகளை, மாற்றங்களை, தந்திரோபாயங்களை தமிழர் தரப்பு மேற்கொள்ளச்செய்வதும் முக்கிய தேவையாக உணரப்படுகிறது. அந்தவகையில் ஒரு முதல்படி ஆய்வினை முன்னெடுத்து அதன் விசாரணைகளில் கண்டுகொண்ட அகஒளிக்கீற்றுக்களை மாற்றத்தை ஏற்படுத்தவல்ல

அனைத்துத் தமிழ் தரப்பார் முன்னிலையிலும் சமர்ப்பித்து அனைவரையும் உற்சாகத்துடன் இன்னுமதிகமாக செயல்பட வைக்க இம்முயற்சி மேற்கொள்ளப்படுகிறது

**அணுகுமுறை:**
ஆய்வினை வினைத்திறனுடனும், தரத்துடனும் மேற்கொள்ள பங்கேற்பு, பங்களிப்பை செலுத்தவல்ல மாதிரிகள் என,தமிழ் சமூகத்தின் பிரதான கூறுகளான தொழில்சார் சமூகங்கள், சமய நிறுவனங்கள், வழிகாட்டிகள், சிந்தனை ஆற்றல்மிகு தமிழ் புத்திஜீவிகள், தேசியமட்ட தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள், அவர்களது ஆக்கங்கள், தமிழ் அரசியல் ஆய்வாளர்கள் என பல தரப்பினரும் இனம் காணப்பட்டு, தனியாகவும் குழுவாகவும் அவர்கள் அணுகப்பட்டு, ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக விவசாய, மீன்பிடி (குளத்து, வாவி, கடல் வளங்களைப்பயன்படுத்தும்), திறன்சார் தொழிலாளர், சிறு, நடுத்தர, பெரு வர்த்தகர்கள், பெண்களுடன் பணிபுரிவோர், பெண்கள் அமைப்புக்கள், கணவனை இழந்த அல்லது குடும்பங்களைத் தாங்கும் பெண்கள், யுத்தத்தில் நேரடியாகப் பாதிக்கப்பட்டோர், முன்னாள் போராளிகள், நகர்ப்புற கிராமப்புற இளையோர், கிராம மட்ட அமைப்புக்கள், ஓய்வுபெற்றோர், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விச் சமூகம், அரசியல் சிந்தனை கொண்ட சமயத் தலைவர்கள் மற்றும் அமைப்புக்கள், சமூக மட்ட நலன்புரி அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள்,சட்டத்தரணிகள், மருத்துவர்கள், என 21 வகைக்கும் அதிகமான தொழில் சமூகங்கள் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தனித்தனியாக அதேவேளை முறைசார்- முறைசாராவேறு 29 குழுக்களாக அவர்களது வாழ்விடங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளனர்.

அத்துடன் மூன்று மாவட்டங்களிலிருந்தும் தேடலுக்கு உதவுவோராக தமிழ் கிராம மற்றும் நகர்ப்புற சூழலில் இருந்து ஒவ்வொரு தொழில் சமூகங்களையும் உள்ளடக்கும் வகையில் அரசியல் ஆர்வம் கொண்ட 1500க்கும் அதிகமானோர் தனிநபர்களாக வினாக்கொத்து வாயிலாக அணுகப்பட்டு அவர்களது கருத்துகள் ஆலோசனைகள் பெறப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன.

இவர்களுடன் தமிழ் அரசியல் விமர்சகர்கள், பத்திரிகை எழுத்தாளர்கள், சமூக ஆர்வலர்கள், இனப்பற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்ட எழுவரது கருத்துக்கள் மற்றும் 26 ஆய்வுக் கட்டுரைகள் தகுதிவாய்ந்தவர்களால் உசாவப்பட்டு அதிலுள்ள முக்கிய விடையங்கள் வினாக்கொத்தில் வினாவாகவும் சாத்தியமான பதில்களாகவும் உள்வாங்கப்பட்டுள்ளன. அவ்வினாக்கொத்தின் வினாக்களும் சாத்தியமான பதில்களும் தமிழரின் உரிமை, அடையாளம், அரசியல் இருப்பு, பல்தரப்பட்ட பிரதிநிதித்துவம் சாரந்த மேற்குறித்தோரது தொடர்வாதம், விதந்துரைப்புக்கள் சார்ந்தனவாகவும் தமிழ் அரசியல் பரப்பில் தொடர்ந்தும் நிராகரிக்கமுடியாதபடி இடம்பிடித்திருப்பனவாகவும் உள்ளன என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.இவையனைத்தையும் ஆய்வுப்பணிக்கு உதவிய அரசியல் சார்பற்ற அதேவேளை அரசியல் துறைசார் புத்தஜுவிகளால் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும் தமிழ் அரசியல் கட்சிகளின் நோக்கு, பார்வை, கருத்து என்பன இவ் ஆய்வில் கண்டறியப்படவில்லை. ஏனெனில் தமிழ் வாக்காளர்களுக்கு களம் அமைத்து அவர்களது அபிப்பிராயங்களை, உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்த வாய்ப்பளித்து ஈற்றில் அவை அனைத்தையும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அல்லது எதிர்காலத்தில் பிரதிநிதித்துவப்படுத்த விளையும் அரசியல் கட்சிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் எடுத்துச்செல்வதே பெரும் இலக்காகும். மேலும் 2008இன் பின்னான கிழக்கின் தனிமாகாண அரசியல் பயணத்தின் மறுக்கமுடியாத சாட்சிகளாய் திகழும் புள்ளிவிபரங்களையும் அவை வெளிப்படுத்தி நிற்கக்கூடிய கருத்துக்களையும் வெளிக்கொணர்ந்து அனைத்துத் தரப்பாரும் நிலைமையின் கடினத்தன்மையையும் அவசரத்தன்மையையும் புரிந்து அதற்கேற்றவாறு திட்டமிட்டு செயல்பட வைப்பதும் இதன் நோக்கமாகும். இவ்வாறு தமிழர்களது உணர்வுகளை உள்வாங்கிய பாரிய அரசியல் வேலைத்திட்டத்துக்கு தமிழ் தலைவர்கள் சென்று, நிராகரிக்கமுடியாதபடி பேரம் பேசுநிலை தமிழ் பிரதிநிதித்தவத்தையும் அரசியல் அதிகாரத்தையும் தமிழ் தலைமைகள் பெற்றுக்கொண்டு, தமிழர் வாழ்வில் முன்னேற்ற ஒளி ஏற்றவேண்டுமென்பதே பேரவா.

அதன் அடிப்படையிலேயே இவ் ஆய்வு முதலாந்தர அல்லது முதல்படி ஆய்வாகிறது. தமிழ் அரசியல் கட்சிகளை நாடுதல், கருத்தறிதல் என்பது இரண்டாந்தர ஆய்வுக்குச் செல்கையிலேயே சாத்தியப்படும்.

**ஆய்வின் நோக்கம்,**

- கிழக்கு மாகாணத்தில் தமிழ் வாக்காளர்களின் வாக்களிப்பு புள்ளிவிபரத்தை முறையாக ஆராய்ந்து பெறும் பெறுபேற்றின் அடிபடையில் வரவிருக்கும் மாகாணசபைத்தேர்தலில் தமிழ் பிரதிநிதித்துவத்தின் சாத்தியப்பாடுகளை எதிர்வுகூறுதல்.
- அதி உச்ச தமிழ் பிரதிநிதித்துவத்தை பெறும் தந்திரோபாயங்களை அடையாளம் காணுதல்.
- தமிழ் வாக்காளர் ஒருவர் ஏன் வாக்களிக்கவேண்டும் என தெளிவுபடுத்துவதுடன் ஒருவர் வாக்களிக்காவிடத்து ஏற்படும் பாதக நிலையினை எடுத்துரைத்தல்.
- எதிர்வரும் கிழக்கு மாகாணசபை தேர்தல் தொடர்பாக தமிழ் மக்கள் கொண்டுள்ள உண்மையான நிலைப்பாட்டினை தமிழ் அரசியல் கட்சிகளுக்கு புள்ளிவிபரத்துடன் அழுத்திக்கூறுதல்.

**கிழக்கு தனியாகப்பிரிக்கப்பட்ட காலத்துக்குப்பின்னான அதன் அரசியல் கள நிலவரம்:**

வடகிழக்கு தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்ட பின்புலத்தில், 2006இல் கிழக்குத் தமிழர்களின் அரசியலும் வடக்கிலிருந்து துண்டாடப்பட்டு தனித்து விடப்பட்டு அதன்மூலம் தமிழர்களின் அரசியல் பலத்தை நசுக்கும் படிமுறை முடுக்கிவிடப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணப் பிரிப்பை சட்டரீதியாக நிறைவேற்றிக்கொள்ள உயர்நீதிமன்றம்நாடப்பட்டதும் இதனடிப்படையிலேயே. அத்துடன் இத்தகைய முயற்சிகள் விடுதலைப்போர் வேட்கைகொண்ட அக்காலச் சூழலிலிருந்து கிழக்கை வெளியெடுத்த அரசின் இராணுவ நடவடிக்கையை மிகவும் முனைப்புடனும் மூர்க்கத்துடனும் முன்னெடுக்கப் பாதையும் சமைத்தது. ஈற்றில் 2007இல் கிழக்கு முற்றாகப் போராளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அத்துடன் கொழும்பின் நேரடிஅரசியல் காய்நகர்த்தலுக்கு முற்றாக கிழக்கு உட்பட்டது. தமிழர் உரிமைப்போராட்டம் எனும் குதிரை, பொது ஜனநாயக அரசியல் எனும் திறந்த வெளியில், தேர்தலுக்கூடாகத் தெரிவாகும் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் கைகளில் கொடுக்கப்பட்டது. அக்குதிரை இலக்கு நோக்கிச் செலுத்தப்படுகிறதா, ஆம் எனின் அதன் வேக வினைத்திறனை எவ்வாறு அதிகரிக்கலாம், இல்லையெனின் அதனை எவ்வாறு இலக்கைநோக்கி திசைதிருப்பலாம் என்பன போன்ற தேடல்கள் வரலாற்றுத்தேவையாக தமிழ் அரசியல் கட்சிகளைச் சாராத தமிழரின் அரசியல் இருப்பு, அடையாளம், அதிகாரம்மிகு பிரதிநிதித்தவம் பற்றி சிந்திப்போரிடையே இன்று வியாபித்து நிற்கிறது.

இத்தகையதொரு சூழ்நிலையில், கிழக்குத் தமிழர்கள் 2019ல் ஒரு மாகாணசபைத்தேர்தலையும் 2020ல் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களையும் சந்திக்கும் சாத்தியக்கூறு உள்ளது. 2012ல் இடம்பெற்ற மாகாணசபைத்தேர்தல் தமிழர்களுக்கு செல்வாக்கு மிக்க அதிகார ஆட்சியை மாகாணசபையில் தந்திருக்கவில்லை. அத்துடன் 2015ல் நடைபெற்ற ஆட்சிமாற்றமும் நல்லாட்சி என்றகோதாவில் தமிழர் வாழ்வில் பெரிய நல்லமாற்றங்களை ஏற்படுத்தவும் இல்லை என்ற பரவலான அதிருப்தியும் அங்கலாய்ப்பும் அனைத்துத் தமிழ் தரப்பினரிடையேயும் வலுப்பெற்றுநிற்கிறது.

மேலும் 2018 மாசி மாதத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத்தேர்தலின் பெறுபேறுகள், கிழக்கு மாகாணத் தமிழர்களின் பிரதிநிதித்துவம்,வேட்பாளர் தெரிவு,மக்கள் வாக்களிக்கும் ஆர்வம்,வாக்களிப்பு விகிதம்,வாக்களிக்கத் தடைகளாக உள்ளவை, வாக்களிக்கத்தூண்டுபவை, அக ஊக்கிகள் மற்றும் உந்துதல்கள் போன்ற இன்னோரன்ன விடையங்கள் மட்டிலும் கரிசனைகொள்ள வைத்துள்ளன. அத்தகைய கரிசனை எதிர்வரும் மகாணசபைத்தேர்தலை வினைத்திறனுடன், அரசியல் சாணக்கியத்துடன் எதிர்கொண்டு சிறப்பான ஆற்றல்மிகு பிரதிநிதித்தவத்தை தமிழ் தரப்பு தனதாக்கிக்கொள்ள என்ன செய்யவேண்டும், என்ற தேடலை மேற்கோள்ளும் தேவையை இன்னும் அதிகப்படுத்தியுள்ளது. இத்தேடலின் விளைவாக எதிர்வரும் மாகாணசபைத்தேர்தலில் கிடைக்கக்கூடிய பிரதிநிதித்துவத்தை ஊகித்தறிந்து அதனை அதிகரிக்கவல்ல தந்திரோபாயத்தை தமிழ் அரசியல் தலைவர்களும், அரசியல் கட்சிகளும், தமிழ் அரசியல் வாதிகளும், ஏன் தமிழ் வாக்காளர்களும் கடைப்பிடிக்கத்தூண்டுவதே இத்தேடலின் நோக்கமாகும்.

அதனைச் சாத்தியப்படுத்தவடக்கிலிருந்து கிழக்கு பிரிந்து தனியாக அது எதிர்கொண்ட தேர்தல்கள், வாக்காளர்களின் வாக்களிப்பு முறைமை என்பன சார்ந்த உறுதிப்படுத்தப்பட்ட புள்ளி விபரங்களை ஆழமாக பிரித்தும் தொகுத்தும் பார்க்கும் தேவை எம்முன்னே உள்ளது.

## கிழக்குத் தமிழர் அரசியற்பரப்பில் அரசியல் செய்யும் கட்சிகளும்தமிழ் வாக்காளர்களும் - ஒரு பார்வை:

தமிழ் வாக்காளர்கள் எனக்கூறும்போது அவர்கள் ஓரே வகைக்குள் அடங்குபவர்களாக இருப்பதில்லை. முதலாம் வகையினர் தமிழர் விடுதலைப் பயண வரலாறு முழுவதும் தமிழரின் தன்மானம், உரிமை, விடுதலைசார் அரசியல் செயல்பாடுகள் போன்றனவற்றில் பங்குபற்றி அவற்றால் ஈர்க்கப்பட்டு பலமான ஆதரவு வழங்கிவரும் தமிழ் இனப்பற்றுக்கொண்ட வாக்காளர்கள். இவர்களே இன்றும் பெரும்பான்மையான கிழக்குத் தமிழ் வாக்காளர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் ஆதரிக்கும் தமிழ் கட்சி வடக்கிலும் கிழக்கிலும் விமர்சனங்களுக்கு அப்பால் மிகுந்த செல்வாக்குக் கொண்டதாக உள்ளது என்பதில் இருகருத்துகளுக்கிடமில்லை.

இரண்டாம் வகையினர் தேசிய அரசியல் கட்சிகளில் நம்பிக்கை வைத்து அவர்களது செயல்பாடுகளில் ஈர்க்கப்பட்டு அவர்களை ஆதரவளிப்பவர்கள். இவர்கள் எப்போதும் தமிழ் அரசியலில் சிறுபான்மையினர். அபிவிருத்தி முன்னேற்றத்துக்கு முன்னுரிமை அளிப்பவர்கள்.அதேவேளைஉரிமை மையத் தமிழ் வாக்கு வங்கியைஓரளவேனும் சரிக்கக்கூடியவர்களாக மெதுவாக முன்னேறியும் வருகின்றனர். மூன்றாம் வகையினர் ஆயுதப்போரில் தமிழர் உரிமை விடுதலைக்காகப் போராடி பின்னான காலத்தில் பல்வேறு பாரிய முரண்பாடுகளால் இயக்கச் செயற்பாடுகளை நேரடியாகக் கைவிட்டு அரசியல் நீரோட்டத்துக்கு வந்து அரசில் கட்சிகளை கொண்டிருப்போரை ஆதரிக்கும் தமிழர்கள் ஆகும். இவர்கள் ஆதரிக்கும் கட்சிகள் நிலையான வாக்கு வங்கிகளை கிழக்கில் கொண்டிருக்கவில்லை. சில கட்சிகள் வடக்கில் செல்வாக்கு மிக்கவர்களாக உள்ளனர். 2001ம் ஆண்டுவரையிலும் அரசின் அனுசரணையுடன் அல்லது பாதுகாப்பில் அரசியல் செய்யும் நிலையிலிருந்தவர்கள் என்றும், பின்னான காலங்களில் தமிழர் உரிமையை முன்னெடுத்த செல்வாக்குமிக்க கட்சிகளுடன்,இறுதிவரை போராடிய போராளிகளால் கூட்டுச்சேர்க்கப்பட்டு அரசியல் செய்பவர்கள் என்றும் தமிழ் வாக்காளர்கள் இன்றும் கருதுகின்றனர்.கிழக்கில் அவர்களது வாக்கு வங்கியும் மிக மிகக் குறைவானதே.

நான்காம் வகையினர், போராளி அமைப்புக்களிலிருந்து அரசியல் கட்சியாக மாறிய மாகாணக் கட்சியை ஆதரிப்போர் ஆகும். மேலும் அக்கட்சி கிழக்கில் 2008க்குப்பின்னர் தொடர்ச்சியற்று சுயமாகவும், சிலவேளை கொழும்புடன் கூட்டுச்சேர்ந்தும் அரசியல் களத்தில் உள்ளதுடன் "அபிவிருத்தியும் முஸ்லிம்களிடமிருந்து பாதுகாப்பும்" என்ற

கோசத்துடன் தேசிய கட்சிகளுடன் இணைந்து செயல்பட்டும் வருகிறது.போராளிகளுடன் 2003இன்பின் முரண்பட்டவர்களின் செல்வாக்கைத் தாங்கிய இக் கட்சிகூட மூன்றாம் நிலை தமிழ் கட்சியாகவே உள்ளது என்ற அபிப்பிராயமும் வாக்காளர்களிடம் உள்ளது.

இத்தகைய பின்புலத்தில் தற்போதுள்ள தமிழ் வாக்காளர்களை இன்னுமதிகமாக விளங்கிக்கொள்ளவேண்டுமானால் அவர்களது வாழ்விடப்பின்புலத்தையும் ஓரளவு அறிதல் அவசியமாகிறது. தமிழ் வாக்காளர்களைப்பொறுத்தவரையில் எல்லைக்கிராமங்களில் ஏனைய இனத்தவர்களுடன் வாழ்பவர்கள் ஏராளம் உள்ளனர். இவர்களுக்கு ஏனைய இனத்தவரின் அரசியல் செயல்பாடுகளில் பரிட்சயம் உள்ளது. சில தேர்தல்களின் இவர்கள் அத்தகையோரை சிறிதளவு ஆதரிப்பதும் உண்டு. அடுத்தவகையினர் பின்தங்கிய தமிழ் கிராமங்களில் வாழ்பவர்கள். அடிப்படை வசதிகள், பொதுச்சேவைகள், குடும்ப,கிராமியப்பொருளாதாரத் தேவை போன்ற முக்கிய வாழ்வியல் பிரச்சினைகளில் சிக்கியுள்ளவர்கள். இவ்விரு வாழ்விடம் சார் தமிழ் மக்களும் பொதுவாக போராளிகளால் அதிகம் அரசியல் மயப்படுத்தப்பட்டவர்கள், போராளிகளின் குடும்பங்கள் மற்றும் உறவினர் வட்டத்தைக்கொண்டவர்கள். போரில் கடுமையான இழப்புக்களைச் சந்தித்தவர்கள்.அடுத்தவகையினர் சிறுநகரங்களில் வாழ்பவர்கள். குடும்பவருமானத்துக்கான வழிகளைப் பெரும்பாலும் கொண்டிருந்தாலும் தமது பிரதேச அபிவிருத்தி,பொதுச்சேவைகளின் முன்னேற்றம்,வேலைவாய்ப்புப் பற்றி அதிகம் சிந்திப்பவர்கள்.இவர்களும் போரின் தாக்கத்தை அனுபவித்தவர்கள்.இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் நகர்புற வறுமைக்குட்பட்டவர்கள். இறுதியாகநகரங்களில் வாழ்பவர்கள்.இவர்கள் சிறிது காலமே போராளிகளின் கீழ் வாழ்ந்தவர்கள். ஏனைய காலங்களில் அரச கட்டுப்பாட்டில் இராணுவ நெருக்கடிக்குள் வாழ்ந்தவர்கள். பொதுவாக தமிழ் அரசியல் கருத்தியலில் செல்வாக்குச்செலுத்துபவர்களும் இவர்களே. இவர்களது தேவைகளை பூர்த்திசெய்யும் வகையில் வளங்கள், சேவைகள் ஆளணியை அதிகம் கொண்டவர்கள். இத்தகையோரில் ஒரு சிறிய தரப்பினர் நிலையான அரசியல் பார்வை அற்றவர்களாக காலத்துக்குக் காலம் பல்வேறு கட்சிகளை ஆதரிப்போராகவும் உள்ளனர்.

2009க்குப்பின்னான அரசியல் சூழ்நிலையை தீர்மானிக்கும் பிரதான காரணிகளில் வாக்காளர்களின் வாழ்விடங்களும், அவர்களது அபிலாசைகளும், தேவைகளும் பெரும் செல்வாக்குச்செலுத்துவனவாக உருவெடுத்து வருகின்றன என்பது எவராலும் மறுக்கமுடியாத விடயம்.இத்தகைய செல்வாக்கு வாக்களிப்பு முறைமையிலும் வெளிப்படுவதை பிரதேச ரீதியான வாக்களிப்புப் புள்ளி விபரங்கள் சுட்டி நிற்கின்றன.

## பகுதி– 1

## கிழக்கு தமிழ் வாக்காளர்களின் வாக்களிப்புக் கோலமும் எதிர்காலமும்

ஒரே பார்வையில் 2006க்குப் பின்னான கிழக்கின் வாக்களிப்புப் புள்ளிவிபரம்

**2008 – முதலாவது மகாணசபைக்கான தேர்தல்** (T- 10,B- 11,A-14)

| கட்சிகள் | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | மொத்தம் | விகிதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| UPFA( TMVP, SLFP,ACMC,NC) | 59,298 | 105,341 | 144,247 | 308,886 | 52..21% | T-4,B-6,A-8 |
| TDNA (PLOTE, EPRLF, TELO) | | 7,714 | | 7,714 | 7.71% | B-1 |
| UNP | 70,858 | 58,602 | 121,272 | 250,732 | 42.38% | T-5,B-4,A-6 |
| JVP | 4,266 | 379 | 4,759 | 9,390 | 1.59% | T-1 |

கிழக்கு, இராணுவ ரீதியாக மீட்கப்பட்டு அரச கட்டுப்பாட்டில் வந்தபின் இடம்பெற்ற முதல் தேர்தலாகும். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் எனும் முன்னாள் போராளிகள் அமைப்பு 2004இன் பின் போராளித் தலைமைகளுடன் முரண்பட்டுஅதனால் உருவான பிரிவிலிருந்து உருவானது. அப்போதிருந்த மகிந்த ஆட்சியை ஏற்று அவரது அரசியல் கூட்டமைப்பில் இணைந்து போராளிகளுக்கெதிராக அவர்களை ஆதரிக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கெதிராகதேர்தலில் குதித்தனர். இவர்களுடன் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், சிறிலங்கா சுதந்திரக்கட்சி போன்றன இணைந்து தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களிடையே வாக்குக்கேட்டன. கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளில் யாருக்கு யார் வாக்களித்தனர் என்பதை கண்டுகொள்ளல் மிகச் சிரமமானது. அத்துடன் இத்தேர்தல் பற்றி பல விமர்சனங்களும் உள்ளதுடன் தமிழ் தேசியக்கூட்டமைப்பு இத்தேர்தலில் பங்கெடுக்கவில்லை. வடகிழக்கு எனக்கூறப்படும் தமிழர் தாயகம் கூறுபோடப்பட்டதால் உருவான கிழக்கு மகாணசபை தேர்தலில் பங்கெடுப்பது தமிழ் தேசியத்துக்கு எதிரானது என்ற அடிப்படையில் அவர்கள் தேர்தலைப்புறக்கணித்தனர். இருந்தபோதிலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிஅங்கம் வகித்த ஒன்றிணைந்த மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்று மகாணசபையில் ஆட்சி அமைத்தது.தமிழர் ஒருவர் முதலமைச்சரானார்.

**2010 – பாராளுமன்றத் தேர்தல்** (T-4,B-5,A-7)

| கட்சிகள் | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | மொத்தம் | விகிதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| TNA (AITK, EPRLF,TULF, TELO | 33,268 | 66,235 | 26,855 | 126,358 | | T-1, B-3, A-1 |
| TMVP | 1,712 | 16,886 | 1,490 | 20,088 | | |
| TULF | | 4,424 | | 4,424 | | |
| UPFA | 59,784 | 62,009 | 132,096 | 253,889 | | T-2, B-1,A-4 |
| UNP | 39,691 | 22,935 | 90,759 | 155,385 | | T-1,B-1,A-2 |
| IG | | 6,034 | | 6,034 | | |

ஆயுதப்பேராட்டம் இராணுவ ரீதியாக வெற்றிகொள்ளப்பட்ட சூழ்நிலையில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட தேர்தல் இது. மகாண சபையில் கூட்டாட்சியில் இருந்தபோதும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனியாகப் போட்டியிட்டு 5 ஆசனங்களைப் பெற்ற தமிழ் தேசியக்கூட்டமைப்பிடம் ஒரு ஆசனத்தையேனும் பெறமுடியாமல் தோல்வியைக்கண்டிருந்தது. அவர்கள் வாக்கு வங்கி ஓரளவு மட்டக்களப்பில் உள்ளது என்ற போதும் மட்டக்களப்பு தமிழ் வாக்காளர்கள் இத்தேர்தலில் அவர்களை பெரிதும் ஆதரிக்கவில்லை. மேலும் திருகோணமலை,அம்பாறையில் கணிசமான ஆதரவை தமிழ் மக்கள் வேறு தமிழ் கட்சிகளுக்கு

வழங்காது தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு வழங்கியிருந்தனர்.

**2011 – உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்(T-118, B-27,A-201**

| கட்சிகள் | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | மொத்தம் | விகிதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| TNA (AITK, EPRLF,TULF, TELO) | 34,016 | 329 | 30,108 | 64,453 | | T-24, A-25 |
| UNP | 30,669 | 1,918 | 50,747 | 83,334 | | T-19 ,B-1, A-36 |
| UPFA | 80,570 | 25,760(58.76%) | 119,881 | 226,211 | | T-30,B-19,A-91 |
| SLMC | | 5,848 | 73,949 | 79,797 | | T-B-4,A-42 |
| IG | 7,944 | 9,440 | 11,322 | 28,706 | | T-3,B-4,A-4 |

மூன்று கட்டங்களாக இடம்பெற்ற இத்தேர்தல் மட்டக்களப்பில் முறையாக இடம்பெறவில்லை. இருந்தபோதும் திருகோணமலை, அம்பாறையில் முன்னைய தேர்தலைக்காட்டிலும் இத்தேர்தலில் தமிழ் வாக்காளர்கள் தமது ஆதரவை தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு வழங்கியிருந்தனர். வேறு தமிழ் கட்சிகள் இத் தேர்தலில் பெரிதாக களம் இறங்கவில்லை.

**2012 – மாகாண சபைக்கான தேர்தல் (Total 37 (TNA-11, UPFA-14, SLMC-7, UNP -4, NFF-1)**

| கட்சிகள் | திருகோணமலை | மட்டக்களப்பு | அப்பாறை | மொத்தம் | விகிதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| **TNA (AITK, EPRLF,TULF, TELO** | 44,396 (29.08% | 104,628 (50.83) | 44,769(16.28 | 193,827 | 30.59% | T-3, B-6, A-2 |
| **UNP** | 24,439(16.01 | 2,434(1.18 | 48,028(17.4 | 74,901 | 11.82% | T-1, B-0, A-4 |
| **UPFA (TMVP,ACMC,SLFP** | 43,324(28.38 | 64,190(31.17 | 92,530(33.6 | 200,044 | 31.58 | T - 3,B-4,A- |
| **SLMC** | 26,176(17.15 | 23,083(11.2 | 83,658(30.4 | 132,917 | | T-2,B-1,A-4 |
| **NFF** | | | | 9,522 | 1.50% | 1 |
| **Others** | | | | 22,323 | 2.52 | 0 |

கிழக்கில் இடம்பெற்ற இரண்டாவது மாகாண சபைத்தேர்தல் இது. திருகோணமலை, அம்பாறையில் முன்னைய தேர்தலைவிட அதிக வாக்காளர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வாக்களிப்பு விகிதம் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டினர். மட்டக்களப்பில்கூட முன்னைய தேர்தல்களைவிட அதிக வாக்குகளை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வழங்கியிருந்தனர்.UPFA கூட்டமைப்பு கூடுதல் வாக்குகளைப்பெற்றிருந்தது. TMVPயும் இவர்களுடன் களமிறங்கி இருந்தது. UNPமிகக் குறைவான வாக்குகளைப்பெற்றிருந்தது.

2015 – பாராளுமன்றத் தேர்தல் (A-7,B-5,T-4) 16 seats

| கட்சிகள் | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | மொத்தம் | விகிதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| TNA (AITK, EPRLF,TULF, TELO | 45,844 (25.44% | 127,185 (53.25 | 45,421(13.9 | 218,450 | | T-1, B-3, A-1 |
| UNNGG | 83,638(46.36% | 32,359 (13.55 | 151,013 | 267,010 | | T-2, B-1,A-4 |
| UPFA | 38,463(21.32% | 32,232 (13.49 | 89,334 | 160,029 | | T-1, B-0,A-2 |
| SLMC | | 38,477 (16.11 | | | | T-,B-1, A- |
| JVP | 2,556 | 81 | 5,391 | 8,028 | | |
| Others | 9,845 | 46,989(19.67% | 35,036 | 91,870 | | T--,B-1,A-0 |

நல்லாட்சி அலையில் இடம்பெற்ற பாராளுமன்றத்தேர்தல். முன்னைய தேர்தலைவிட அதிகவாக்குகள் TNA க்கு கிடைத்திருந்தது. UPFA அலை சற்று ஓய்ந்து UNNGG எனும் கூட்டணி அதிகவாக்குகளைப்பெற்றது. அதிருப்தி வாக்குகள் மட்டக்களப்பு, அம்பாறையில் அதிகம் அளிக்கப்பட்டுள்தான கணிப்பும் உள்ளது. இத்தேர்தலிலும் தமிழ் வாக்குகள் மெதுவாக அதிகரித்திருந்தன.

**2018 – உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்(A-27, B-**

| கட்சிகள் | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | மொத்தம் | விகிதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| **ITAK** | 32,446 (14.65) | 168,527(37.71 | 24,468 (6.1 | 225,441 | | T-36,B-82,A-27 |
| **TMVP** | | 61,071(13.67 | 400 | 61,471 | | T- ,B-53,A- |
| **AITAC** | 4,428(6) | 2,534(0.57% | 2,768(0.67 | 4,428 | | T-8, B-1, A |
| **TULF(EPRLF)** | 2,658 | 24,212(5.42% | 10,554(2.57 | 37,424 | | T-3, B-22,A- |
| **EPDP** | 3,490(1) | 782(1) | 1,555(0.38 | 5,827 | | T-1, B-1,A- |
| **UNP** | 35,736(38 | 57,649(12.90% | 116,356(25.8 | 209,741 | | T- ,B-50,A- |
| **SLPP** | 37,638(58 | 7,349 (1.64% | 68,098(16.7 | 113,085 | | T- B-11,A- |
| **SLMC** | 28,875(28 | 6,638 (1.49% | 15,022(3.5 | 50,535 | | T- B-4 |
| **ACMC** | 21,150(18) | 1,196 (1 | 40,765(9.91 | 63,111 | | |
| **JVP** | 4,395(2 | 1,932 | 10,140(2.4 | 16,467 | | T- B-2, A- |
| **Others** | 21,694(15) | 51,826(11.60% | 70,142(17 | 143,662 | | T- ,B-44, A- |
| **UPFA** | 23,851(29 | | 41,102(10.3 | 64,953 | | |
| **SLFP** | 5,118(4 | 63,196 (54 | 60,192(14.6 | 128,506 | | |


நல்லாட்சி அலை ஓய்ந்து SLPP எனும் புதிய (மொட்டு) அணி களமிறங்கியது. உள்ளூராட்சி மன்றங்களைப் பிடிக்க ஏராளம் கட்சிகளும் சுயேச்சைகளும் களமிறங்கியிருந்தன. வாக்குகள் ஏராளம் அளிக்கப்பட்டபோதிலும் சிறுகட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் அவை ஒன்று சேராமல் சிதறடிக்கப்பட்டிருந்தன. அதேவேளை பெரும்பாலானோரை இச்சிறுகட்சிகள் வாக்களிக்கவும் வைத்திருந்தன. உண்மையில் தமிழ் கட்சிகளிடையே கூட்டு ஏற்பட்டிருந்தால் இன்னுமதிகமான ஆசனங்களைப்பெற்று பல பிரதேச சபைகளின் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்திருக்க முடியும்.

2008க்குப் பின்னான காலத்தில் 4 வகை தேர்தல்களை கிழக்கு மக்கள் சந்தித்துள்ளனர். 2 மாகாண சபைத்தேர்தல்களும், 2 உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களும், 2 ஜனாதிபதித் தேர்தல்களும், 2 பாராளுமன்றத் தேர்தல்களுமாகும். இவற்றில் ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் அரசில்வாதிகள் போட்டியிடுவதில்லை. அத்துடன் ஜனாதிபதி வேட்பாளர்களின் தேசியக்கட்சிகளுடன் நேரடியாக கூட்டுச்சேர்வதும் இல்லை. இதனடிப்படையில் தமிழ் மக்களின் வாக்கினால் தெரிவாகும் பிரதிநிதித்துவத்தைத் தரவல்ல தேர்தல்களையும் வாக்களிப்புப் போக்கையும் உற்றுநோக்கல் பெறுமதியான கருத்துக்களைத் தரவல்லது.

## கிழக்குத் தமிழர்களின் வாக்களிப்புக் கோலமும், போக்கும், பாதகங்களும் - ஒரு பகுப்பாய்வுக் கண்ணோக்கு

கிழக்கின் மொத்த சனத்தொகையில், 2012 மக்கள் கணக்கெடுப்புக்கு கிணங்க, 39.79 விகிதத்தைக்கொண்ட தமிழர்களும் 36.72 விகிதத்தைக்கொண்ட முஸ்லிம்களும் 23.15 விகிதத்தைக்கொண்ட சிங்கள மக்களும், 0.34 விகிதத்தைக்கொண்ட பறங்கியரும் வாழ்கின்றனர். 70 விகிதத்துக்கும் அதிகமான தமிழ் வாக்காளர்கள் பிரதான உரிமை மைய தமிழ் அரசியல் கட்சியையே ஆதரித்துவருகின்றனர் என்பது வெள்ளிடைமலை. ஏனைய 30 விகிதத்துக்குள்ளேயே மற்றைய தமிழ் கட்சிகள் மற்றும் தேசிய கட்சிகளுக்கான ஆதரவு உள்வாங்கப்படுகிறது. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது சமூகத்தின் கட்சிகளுடன் தேசியக்கட்சிகளையும் பெருமளவில் ஆதரிக்கின்றனர். ஆயினும் ஒரு தமிழ் அரசியல்வாதிக்கேனும் வாக்களிக்கும் நிலைமை இல்லையென்றே கருதப்படுகின்றது. சிங்கள மக்களைப்பொறுத்தவரையிலும் தமிழர்களுக்கோ அல்லது முஸ்லிம்களுக்கோ வாக்களிக்கும் நிலைமையோ அல்லது தேவைப்பாடோ அவர்களுக்கும் இல்லை என்றே கூறலாம். இத்தகைய நிலையில் தமிழ் தரப்பு சிங்கள, முஸ்லிம் தரப்பாரிடம் அரசியல் அதிகாரத்தை இழந்து அவர்களது அதிகாரப்போட்டியில் மாட்டி நிற்கும் பரிதாப நிலையில் உள்ளதும் கவனிக்கத்தக்கது.

கீழே ஒரு சலாகை வரைபு 2010 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் அதாவது 2011, 2018 ம் ஆண்டுகளில் இடம் பெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல், 2012 இல் இடம் பெற்ற மாகாண சபை தேர்தல், 2010, 2015 இல் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல்கள் பற்றிய ஒரு புலக்காட்சியைத் தருகிறது. கடும் நீலம் 2010 பாராளுமன்றத் தேர்தலையும், சிவப்பு நிறம் 2011 உள்ளூராட்சி மன்றத்தேர்தலையும், இளம் பச்சைநிறம் 2012 மாகாணசபைத் தேர்தலையும் ஊதா நிறம் 2015 பாராளுமன்றத்தேர்தலையும், இளநீலம் 2018 உள்ளூராட்சி மன்றத்தேர்தலையும் சுட்டிநிற்கின்றன.
நிலைக்குத்தாக முதலாவது 5 சலாகைகளைக் கொண்ட தொகுதியை எடுத்துக்கொண்டால் அது தமிழர்களின் பெருங்கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அதன் பிரதான பங்காளியான தமிழரசுக்கட்சி என்பனவற்றின் மக்கள் வாக்கைப் பெறும் செல்வாக்கை, முறையே 2010, 2011, 2012, 2015, 2018 தேர்தல்களின் பெறுபேறுகள் அடிப்படையில் சுட்டி நிற்கின்றன. அனேகமாக 100,000 மேலான வாக்குகளை தொடர்ந்து அதிகரித்துச்செல்லும் வண்ணம் இக்கட்சி பெற்றேவந்துள்ளது. புறநடையாக 2011 இல் மட்டக்களப்பில் இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஒழுங்கீனம் காரணமாக 64,000த்தை அண்மித்த வாக்கை இக்கட்சி பெற்றுள்ளது. மேலும் இக்கட்சியுடன் போட்டியிடும் வேறெந்தத் தமிழ் கட்சியும் 50,000த்தைத்தானும் தொடமுடியாத நிலையே உள்ளது. தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மாத்திரம் 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 61,000த்தை அண்மித்த வாக்கை பெற்றுள்ளது. மேலும் சிங்கள முஸ்லிம் மக்களின் ஆதரவினால் தேசிய கட்சிகளின் இரு கூட்டமைப்புக்கள் ( UPFA, UNNGG) பொதுவாக தமிழரசுக்கட்சியை விட அதிகம் வாக்குகளைப்பெறும் வல்லமையில் உள்ளன. இருந்தபோதிலும் 2018 தேர்தலில் தமிழரசுக்கட்சியை விட குறைவாகவேஇக் கூட்டமைப்புக்கள் வாக்குகளைப்பெற்றுள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.




(இலத்திரனியல் கட்புல பாவனைக்கு மாத்திரம் உகந்தது)


உண்மையில் தமிழ் மக்களின் வாக்குகள் சரியாக நெறிப்படுத்தப்படுமாயின் வாக்களிப்பில்தமிழ்த்தரப்பு நல்லபெறுபேறுகளைப் பெறும் வாய்ப்பு அதிகம் உள்ளது என்பதை இச்சட்ட வரைபு சுட்டிக்காட்டுகிறது. இருப்பினும் அதிக வாக்குகள் பெறுதல் என்பது தமிழரின் கிழக்கு அரசியல் இருப்பினை ஆக்கபூர்வமாக உறுதி செய்யாது. உதாரணமாக மட்டக்களப்பு,2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி 168,527 பெறப்பட்ட வாக்குகளுக்கூடாக பெற்றுக்கொண்ட ஆசனங்களை எடுத்துக்கொண்டால் மற்றைய கட்சிகளை விட அவை அதிகமானவை. முதலாவது இடத்தில் 82 ஆசனங்களை அக்கட்சியும்,63,196 வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 54 ஆசனங்களுடனும், மூன்றாவது இடத்தில் 61,071வாக்குகளுடனும் 53 ஆசனங்களுடனும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும், நான்காவது இடத்தில் 57,647 வாக்குகளுடனும் 50 ஆசனங்களுடனும் ஐக்கிய தேசியக் கட்சியும் உள்ளன. அதேவேளை சுயேட்சைக் குழுக்களில் போட்டியிட்டோர் 51,826 வாக்குகளுடனும் 44 ஆசனங்களுடனும் உள்ளனர். ஆதலால் பெருமளவு வாக்குகளை உள்ளூராட்சி மனறங்களில் பெறுதல் பிரதிநிதித்துவங்களை அதிகரித்து உள்ளூராட்சிமன்றங்களை தனதாக்கி ஆட்சியமைக்க உதவும் என்பதும் எப்போதும் சாத்தியமல்ல. ஆனால் பாராளுமன்றத்தேர்தலில் அது உதவும்.

மற்றும் கடந்த தேர்தல் ஒரு உண்மையையும் புலப்படுத்துகிறது. தமிழ் தரப்பில் இருந்து வேறு தமிழ் கட்சிகள், தேசிய கட்சிகளின் கூட்டமைப்புக்களுடன்அல்லது சுயேட்சைக்குழுக்களுடன் இணைந்து, கூட்டுச்சேர்ந்து தமிழ் தேசியத்தை வலியுறுத்தாத அதேவேளை சிங்களக்கட்சிகளுக்கு ஆதரவாக ஆட்சி அமைக்கவும் முடியும். இதனை 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெளிவாகப்பார்க்கலாம்.அதேவேளை அடுத்த மாகாண சபைத்தேர்தலிலும் தமிழ் வாக்குகள் பிரிக்கப்படுவதனால்அவை வேறு தரப்புக்குப்போய் அவர்களை பலப்படுத்தி தமிழ் பிரதிநிதித்துவத்தை சரித்துவிடும். இத்தகைய சூழ்நிலை, ஏற்படலாம் என்பதை 2008 மற்றும் 2011 தேர்தல் கூட்டுக்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. எனவே தமிழ் கட்சிகள் பெரும்பான்மை பலத்துடன் இருப்பதென்பதைக்காட்டிலும் அதிக பிரதிநிதித்துவத்தை தமதாக்கும் வண்ணம், சிறிய எதிர்க்குழுக்கள் வாக்குகளைச் சிதறடிக்கவிடாத தந்திரோபாயத்தையும், படிப்படியாக வாக்குவங்கியை உயர்த்தும் இராஜதந்திரத்தையும் பெரிய தமிழ் கட்சி கவனத்தில் கொள்ளவேண்டி உள்ளது.

இருந்தபோதிலும் கொள்கைகளுக்கப்பால், பொதுவாகக் தேர்தல் காலங்களில் காணப்படும் மனநிலை வாக்களிப்பில் செல்வாக்குச் செலுத்தி பெறுபெறுகளை மாற்றவல்லது. அந்தவகையில் கிழக்குத் தமிழர்களின் மனநிலை செல்வாக்குமிக்க தமிழ் கட்சியின்பால் கடுமையான விமர்சனங்களையும் அதிருப்தியையும் கொண்டதாக இருந்தபோதிலும், தமிழ் உணர்வினால் உந்தப்பட்டு, அவர்களுக்கு வாக்களிக்கும் நிலை எப்போதும் இருந்து வந்துள்ளது என்பதை கீழுள்ள சட்டவரைபு காட்டுகிறது. ஆயினும் குறிப்பிட்ட தமிழ் கட்சி மட்டில் தற்போது காணப்படும் விமர்சனங்களினதும், அதிருப்தியினதும் அளவை நோக்குகையில் அது குறிப்பிடத்தக்க வகையில் வாக்குகளை சரிக்கத்தக்கவகையில் உருப்பெறலாம் என்ற சந்தேகம் உள்ளது. அத்துடன் எதிர்மறை விமர்சனங்கள் அதிகரித்து வாக்காளர்களின் மனநிலை சார்பற்றதாக அதேவேளை கடினமுற்றதாக மாறும் அபாயமும் உள்ளது. இக்கடினமுற்ற மனநிலை கவனத்தில் கொள்ளப்பட்டு சீர்செய்யப்படவில்லை என்றால் நாளடைவில் எதிர்ப்புணர்வாக, எதிர்ப்பலையாக மாறும் அபாயம் உள்ளது. இவ் எதிர்ப்பலையே தேர்தல்களில் தமது வாக்கின் மூலம் தமது எதிர்ப்பைக்காட்டும் மனநிலைக்கு தமிழ் வாக்காளர்களை இட்டுச்செல்லலாம். அத்துடன் தற்போதுள்ள விரக்தி உணர்வை சரியாகத் திட்டமிட்டு எதிர்பலையாக மாற்றி, பிரதான தமிழ் கட்சியை எதிர்க்கும் ஏனைய சிறிய தமிழ்

கட்சிகளும் தேசிய கட்சிகளும் தமக்கு சாதகமாக்கி, வாக்களிப்பின் போக்கினை மாற்றிவிடமுடியும். இதனால் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தமிழ் தேசியம் கலந்த பிரதிநிதித்துவம் விழ்ச்சி காணும்.

தமிழ் மக்களிடையே தமிழ் கட்சிகள் கொண்டுள்ள செல்வாக்கு 2010 தொடக்கம் 2018 வரை




அத்துடன் பிரதான தமிழ் கட்சியின்பால் அதிருப்தியுறும் குழுக்கள் சுயேட்சைக்குழுக்களாக போட்டியிட்டு தமிழ் வாக்குகளைச் சிதறடித்து பிரதிநிதித்துவப் பெறுகையை பாழாக்கவும் கூடும். கிழக்குத் தேர்தல் பரப்பில் வேறு கட்சிகள், குழுக்கள் என்ற வட்டத்துக்குள் பெருமளவு அதிருப்தி வாக்குகள் குவிவதால் காத்தரமற்ற தமிழ் பிரதிநிதித்தவம் சிதறி கொள்கையற்ற, இலக்கற்ற அரசியல் குழுக்களிடையே அவை பகிரப்படும் நிலைமை இன்னும் அதிகமாகலாம். 2018 தேர்தலை எடுத்துக்கொண்டால் உதாரணத்திற்கு மட்டக்களப்பில் இத்தகைய குழுக்கள் 144, 664 வாக்குகளைப்பெற்றுள்ளன. தமிழ் பிரதேச சபைகளுக்கான இத்தேர்தலில், ஏறாவூர்பற்று, போரதீவுப்பற்று, கோறளைப்பற்று வடக்கு, மண்முனைப்பற்ற, மண்முனை தென் மேற்கு, மண்முனை தெற்கு எருவில் பற்று போன்ற பிரதேச சபைகளில் தமிழ் சுயேச்சைக்குழுக்கள் களத்தில் இறங்கி வாக்குகளை பெருமளவில் பிரித்துள்ளன. தான்வெல்லாது போனாலும் எதிரியாகக்கொள்ளப்பட்டவன் தோற்கவேண்டுமென்ற மனநிலை மேலோங்கி உள்ளதனால் தமிழ் உணர்வுகள் இரண்டாம் பட்சமாகி எதிர்ப்புணர்வு முதன்மை பெறலாம். இது தமிழ் பிரதிநிதித்துவத்தை தக்கவைப்பதில் பெரிய சவாலை தோற்றுவிக்கும் என்பது திண்ணம்.

### தமிழ் வாக்களிப்பில் உள்ள சில சவால்கள்

இத்தகைய நிலையில் கிழக்கின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை எடுத்துக்கொண்டால் 16 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழர்கள் பொதுவாக மட்டக்களப்பில் 3, அம்பாறையில்-1, திருகோணமலையில்-1 என மொத்தமாக 5 ஆசனங்களையே நேரடி வாக்களிப்பு மூலம் பெறுகின்றனர். உண்மையில்முஸ்லிம்களைவிட 48,000மக்களை அதிகமாகக்கொண்ட தமிழ் மக்கள் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைவிட குறைந்த பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையே பெறுகின்றனர். இதற்கான முக்கிய இரு காரணங்கள் உள்ளன. ஒன்று தமிழ் வாக்காளர்கள் பாராளுமன்றத்தேர்தலில் வாக்களிக்க ஆர்வம் காட்டுவதில்லை. உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 2015 பாராளுமன்றத்தேர்தலில் 127,185 வாக்குகளையே கொடுத்து 3 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளனர். ஆனால் 2018 உள்ளுராட்சிமன்றத் தேர்தலில் 168,527 வாக்குகளை அதே பிரதான தமிழ் கட்சிக்கு அளித்துள்ளனர். இதனை 2015 பாராளுமன்றத்தேர்தலில் மேற்கொண்டிருந்தால் இன்னமொரு ஆசனத்தைப்பெற்றிருக்க முடியும். தமிழ் வாக்காள்ர்களின் அசமந்தப்போக்கும் அரசியல் மயப்படாத நிலையும் இத்தகைய போக்குக்கு பிரதான காரணமாகும்.

**மேலும் 2019இல் மாகாணசபைத்தேர்தல் இடம்பெற வாய்ப்புள்ளது. 2012இல் இடம்பெற்ற மாகாணசபைத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 104,628 வாக்குகளும் (6 ஆசனங்கள்), திருகோணமலையில் 44,396 வாக்குகளும் (3 ஆசனங்கள்), அம்பாறையில்44,769 வாக்குகளும் (2 ஆசனங்கள்) பெரிய செல்வாக்குள்ள தமிழ் கட்சிக்கு அளிக்கப்பட்டதனால்கிழக்கில் 11 ஆசனங்களைப் பெறக்கூடியதாயிருந்தது. ஆனால் 2018 இல் இடம்பெற்ற உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் இதே கட்சிக்கு மட்டக்களப்பில் 168,527 அதிகரித்த வாக்குகளும், திருகோணமலையில் 32,446 வாக்குகளும், அம்பாறையில் 24,468 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.**இங்கு மனதை உறுத்தும் விடயம் என்னவெனில் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்கள் தமிழ் வாக்குச் சரிவினை எதிர்கொண்டுள்ளன. இந்நிலை இனியும் தொடருமா என்பதாகும். அப்படித்தொடருமாயின் இவ் இரு மாவட்டங்களிலும் பிரதிநிதித்துவம் நிச்சயமாகக் குறைவடையும். அது தமிழர் அரசியல் இருப்பினை அபாயத்தில் தள்ளிவிடும். அத்துடன் 2018 தேர்தலில் இரண்டாம்நிலைத் தமிழ் கட்சியாக மாகாணத் தமிழ் கட்சியொன்று மட்டக்களப்பில் 61,468 வாக்குகளைப் பெற்றுள்ளது. 2012இல் அக்கட்சி தேசியக் கட்சிகளின் தயவில் அவர்களின் கூட்டில் தேர்தலில் போட்டியிட்டமையினால் அத்தேர்தலில் அதன் வாக்குவங்கி பற்றித் தெளிவாகக் கூறமுடியாது. மேலும் 2015

பாராளுமன்றத்தேர்தலில் காணாமலும் போயிருந்தது. எனவே எதிர்வரும் தேர்தலிலும் 60,000 அதிகமான வாக்குகளைப்பெற்று தமிழ் பிரதிநிதித்துவத்தைப்பெறுமா அல்லது பெரும்பான்மையினரின் தேசியக் கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து தேர்தலைச் சந்தித்து தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்குமா என்று தற்போது கூறுவது கடினமாயுள்ளது. எது எவ்வாறாயினும் தமிழர் தரப்பு எதிர்வரும் மகாணசபைத்தேர்தலுக்கு மக்களிடம் இறங்கி வேலை செய்து அவர்களை தமிழ்தேசியத்தின்பால் வாக்களிக்கச் செய்யும் தேவையை எவரும் நிராகரிக்கமுடியாது.

இரண்டாவது காரணியாக தமிழ் வாக்காளர்கள் முஸ்லிம்கள் அல்லது சிங்களவர்கள் போலல்லாது வாக்குகளை சிதறடிக்கும் போக்கை வெளிக்காட்டுபவர்கள். முக்கியமாக தேசியக் கட்சிகளில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களுக்கு, அவர்கள் வெல்லமுடியாது என்ற சூழ்நிலையிலும் வாக்களித்து தமிழ் பிரதிநிதித்தவத்தின் எண்ணிக்கையை குறைக்கும் கைங்கரியத்தைச் செய்தலாகும். இதனை 2015 பாராளுமன்றத்தேர்தலில் மேற்கொண்டதனால் தேசிய கட்சியில் இருந்த முஸ்லிம் வேட்பாளர் நன்மையடைந்து ஒரு ஆசனத்தைப்பெற்றுக்கொண்டார். உண்மையில் தமிழ் மக்கள் தமிழ் பிரதிநிதிக்கே வாக்களித்திருந்தனர். இருந்தபோதிலும் தேர்தல் முறைமை காரணமாகவும் தேசிய கட்சியில் வாக்குக்கேட்கும் தமிழர்களுக்கு வாக்களிப்பதில் உள்ள சாதக பாதகத் தன்மையை விளங்கும் அரசியல் ஞானமற்ற நிலைமையும் இவ் இழப்பு தமிழர்களுக்கு ஏற்படக்காரணமாயிருந்தது. இந்நிலை, வெறுப்பு வாக்களிப்பின் நிமித்தம் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலிலும் சுயேச்சைக்குழுக்களுக்கும், தேசியக் கட்சிகளுக்கும், சிறு தமிழ் கட்சிகளுக்கும் தமிழ் வாக்குகள் பிரிவதனால் நிகழலாம். ஏனெனில் செல்வாக்குள்ள தமிழ் கட்சி பற்றி தமிழ் வாக்காளர்கள் கொண்டுள்ள விமர்சனங்களுக்கும், ஆதங்கக்களுக்கும் உரிய ஆற்றுப்படுத்தல் அக்கட்சியினால் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும் இத்தகைய விமர்சனங்களும் விரக்தி நிலையும் உச்சக்கட்டத்தைத் தொட்டிருப்பதை மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சிமன்றங்களின் தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன. பாரம்பரியமாக உரிமை மைய அரசியலுக்கு ஆதரவாய் இருந்துவந்த வாகரை, வாழைச்சேனை, செங்கலடி, வவுணதீவு போன்ற பிரதேசங்களின் பிரதேச சபைகளின் 2018க்கான தேர்தல் முடிவுகள் தெளிவாகச் சுட்டிநிற்கின்றன. பிரதான தமிழ் அரசில் கட்சியை எதிர்த்தவர்களுக்கு அவர்கள் தமிழ் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களா அல்லது தேசியக்கட்சிகளை ஆதரிப்பவர்களா அல்லது சுயேட்சைக்குழு எனப்போட்டியிட்டு வெற்றிபெற்றதும் மக்கள் விரும்பாத தேசிய கட்சியை ஆதரித்துவிடுவார்களா என்றெல்லாம் பார்க்காமல் தமது வாக்களிப்பைச் செய்து தமது அதிருப்தியையும், எதிர்ப்பையும் வெளிப்படுத்தி உள்ளனர் என ஒரு தரப்பு வாதிட மறுதரப்போ குடும்ப கிராம பிரதேச முன்னேற்றம், அபிவிருத்தி என்ற தேவையின் வெளிப்பாடே இது என சமாளிக்கின்றனர்.

மேலும் அதிகரித்துச்செல்லும் முஸ்லிம் சனத்தொகை ஒவ்வொரு தேர்தலிலும் கணிசமான அளவு புதிய வாக்காளர்களை வாக்காரளர் இடாப்பில் சேர்த்துவிடுகிறது. இது ஒப்பீட்டளவில் தமிழர் சிங்களவர்களைவிட மிக அதிகம். அதேவேளை இப்புதிய வாக்குகள் ஒன்றில் முஸ்லிம் கட்சிகளுக்கோ அல்லது தேசிய கட்சிகளுக்கோ போய்ச் சேருகின்றன. இதனால் கிழக்கில் ஒவ்வோரு தேர்தலிலும் இவ்விரு தரப்பும் நன்மையடைவதுடன் தமிழ் தரப்பு பிரதிநிதித்துவத்தின்மீது அழுத்தத்தை பிரயோகிக்கின்றன.

இத்தகைய அபாயம் இனிவரும் காலங்களில்அனைத்துத் தேர்தல்களிலும் தமிழர் எதிர்கொள்ளவேண்டிவரும். இதனால் தமிழ் பிரிதிநிதித்துவம் பாதிக்கப்பட அதிகம் சாத்தியமுள்ளது. தமிழ் வாக்காளர்களை அரசியல் மயப்படுத்தி அரசியல் ரிதியாக சிந்திக்க வைத்து வெல்லக்கூடிய தமிழ் கட்சிகளுக்கு அனைவரையும் வாக்களிக்கச் செய்யாது போனால் இத்தகைய விளைவுகள் அதிகம் இடம்பெற்று தமிழர் அரசியல் இருப்பு இன்னமொரு தரப்புக்கு கைமாறும் நிலையே ஏற்படும். தமிழ் மக்களை அரசியல் மயப்படுத்தும் பிரதான பொறுப்பு அனைத்துத் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் உள்ளன. அதிலும் குறிப்பாக தமிழர்களின் அரசியல் விடிவு, நிரந்தரத்தீர்வு, உரிமைகள் என்பனவற்றுக்காகப் போராடும் பிரதான தமிழ் கட்சியிடமே உள்ளதென்பது அரசியல் அறிஞர்களின் கூற்றாகும். அத்துடன்தமிழ் அரசியல்வாதிகளிடையே ஒருவரை ஒருவர் அடித்துவீழ்த்தப்பயன்படும் தந்திரோபாயம், தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை இல்லாமல் செய்வதை ஒருபோதும் தமிழ் மக்கள் அனுமதித்து ஆதரவளிக்கக்கூடாது என்பதுடன், தமிழ் சிவில் அமைப்புக்கள், சமய நிறுவனங்கள் என்பன தமிழ் மக்களை இவ்விடையங்களில் விழிப்பணர்வூட்டி.நிலைமையை புரியவைத்து, முழுவாக்குகளையும் வினத்திறனுடன் பயன்படுத்த வைக்கமுடியும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் ஆலோசனை தருகின்றனர்.

மேலும் 2015 பாராளுமன்றத் தேர்தலுடன் 2018 உள்ளூராட்சி மன்றத்தேர்தலை ஒப்பீடுசெய்கின்றபோது திருகோணமலை, அம்பாறை நிலவரங்கள் அதிர்ச்சி தருவதாய் உள்ளன. தமிழர்கள் தமிழ் கட்சிகளுக்கு வாக்களிக்கும் விகிதம் அகல பாதாளத்தை நோக்கிச் செல்கிறது. ஏனைய தேசிய கட்சிகளுக்கும், முஸ்லிம் வேட்பாளர்களுக்கும் வாக்களிக்கும் நிலை அதிகரித்துச்செல்கிறது. அத்துடன் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று மிகவேகமாக அதிகரித்தவரும் முஸ்லிம் சனத்தொகை கூடிய விரைவில் தமிழர் பெரும்பான்மை என்பதை வீழ்த்தி கிழக்கில் அரைவாசி மக்கள் தொகை என்பதை நோக்கி விரையும் வாய்ப்பு தெளிவாகவே உள்ளது. இதனை எதிர் கொள்வது அவ்வளவு சுலபமல்ல. மாறாக இக் குறிப்பிட்ட சமூகத்தின் சனத்தொகை பெருக்கத்தின் விளைவாக தமிழ் தரப்பு இழக்கும் பிரதிநிதித்துவமே மிக அதிகமாக இருக்கப்போகிறது. ஏனெனில் தமிழ் சமூகத்தின் பிரதேசங்களுடன் இணைந்து காணப்படும் தேர்தல் தொகுதிகளில் முஸ்லிம் சனத்தொகைபெருக்கம் அதிகமாக இருக்கப்போகிறது. அத்துடன் தமிழ் குடும்பங்களின் உள்ளக அல்லது வெளிப் புலம்பெயர்வும் வருடாவருடம் குறிக்கப்பட்ட வாக்குகளை இழக்கச்செய்யும் நிலையும் இளைய தலைமுறை தம்மை காத்திரமான அரசியலுக்குள் உட்படுத்தாது இன்பநாட்டங்களில் மூழ்கி அதனை இலவசமாகக் கொடுப்போருக்கு வாக்களிக்கும் நிலையையும் நகருக்கு வெளியே காணப்பட்ட தேர்தல் நிலையங்களின் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். சென்ற தேர்தலில் அனைத்து அரசியல்

கட்சிகளுமே மதுபானம், உணவு கொடுத்ததாக சில தமிழ் வாக்காளர் பிரிவுகளில் கலந்துரையாடலின் போது பெண்கள் குற்றம் சுமத்தினர். இத்தகைய வாக்குத் திருட்டுக்கள், வாக்கிழப்புக்கள் தமிழர் பிரதேசங்களில் இன்றும் மெதுவாக இடம்பெறுகிறது என்பதே கசப்பான உண்மையாகும்.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2015 பாராளுமன்றத்தேர்தலில் பிரதான தமிழ் கூட்டுக்கட்சி 127,185 (53.25%) வாக்குகளைப்பெற்றுள்ள அதேவேளை 2018 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் அக்கூட்டுக்கட்சியிலிருந்த ஒரு பிரதான தமிழ் கட்சி பிரிந்துநின்று168,527(37.71%) வாக்குகளைப்பெற்றுள்ளது. உண்மையில் கட்சிகளின் கூட்டிலிருந்து உடைபடும்போது வாக்கு எண்ணிக்கையில் சரிவு இருந்திருக்கவேண்டும். மாறாக அதிகரிப்பு நிகழ்ந்துள்ளது. இதற்கான முக்கிய காரணங்களாக மக்கள் கூறுவது,கொள்கைக்கு வாக்களித்தல் என்பதைக்காட்டிலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தெரிந்தவர்கள், உறவினர்கள்: ஊர்க்காரர்கள், வேண்டப்பட்டவர்கள்,ஒரே சமயக் கட்டமைப்பின் உறுப்பினர்கள்,ஒன்றாக செயல்படுபவர்கள் இப்படி ஏராளமான கூட்டுணர்வுக் கட்டும்,ஈர்ப்பும் சுய உணர்வில் செல்வாக்குச்செலுத்தி ஏராளமானோரை வாக்களிக்கவைத்துள்ளது என்பதாகும். மேலும்ஊர், கிராம, பிரதேச முன்னேற்றம், மேம்பாடு என்று வரும்போது உள்ளூர்க்காரரை வாக்களித்து முன்னுக்குக்கொண்டுவந்தால் அவர்கள் நற்காரியங்களை தமது கிராமத்துக்கும் பிரதேசத்திற்கும் செய்வர் என்ற எதிர்பார்ப்புமாகும். எம்முன்னே உள்ள அபாயச் சமிக்கை என்னவெனில் 2018 தேர்தல் நிலவரம் அதாவது மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்த வாக்கு விகிதம் 2019 மாகாணசபைத் தேர்தலிலும், 2020 பாராளுமன்றத் தேர்தலிலும் காணப்படுமா அல்லது வழமைபோன்று அக்கறையற்ற நிலைமை வெளிக்காட்டப்பட்டு குறைந்த வாக்களிப்பு தமிழ் பிரதிநிதித்துவத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமா என்பதாகும்.

மேலும் மேற்குறித்த தன்னிலைசார் வாக்களிப்பு ஊக்கிகளும், மனநிலையும், பிரதான தமிழ் கட்சி அல்லாத ஏனைய சிறிய கட்சிகளுக்கும் தேசியக் கட்சிகளில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களுக்கும் சுயேச்சைக்குழுக்களுக்கும் வாக்களித்து, பிரதேச சபைகளில் தனித் தமிழ் தரப்பு அதிகாரத்தைக் கைப்பற்றமுடியாத சூழ்நிலையைத் தோற்றுவிப்பதை தமிழ் வாக்காளர்கள் கவனத்தில் கொள்ளாததும், தமிழ் தரப்பின் இருப்பு, சுய அடையாளம், தமிழ் தேசியம் என்பவற்றுக்கு காலப்போக்கில் இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற முன்னெச்சரிக்கை இன்மையும், தமிழ் வாக்காளர்களிடையே மேலோங்கி உள்ளது. மேலும் பாராளுமன்றத்தேர்தலில் தமிழர் அல்லாத இன்னுமொரு சமூகம் சனத்தொகைப்பெருக்கம் காரணமாக அதிக வாக்குகளை தமது இனத்துக்குக் கொடுத்து பாராளுமன்ற ஆசனங்களைப் பெறத்தக்க அவர்களது இயலுமையினை மிக வேகமாக விரிவாக்கி வருகின்றனர். தமது வேட்பாளர்கள் தமது அடையாளமான குறிக்கப்பட்ட கட்சியினூடாக களத்தில் இறங்குகின்றனரா அல்லது இரண்டு பெரும்பான்மைத்தேசிய கட்சிகளுடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்கின்றனரா என எண்ணாமல், தமது சமூகத்தவர் என்ற அடிப்படையில் வாக்களித்து அதிக ஆசனங்களைப் பிடிப்பதற்கான மனநிலையை அவர்கள் வளர்த்துக்கொண்டுள்ளனர்.இவ் அணுகுமுறை தமிழருக்குப்பொருந்தாது. மாறாக அத்தகைய புறச் சூழலானது கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் தற்போதுள்ள தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதித்தவத்தை நாளடைவில் குறைக்கும் நிலைக்குத் தள்ளிவிடலாம். இதனை நிறுத்துவதற்கு ஒரே வழி தமிழ் மக்களை அரசியல் ரீதியாக சிந்திக்கவைத்து வாக்களிக்கச் செய்யும் வேலைத்திட்டங்களை பொறுப்புவாய்ந்தவர்கள் மேற்கொள்வதாகும்.

அதேவேளை, அபிவிருத்தி என்ற கோசத்தை வைத்து தமிழர் உரிமைகளை முதன்மைப்படுத்தாத அரசியல் செயற்பாட்டாளர்களின் அணுகுமுறையில் பாரிய ஓட்டை இருப்பதையும் சிந்திக்கத்தெரிந்த தமிழ் வாக்காளர்களும் அரசியல் ஆய்வாளர்களும் கிராம மட்டங்களில் அரசியலை கூறுபோட்டு பிரித்து விளங்கிக்கொள்ளும் சாதாரண தமிழ் பற்றாளர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். காலம் காலமாய் அரசை ஆதரிக்கும் தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கு ஆட்சிக்கு வந்த தேசிய கட்சிகள் கொடுத்துவந்த அமைச்சுப்பொறுப்புக்களே இதற்கு சான்றாக்கியுள்ளனர். வடகிழக்கில் ஒரு காத்திரமான பொருளாதார மாற்றத்தையோ அல்லது பாரிய முன்னேற்றத்தையோ ஏற்படுத்தமுடியாத சாதாரண மூன்றாம் நிலை அமைச்சுக்களே வடகிழக்குத் தமிழர்களுக்கு அதுவும் ஆழமான விசுவாசத்தை அளவுக்கதிகமாக சிங்களத் தலைமைகளுக்குக்காட்டி தமிழ் மக்களின் நியாயபூர்வமான விடுதலைப்போராட்டத்தை நசுக்குவதற்கு உதவியவர்களுக்கு வழங்கப்பட்டு வந்துள்ளன என்ற குற்றச்சாட்டை இத்தமிழ் தரப்பினர் முன்வைக்கின்றனர். இந்நாட்டின் பிரசைகள் என்ற மட்டில் செய்யவேண்டியனவற்றை ஒரு அரசு என்றவகையில் தமிழ் மக்களுக்கு செய்வதை ஆட்சியில் இருந்த அரசுகள் தவிர்த்தே வந்துள்ளன என்பது இவர்கள் வாதம். இதனைத் தட்டிக்கேட்கவோ அல்லது அவர்களுடன் உடனிருந்து கேள்வி கேட்கவோ முடியாத அதேவேளை அவர்களை ஆதரித்துக்கொண்டிருந்த தமிழ் கட்சிகளால் தமிழ் மக்களுக்கு இனியும் எதுவும் செய்துவிடமுடியாது அரசிலுள்ள கடும்கோட்பாளர்களும் அதற்கு அனுமதிக்கப்போவதில்லை. அப்படியாயின் அத்தகைய தமிழ் அரசியல் கட்சிகளும் தேசிய கட்சிகளின் தமிழ் ஏற்பாட்டாளர்களும் உண்மையில் தமிழ் மக்களுக்கு அவர்கள் எதிர்பார்க்கும் உரிமையுடனான அபிவிருத்தியையோ அல்லது இத்தகைய அரசியல்வாதிகள் கூறும் அபிவிருத்தியையோ கொண்டுவரப் போவதில்லை என்ற முடிவுக்கே பெரும்பான்மை வாக்காளத் தமிழ் மக்கள் வரவேண்டும்.

இருந்தபோதிலும் வறுமை, வேலைவாய்ப்பின்மை, தொழில் முயற்சிகளுக்கான பொருளாதார ஆதரவின்மை, வாழ்வாதார ஆதரவின்மை, பாதை, போக்குவரத்து, குடிநீர், சுகாதாரம், மருத்துவ வசதி, கல்வி போன்ற அடிப்படைவசதிகள் இன்மை அல்லது மேம்படாமை, கிராம கட்டமைப்பு மற்றும் பொதுச்சேவைகளில் ஒழுங்கீனம் போன்ற முக்கிய விடயங்களால் பாதிப்புற்று நலிந்துள்ள சமூகங்களில் தாம் இவற்றைச் செய்யப்போவதாக வாக்குறுதி அளித்து, மனதில் சலனத்தை ஏற்படுத்திவாக்குக்கேட்போரின் கருத்துக்களால் கவரப்படுவோர்அதிகரித்து வருவதாகவே இவ் ஆய்வு கண்டுள்ளது. மேலும் கிராம, சிறுநகர்புறப் பகுதிகளில் மக்களுடன் மக்களாக இணைந்து தொடர்ந்து செயற்பட்டுவரும்அபிவிருத்தி மையச் சிந்தனைகொண்ட உள்ளூர் அரசியல்வாதிகளின் பெரிய தமிழ் கட்சி பற்றிய விமர்சனங்களும் குறிப்பிடத்தக்க அளவில் மக்கள் மனங்களைச்சென்றடைந்து வாக்களிப்பில் சிறுசெல்வாக்கையேனும்

ஏற்படுத்தி இருப்பதையும் ஆய்வு புலப்படுத்துகிறது. இது மட்டில் பெரிய தமிழ் கட்சி முறையாகத்திட்டமிட்டு செயற்பட்டு தமிழ் அரசியல் இருப்பை தக்கவைக்கவேண்டும்.

மேலும்உரிமை,அபிவிருத்தி, தமிழ் தேசியம், சுயநிர்ணயம், வடகிழக்குத்தாயகம், சமஸ்டி போன்றசொற்பதங்கள், சமகாலச் சூழ்நிலை, அரசியல் போக்கு, யதார்த்தம், தேவைப்பாடு, சாத்தியக்கூறு என்ற உரைகற்களால் கவனமாக உரசப்பட்டு, விளங்கிக்கொள்ளப்பட்டு,ஈற்றில் மிகச் சாத்தியமானவைகளைத் தொகுத்து அரசியற்கொள்கையாக மக்களுக்கு மீள்வாசிப்பு செய்யவேண்டிய பாரிய பொறுப்பை செல்வாக்குள்ள பெரிய கட்சியும், அதனையே தமது கொள்கையாகக் கொள்ளும் அதேவேளைபெரிய கட்சியை எதிர்க்கும் ஏனைய தமிழ் கட்சிகளும் மறுக்கமுடியாதவகையில் கொண்டுள்ளன. இவ்விடயம் 2010ம் ஆண்டிலிருந்து தமிழ் அரசில் ஆய்வாளர்களாலும், விமர்சகர்களாலும் தமிழ் கற்றோர் சமூகத்தாலும், இனப்பற்றாளர்கள் சமூகத்தாலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. எனவே, ஆயுதப்போராட்டக்காலம், மற்றும் அதற்கு முன்னான காலங்களில் முன்வைக்கப்பட்ட கோசங்களை தொடர்ந்து தமது கொள்கைப்பிரகடனமாக்கி அரசியல் செய்வதுடன் இடையிடையே அவற்றுக்கு எதிரான கருத்துக்களையும் ஒரே கூரையின்கீழ் அமர்ந்திருந்து தெரிவித்து தமிழ் மக்களை குழப்பமடையச்செய்வது காலத்தின் தேவையுடன் முரண்படுவதாகவே அமையும். அத்துடன் முறையான பகுப்பாய்வின்றி, கருத்தாடலின்றி தமது அரசியல் இருப்புக்காக, தமிழ் மக்களின் நியாயபூர்வ உரிமைகளுக்கான கோரலையும், அரசியல் தீர்வையும், சுய மொழி, பண்பாட்டு, பாரம்பரிய, மரபுரிமைசார் வாழ்விட அடையாளம், தமிழரின் இருப்புக்கான பூர்வீக ஆதாரம் போன்றவற்றை பேணும் தேவையை கொச்சைப்படுத்தி வெறும் அபிவிருத்தி என்ற கோசத்தை முன்னெடுப்பதும் ஒரு இனத்தின் இருப்பினை இல்லாமற்செய்யும் அம்சங்கள் என ஆய்வில் பங்கேற்ற கல்விப் புலமைசார் தமிழ் தொழிற்சமூகங்களும், கல்வியலாளர்களும், சமூக அமைப்புக்களைச்சேர்ந்த நடுநிலை வகிப்போரும், புத்திஜீவிகளும் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் இங்கு குறிப்பிடப்பட்ட அடிப்படை உரிமைகள், சமூகப்பொருளாதார கலாசார, மொழிசார் வாழ்விட உரிமைகளுக்காக போராடும் எந்த ஒரு சமூகமும் முதலில் இழப்பது, அடிப்படை வசதிகள், பொதுச்சேவைகள்,தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் உள்வாங்கப்படல், சமூகநலத்திட்டங்களில் உள்வாங்கப்படல் போன்ற கௌரவமான அமைதிமிக்க வாழ்வுக்குத்தேவையான அடிப்படை அம்சங்களாகும். அத்துடன் கட்டமைப்பு ரீதியான பாரபட்சம், ஒதுக்கல், புறக்கணிப்பு போன்றன இத்தகைய நெருக்குதலுக்குள்ளாகும் இனச்சமூகத்தை அடக்கி ஒடுக்கப் பயன்படுத்தப்படும் சமூகக் கருவிகளாகும். இவையே ஒரு இனச்சமூகத்தை தம் கட்டுக்குள் கொண்டுவரவும் அத்தகைய சமூகத்துக்காக அமைதிவழியில் போராடும் அவர்கள் பிரதிநிதிகளிடமிருந்து அம்மக்களை பிரிக்கும் அல்லது விலக்கி வைத்திருக்கும் அணுகுமுறையும் ஆகும். மேலும் மிகமோசமான சமூகப் பொருளாதார நெருக்கடியில் சிக்கவைக்கப்பட்டிருக்கும் அம்மக்களிடையே தம்வேலைத்திட்டத்தை முன்னெடுக்க ஒத்துழைப்போரை இனங்கண்டு, அவர்களை மிக இலாவகமாகப் பயன்படுத்தி அபிவிருத்தி என்ற மாயையை ஏற்படுத்தி அதனுள் உரிமைகோரும் சமூகத்தை கையேந்து சமூகமாகத் தொடர்ந்து வைத்திருக்கும் கலையை உரிமை மறுக்கும் பெரும்பான்மைச்சமூகத் தலைவர்கள் கைக்கொள்வர்.இதுவே உலகெங்கும் வியாபித்துள்ள யதார்த்தமாகும்.

இன்று கிழக்கில் வலுப்பெற்றுவரும் அபிவிருத்தி என்ற அலை அத்தகைய அடக்குமுறை அரசியலின்பாற்பட்டதே. இதனை ஒரு சில சிறிய தமிழ் கட்சிகளும் தேசியக்கட்சிகளில் செயற்படும் தமிழ் ஏற்பாட்டாளர்களும் செய்கின்றனர். இவர்கள் எல்லைக்கிராமங்களிலும் போரினால் சிதைந்த பிரதேசங்களில் வாழும் அடிப்படை வசதிகளற்றோரையும், பொருளாதார நிலையில் கடைக்கோட்டில் தத்தழிக்கும் மக்களையும், உரிமை அரசியலுடன் கைகோர்க்க மறுக்கும் எதிர்ப்பாளர்களையும்,அவர்கள் பிரதேச மக்களையும்,அணிதிரட்ட அவர்களது நியாயமான கோபங்களையும் விமர்சனங்களையும் தமக்குச் சாதகமாகப்பயன்படுத்துகின்றனர். இத்தகைய சூழ்நிலையின் தோற்றுவாய் உரிமை மைய அரசியலை முன்னெடுக்கும் பிரதான தமிழ் கட்சி வறுமையில் வாடுவோரினதும், யுத்தத்தால் அதிகம் பாதிப்புற்றோரினதும்,தொழிலற்றோரினதும்,அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்விக்கும் பொறுப்பை அரசு செய்யாததை கண்டும் காணாமல் விட்டுக்கொண்டு, தமது கட்சி அரசியல் செயற்பாடுகளிலும், அவர்களது உள்ளக முரண்பாடுகளிலும், முழுக்கவனம் செலுத்திவருவதே என தமிழ் வாக்காளர்களும் பெரிய தமிழ் அரசியல்கட்சியின் ஆதரவாளர்களும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

விமர்சனங்கள் எதுவாக இருந்தபோதிலும் “குடும்ப, கிராமிய பொருளாதார முன்னேற்றத்துக்கும், அடிப்படை வசதிகள் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு, தொழில் முயற்சிகள் என்பனவற்றுக்கும் எதுவுமே செய்யாமல் அரசியல் தீர்வுக்காக மாத்திரம் உழைத்தல்” என்ற மகுடவாக்கியத்தின் கீழ் இனிச் செயல்படமுடியாது என்ற செய்தியை செல்வாக்குள்ள தமிழ் கட்சியின் காதுக்குள் ஓங்கி ஒலித்ததாகவும் பொருள்கொள்ளப்படுகிறது.

மற்றும் பாராளுமன்றத்துக்கான தேர்தல்களில், தமிழ் வாக்காளர்கள் தமிழர்களிடையே செல்வாக்குள்ள பெரிய தமிழ் கட்சியையோ அல்லது கட்சிகளின் கூட்டமைப்பினையோ அதிகம் ஆதரிக்கின்றனர். அவர்களே அரசை எதிர்த்து நின்று பாராளுமன்றத்தில் தமிழர் அபிலாசைகளுக்காக குரல்கொடுக்கவல்லவர்கள் என்று நம்புகின்றனர். இதனையே 2010 மற்றும் 2015 பாராளுமன்றத்துக்கான தேர்தல்களில் தமிழ் வாக்காளர்கள் வெளிப்படுத்தியும் உள்ளனர். முஸ்லிம் சமூகத்துடன் ஒப்பிடுகையில் தமிழ் வாக்காளர்கள் உரிமை மைய தமிழ் கட்சியையோ அல்லது அவர்கள் கூட்டமைப்பையோ தொடர்சியாக ஆதரித்துவரும் போக்கை எப்போதும் காட்டுவதுடன், அபிவிருத்தி என்ற மாயையில் விழாமலும் இருந்துவந்துள்ளனர். இதனையே மாகாண சபைக்கான மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களிலும் 2015வரை காட்டியுள்ளனர். ஆனால் நல்லாட்சி அரசின் நேர்மையீனம், தமிழ் மக்களின் உரிமை, அபிவிருத்தி மட்டில் காட்டும் மெத்தனப்போக்கு, சிங்கள பௌத்த கடும்கோட்பாட்டாளர்களுக்கு அடிபணிந்து போதல், உதட்டளவு வாக்குறுதிகள் இப்படி ஏராளமான எதிர்மறைப்பண்புகளை நல்லாட்சி அரசில் உள்ள கட்சிகளும்

தலைவர்களும் தொடர்ந்து வெளிப்படுத்தி வருவதால்,அவர்களுக்கூடாக தீர்வைப்பெறலாம் என்று பிரச்சாரம் மேற்கோள்ளும் தமிழ் தரப்பால் அவர்கள் கூறுவதுபோன்ற மாற்றத்தைக் கொண்டுவரமுடியாது என தமிழ் மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர். இதன்விழைவாக அரசுக்கு மறைமுகமாக ஆதரவளிப்பதாக தமிழ் மக்களால் பரவலாக நம்பப்படும் செல்வாக்கு மிக்க தமிழ் கட்சி, அதே தமிழ் மக்களால் கடுமையான விமர்சனத்துக்கும் உள்ளாக்கப் பட்டுள்ளதாகவே ஆய்வின் பெறுபேறுகள் காட்டுகின்றன. இதனை சாதகமாக ஏனைய தமிழ் கட்சிகள் பயன்படுத்த முயல்வதும், அது அவ்வளவு சுலபமானதாக அவர்களுக்கு இல்லாமல் இருப்பதும்,மக்கள் கருத்துக்கணிப்பில் வெளிப்பட்டு நிற்கின்றது.

மேலும் கிழக்குத் தமிழ் அரசியலில் தமிழ் கட்சிகள் அதிலும் குறிப்பாக செல்வாக்கு கொண்ட கட்சிகளுக்கு 2012 மாகாண சபைத்தேர்தலில் தமிழ் மக்கள் 11 ஆசனங்களைப் பெற்றக்கொடுத்தபோதும் 7 ஆசனங்களைக்கொண்ட முஸ்லிம் கட்சியுடன் இணைந்து தாம் ஆட்சி அமைக்காது முஸ்லிம் கட்சி ஆட்சியமைக்க வழிசெய்ததும் தமிழர்களுக்குச் சேரவேண்டிய அபிவிருத்தி நிதி தமிழர் பிரதேசங்களை எட்டியும் பார்க்காததும், வேலைவாய்ப்புக்கள் தமிழர் அல்லாதவர்களுக்கு தொடர்ந்து சென்றதும் பாரிய அதிருப்தியையும், விமர்சனத்தையும் கிழக்குத் தமிழ் வாக்காளரிடையே தோற்றுவித்திருந்தது. இத்தகைய எதிர்மறை அகபுறச்சூழலைப் பயன்படுத்திக் கொண்டு தேசிய கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுடன் இணங்கிச் செயற்படும் சில தமிழ் கட்சிகளும், உரிமை மையமே எமது அரசியல் அணுகுமுறை என்ற சிங்கள எதிர்ப்புவாத கடும்போக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் வாக்காளர்களைப்பிரித்து அரசியல் செய்யும் போக்கு ஒட்டு மொத்தத்தில் தமிழரின் இருப்பினை கேள்விக்குறியாக்குவதுடன் செயல்படுநிலையற்ற பலவீனமான பிரதிநிதித்துவத்தை பிரதேச சபை, மாகாண சபை மற்றம் பாராளுமன்றத்தில் ஏற்படுத்தவும் செய்கிறது. இன்று பொறுப்புவாய்ந்த தமிழ் வாக்காளர்கள் கூறுவதுபோன்று காழ்ப்புணர்வு அரசியலும், தன்முனைப்புவாத அணுகுமுறையும், தமிழர்களையே தமிழர்கள் பிரிந்துநின்று சேறுபூசி வாக்குகளைப் பிரித்து தமிழ் பிரதிநிதித்துவத்தை தமக்குரியதாக்கும் மனநிலையும் தமிழர் வாழ்வில் அவர்கள் எதிர்பார்க்கும் விடிவின் முதல்படியைத் தானும் தாண்ட உதவப்போவதில்லை.

இதனையே 2018 உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. ஒருபிரதேச சபையைத்தானும் பெரும்பான்மையுடன் பிடித்து ஆட்சி அமைக்கமுடியாத துயரநிலையை தமிழ் வாக்காளர்களும், அனைத்துத் தமிழ் அரசியல் வாதிகளும் பிரிந்து நின்று செயல்பட்டு ஏற்படுத்தியுள்ளனர். இதவே அடுத்துவரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலும் நிகழப்பெரும் சாத்தியமுள்ளது. 37 அங்கத்துவம் உள்ள கிழக்கமாகாணசபைக்கான ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள 19 ஆசனங்கள் தேவையாக உள்ளது. உண்மையில் எந்தத் தரப்பாரும் அதனை தனியாகப்பெறமுடியாது. இன்னமொரு பெரும்பான்மைபெறும் கட்சியுடனோ அல்லது உதிரியாகத் தேவையான ஆசனங்களைக்கொண்டுள்ள கட்சிகளையோ அல்லது குழுக்களையோ நாடும் தேவை தவிர்க்கமுடியாதது. முஸ்லிம் சமூகத்தைப்பொறுத்தமட்டில் அவர்கள் கூறுவதுபோன்று தேசிய பெரும்பான்மைக்கட்சிகளுடன் கூட்டுச்சேர்வது அவ்வளவு பிரச்சனையாக இருக்கப்போவதில்லை. ஆதலால் ஆட்சியமைக்கும் கட்சிகளின் குழுவில் தாம் செல்வாக்குமிக்க அதேவேளை அதிகாரத்தைாக்கோரும் தரப்பாகவே தாம் தொடர்ந்தும் இருப்பர் என்ற அவர்கள் வாதத்தில் ஓரளவு உண்மையுள்ளது. சில சிறிய தமிழ் கட்சிகள்கூட முஸ்லிம்களின் அணுகுமுறையைப்பின்பற்றி தேசிய கட்சிகளுடன் கூட்டுச்சேரலாம். அவ்வாறாயின் தமிழ் தரப்பிலிருந்து தேசியக் கட்சிகளுடன் கூட்டுச்சேர்வோரும், தேசியக் கட்சிகளில் இணைந்து வாக்குக்கேட்கும் தமிழர்களும் தற்போதுள்ள சூழ்நிலையில் தமிழ் வாக்குகளைப் பிரித்து யாரும் அதிகம் நாடாத பிரதிநிதித்துவத்தை தமிழர் பெறும் சூழ்நிலையை ஏற்படுத்தலாம்.

அத்துடன் தேசியக்கட்சிகளில் இணையும் போது அதில் எப்போதும் அங்கமாயிருக்கும் முஸ்லிம் கட்சிகளின் செல்வாக்குடன் மோத முடியாது. சிங்கள தேசியக்கட்சிகள் அதற்கு ஆதரவளிக்கப்போவதும் இல்லை. அவ்வாறெனின் முஸ்லிம்களிடமிருந்து பாதுகாப்பை நாம் விட்டுக்கொடுக்காமல் உறுதிப்படுத்துவோம் என சில தமிழ்கட்சிகள் வாதிடுவது யதார்த்தத்துக்குப்புறம்பானதே. அதேபோன்று முஸ்லிம் கட்சிகளுடன் மோதாமல் இணைந்துநின்று தமிழர் தமது உரிமைகளையும் அதிகாரத்தையும் பெறலாம் என்றால் அதவும் சாத்தியமில்லை. ஏனெனில் எந்த முஸ்லிம் கட்சியும் தேசியக்கட்சிகளை பகைத்துக்கொண்டு அனுபவிக்கும் சலுகைளை உதறிக்கொண்டு தமிழ் தரப்புடன் கூட்டுச்சேரப்போவதும் இல்லை. அவ்வாறு கூட்டுச்சேர்ந்தாலும் 2012இல் அமைந்த மாகாண சபை ஆட்சிபோன்று தமிழ் தரப்பு முஸ்லிம்களிடம் தம்மை அடகு வைக்கும் நிலையே தோன்றும். எனவே தமிழ் தரப்புக்கள் தமக்குள் பிரிந்து நின்று அரசியல் செய்தால் அது தமிழ் மக்களுக்கு விமோசனம் தரப்போவதில்லை என்பது திண்ணம்.

மேலும் தமிழர் அரசியல் வாழ்வில், தமிழர் என்ற இனப்பற்றும், தமிழ் தேசியம் என்பதும், தாம் வாழும் பிரதேச தாயக மண் தமக்குரியதே என்பதும் அழிக்கமுடியாத, அசைக்கமுடியாத பிணைப்பை, இணைவை, இக்கொள்கைகளை ஏற்று தமிழ் மக்களை வழிநடத்த வந்த தலைமைகள் மட்டிலும், தமிழ் மக்களுக்கிடையில் ஏற்படுத்தியிருந்தது. இவ் உணர்வுபூர்வ இணைவே, பாரம்பரியமாக ஒருகுறிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு தமது விமர்சனங்களுக்கப்பால் தொடர்ச்சியான ஆதரவைக் கொடுத்துவரத் தமிழ் மக்களைத் தூண்டியது. ஆயினும் தமது உயிரிலும் மேலாக மதித்தவை தம்கண்முன்னே பறிக்கப்பட்டு வருவதும், தாம் தொடர்ந்து கொடிய துயரவாழ்வில் முன்னேற்றமின்றி வாழ்வதும், இதுமட்டில் தமிழ் தலைமைகள் அசமந்தப்போக்கில் சுயநலமாக தமது வட்டத்துக்குள் செயல்படுவதும், தமிழ் மக்களை அரசியலிலிருந்து அன்னியப்படுத்தி வெறும் பார்வையாளர்களாக மாற்றிவிடுமோ என்ற பயம், தமிழர் அரசியல் வாழ்வில் அக்கறைகொண்ட அனைத்துத் தரப்பாரிடம்ும் மேலோங்கி உள்ளது. இருந்தபோதிலும் பிரதான தமிழ் அரசியல் கட்சிக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் அன்னியமாதல் அவ்வளவு இலகுவாக, உடனடியாக நிகழப்போவதில்லை. நிகழவும் கூடாது. ஆயினும் படிப்படியாக கரைந்துசெல்லும் மண்திட்டுப்போன்று, தமிழ்அரசியல் இருப்பும், எதிர்காலமும் ஏனைய இனத்தவரின் வினைத்திறன்மிகு அணுகுமுறையால் கால ஓட்டத்தில் இல்லாமலே போகலாம்.

அத்துடன் அபிவிருத்தி என்ற கோசத்தை வைத்துதுயரில் வாடும் அப்பாவித் தமிழ் வாக்காளர்களைப் பகடைக்காயாக்கி அரசியல் செய்யும் தமிழ் கட்சிகள் தம்மையும் சுய விமர்சனத்துக்கு உட்படுத்திப்பார்க்கவேண்டும் என தமிழ் மக்களின் அரசியல் இருப்பில் அக்கறைகொண்டோர் தெரிவித்துள்ளனர். யாரை வைத்துக்கொண்டு கிழக்கில் அபிவிருத்தியை மேற்கொள்ளமுடியும்? தனித்து நின்று அபிவிருத்தியை மேற்கொள்ளும் கொள்தகுதிறன், அபிவிருத்தியை முதன்மைப்படுத்துவோரிடம் உள்ளதா? எந்தத் தேசியக் கட்சியின் செல்வாக்கில் வளங்களைப்பெற்று இதனைச் செய்யமுடியும்? தமது வழமையான சிங்கள பௌத்த விரிவாக்கவேலைத்திட்டத்தை, கட்சி அரசியலுக்கப்பால் செவ்வனே செயல்படுத்தும் எந்த சிங்களக்கட்சி,தமிழர் அபிவிருத்திக்கு உதவப்போகின்றனர்? அதற்கு தமிழர் செலுத்தவேண்டிய விலை, தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்து, பெரும்பான்மைத்தேசியத்துக்குள் உள்வாங்கப்படுவதா? இப்படி ஏராளம் வினாக்கள்எழுப்பப்படாமலும் விடையிறுக்கப்படாமலும் அடங்கிப்போயுள்ளன. தமிழரின் இருப்பு, அடையாளம், தனித்துவம், பண்பாடு வீசும் பூர்வீக நிலம், மொழி என்பனவற்றைப்பற்றிக் கவலை கொள்ளாது, உரிமைகளை விட்டுக்கொடுத்துக்கொண்டு அபிவிருத்திசெய்யும் அரசியல் சாணக்கியம் பற்றி, அபிவிருத்திக்கோசத்தை மையப்படுத்தி அரசியல் செய்யும் கட்சிகள் தமிழ் வாக்காளர்களுக்கு கொள்கைப்பிரகடனம் செய்யவேண்டும். தெளிவு படுத்தவேண்டும். அது காலத்தின் தேவை என்றே அபிவிருத்தியை உரிமைவாத அரசியல் செயல்பாட்டின்கீழ்கொண்டு வந்து, மக்களின் அடிப்படைப்பொருளாதாரத்தை மீட்கவேண்டுமென வாதிடுவோர் கிழக்கில் தெரிவிக்கின்றனர்.

இவையே இன்று அனைத்துத் தமிழர் மனதிலும் தமிழரின் இருப்பு, அடையாளம், பிரதிநிதித்துவம் மட்டில் பாரிய உணர்வலைகளை ஏற்படுத்தி உள்ளன. அண்மைக்கால தமிழ் மக்களின் இலக்கற்ற வாக்குப் பதிவு எதை உணர்த்தி நிற்கிறது, எதனை தமிழ் அரசியல்வாதிகளுக்கும் வாக்காளர்களுக்கும் சொல்ல முனைகிறது என்பது, இங்கு கவனிக்கப்படவேண்டிய முக்கிய விடயங்களாகும். 2018 தேர்தலைப் பொறுத்தவரையில் புதிய தேர்தல் முறைமையில் நடத்தப்பட்டதென்பது என்னவோ உண்மைதான். அம்முறைமையில் சிறிய கட்சிகளுக்கும் சிறியதொரு அங்கிகாரம் மக்களிடத்தில் கிடைத்ததும் உண்மைதான். அவ் அங்கீகாரம் வெறுப்பு விரத்தியால் வந்ததா? அல்லது உண்மையான கொள்கை ஏற்பினால் நடந்ததா? இத்தகைய விடயங்களை உள்ளடக்கிய கடந்தகாலக் கற்றல் என்ன என்பதை தெளிவாக விளங்கிக்கொண்டால் மாத்திரமே அடுத்துவரும் தேர்தலுக்கு ஆக்கபூர்வமான வகையில் முகம் கொடுத்து அதிக தமிழ் ஆசனங்களை தமிழர் தரப்பு பெற்று தமிழர்களை எவரும் நிராகரிக்கமுடியாத அரசியல் பங்காளிகளாகக் கருதச்செய்ய முடியும் என்பது நிதர்சனம்.

## பகுதி-2:
## வாக்களிப்பில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகள்

மூவின மக்களும் தனித்தும் கலந்தும் வாழும் கிழக்கு மாகாணத்தில் 39.79 விகிதம் தமிழர்களும் 36.72 விகிதம் முஸ்லிம்களும் 23.15 விகிதம் சிங்கள மக்களும், 0.34விகிதம் பறங்கியரும் வாழ்கின்ற சூழலில் ஒவ்வொரு இனக்குழுமத்தின்மீதும் செல்வாக்குச்செலுத்தும் காரணிகள் பல உள்ளன. அந்தவகையில் தமிழ் வாக்காளர் சமூகத்தின் மீதும்அழத்தம் கொடுத்து வாக்களிக்கவோ அல்லது வாக்களிக்காது அலட்சியம் செய்யவோ செய்யும் அகபுறக்காரணிகள் ஏராளம். இத்தகைய காரணிகளை இவ் ஆய்விலே கலந்து கொண்டோர் மிகத்தெளிவாக இனங்கண்டு வெளிப்படுத்தி உள்ளனர். அவற்றை உரியவர்கள் ஆளமாக உற்றுநோக்கி, அதன்மூலம் கிடைக்கும் அக ஒளியில் அவ் அழுத்தங்களை இல்லாமல் செய்யும் அரசியல் சமூகச்செயற்பாடுகளை முன்னெடுக்கும் தேவை உள்ளது.

1. **முஸ்லிம் எதிர் தமிழர் எனும் காரணி:** கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் வாழ்வில் மிகவும் நெருங்கிய சமூகம் முஸ்லிம் சமூகமாகும். முன்னைய காலங்களில் ஆயுதப்போராட்டம் வலுப்பெறுமுன் மறைந்த அஸ்ரப்போன்றவர்களை தமிழ் அரசியலே உருவாக்கி இருந்தது. ஆயினும் பின்னாட்களில் பல்வேறு காரணிகளால் தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் இரு துருவங்களாக மாறிவிட்டன. இன்று"பெரும்பான்மையான கிழக்குத்தமிழ் மக்கள் முஸ்லிம்களிடமிருந்து தமது நிலபுலத்தையும், தொழில் துறைகளையும், வளங்களையும், எல்லைக்கிராமங்கள், பிரதேசங்களையும் பாதுகாத்துக்கொள்ள விரும்புகின்றனர்" என ஏகோபித்த குரலில் ஆய்விலே கலந்து கொண்டோர் மிகத்தெளிவாகக் கூறியுள்ளனர். முஸ்லிம்களுடன் இணைந்து அரசியலில் பயணிப்பது பிரிந்து பயணிப்பதைக் காட்டிலும் அபாயமானது. இதனையேவரலாறு காட்டிநிற்கின்றது. தமிழ் மக்களின் நியாயபூர்வ கோரிக்கைகளையும் அதற்கான போராட்டத்தையும் சிங்கள பௌத்த தரப்பினர் பயங்கரவாதப் பிரச்சனையாகப் பறைசாற்றி இராணுவ ரீதியாக நசுக்க முற்பட்டவேளை தமது பக்க நியாயங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு முஸ்லிம் தரப்பு அரசுக்கு உடந்தையாக இருந்து செயல் பட்டது என்ற குற்றச்சாட்டையும் பதிவு செய்துள்ளனர். 2012இன் பின்னான இணைந்த மாகாணசபைப் பயணம்கூட தமிழ் மக்களுக்கு அநீதியே இளைக்கப்பட்டதென்றும் அழுத்தமாகக் கூறியுள்ளனர்.

   மேலும் முஸ்லிம் அரசியல்வாதிகள் இதமாகப்பேசி சில உதவிகளைச்செய்து தமது இலக்குகளை அடைய முயல்கின்றனர். இயலாதபோது கொழும்பு மைய அதிகாரத்தையும் செல்வாக்கையம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்தி தமது காரியங்களை சாதித்துக்கொள்கின்றனர். இவர்களுடன் மோதிக்கொள்ளாத, இவர்கள் சார்ந்த சமூகத்துடன் முரண்படாத அணுகுமுறையில், தமிழர்கள் தமது விடயங்களை திட்டமிட்டு செயல்படுத்தி தமது வளங்களையும் எல்லைகளையும், நிலபுலங்களையும், தொழில் துறையையும் பாதுகாத்துக்கொள்ளும் சாணக்கியம் அவசியமென மக்கள் அழுத்தமாகக் கூறியுள்ளனர்.

தற்போதுள்ள தமிழ் அரசியல் கட்சிகளில் இரு சாரார் இவ்விடையத்தில் இருவகை கருத்தேற்றத்துடன் தமிழ் மக்களை அணிதிரட்ட முயல்கின்றனர். ஒருசாரார் முஸ்லிம் என்ற பயப்பிராந்தியை தமிழ் மக்களிடையே ஏற்படுத்தி தமது அரசியலை செய்யவிளைகின்றனர் எனவும் இவர்கள் சிங்களத் தலைமைகளுடன் இணங்கிப்போகும் போக்கை கடைப்பிடிப்பவர்கள் எனவும், தேசிய கட்சிகளின் தலைவர்கள் தலையிட்டால் அமைதியாகி விடுவர் எனவும் ஆய்வில் கலந்தகொண்ட ஒரு தரப்பு தமது விமர்சனங்களை வெளியிட்டுள்ளது. இன்னொரு தரப்போ அதிரடி அரசியல் செய்யும் அத்தகைய தமிழ் தரப்பே இப்போதைய நிலையில் தமிழ் மக்களுக்குத்தேவை என வாதிடுகின்றனர். இவர்கள் வாழ்விடமும் இவர்களது முன்னைய அனுபவங்களும் இத்தகைய நிலைப்பாட்டின் பின்புலமாக உள்ளதை அவதானிக்கவும் முடிந்தது.

இருந்தபோதிலும் ஆய்வுக்கண்ணோக்கில் பார்க்கும் போது, இன மத உணர்வுகளை அரசியல் பயணத்தின் வாகனமாக நம்பினால் தற்போதுள்ள நிலையை அது மோசமாக்கும். தமிழ், முஸ்லிங்கள் கலந்து செறிந்து வாழம் பிரதேசங்களில் பதட்டத்தையும் அமைதியற்ற அதேவேளை பாதுகாப்பற்ற சூழ்நிலையையம் தமிழ் மக்களுக்கு உண்டுபண்ணும். எனவே முஸ்லிம் எதிர்ப்பு வாதத் தமிழ் அரசியல் ஆபத்தானது என்பது கண்கூடு. தமிழ் மக்களை மேலும் பாரிய நெருக்கடிக்கு இட்டுச்செல்லும். இருந்தபோதிலும் “நாம் தமிழருக்கு வாக்களிக்காது விட்டால் முஸ்லிம்கள் வந்துவிடுவர்” என்ற கோசம் ஓரளவேனும் தமிழ் வாக்காளர்களை வாக்களிக்கத்தூண்டுகிறது என்பதை மறுப்பதற்கில்லை. இவ்விடயத்தில் தமிழ் வாக்காளர்கள் தெளிவாகவே முஸ்லிம் எதிர்ப்புவாதத்தை ஆதரிப்பதாக ஆய்வில் கலந்துகொண்ட பெரும்பான்மையானோர் கருத்தைப்பதிவு செய்துள்ளனர்.

மறுபுறத்தில் முஸ்லிம்களுடன் இணங்கி, சேர்ந்து அரசியல் செய்தல் வரலாற்றுத்தேவை என வாதிடும் தமிழ் அரசியல் தரப்பும் உள்ளது. இத்தரப்பு கூறுவதை ஆய்விலே கலந்து கொண்டோர் கொள்கை அடிப்படையிலேயே ஏற்றுக்கொள்ளுமாப் போலவும் நடைமுறையில் அது வேலைக்கு ஆகாது எனவும் தமது கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் கலந்துரையாடல்களில் கலந்துகொண்ட கற்றோர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்களுடன் இணங்கி, சேர்ந்து அரசியல் செய்வதாயின் தமிழ் அரசியல்வாதிகள் காத்திரமான சாணக்கியத்துடனும், விவேகத்துடனும், சிறந்த ஆளுமை தலைமைத்துவத்துடனும் செயல்படக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். அத்தகைய குணாதிசயங்கள் எம்மிடையே இல்லை. அத்தகையவர்கள் உருவாக்கப் படவுமில்லை, உருவாக இடம் அளிக்கப்படவுமில்லை என தமது கடுமையான வாதத்தை முன்வைத்துள்ளதுடன், தமது வாதத்துக்கு உதவியாக ஏராளம் சம்பவங்களையும் கடந்த கிழக்கு மாகாணசபை ஆட்சிக்காலத்திலிருந்து சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொதுவாக ஆய்வுக்கண்ணோக்கில் நோக்கின் முஸ்லிம்களுடன் இணைந்தும் இணையாத, சேர்ந்தும் சேராத ஒருவகை அணுகுமுறையே தற்போது தேவை எனக் கூறும் தமிழ் மக்கள் பக்கமே சாய்வது சாலச் சிறந்தது என்பது புலனாகிறது. எதிரியுமல்லாத நட்புமல்லாத ஒருவகை “இருநிலைப் பாங்கை”(Interdependency) இப்போதைய சூழ்நிலை கோரி நிற்கிறது. இவ் அணுகுமுறையில் தமிழ் தரப்பு “தோற்றுவிட்டோம் அல்லது முஸ்லிம்களிடம் பறிகொடுத்து வருகிறோம்” என்ற மனநிலைக்கு வரமாட்டார்கள்.

ஈற்றில், இன்றுள்ள யதார்த்தமானது அடுத்துவரும் தேர்தலில் வாக்குளை அறுவடைசெய்ய முஸ்லிம் என்ற காரணியைப் பயன்படுத்தவே அதிகம் சாத்தியமுள்ளது. முஸ்லிம்களுடன் இணைந்து பயணித்தல் என்ற கோசத்தை தமிழ் வாக்காளர்கள் கேட்கவிரும்பவில்லை என்றே நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்தரப்பட்டவர்கள் பெருமளவில் கருத்தை முன்வைத்துள்ளனர்.

மேலும் தேசிய கட்சிகளில் இணைந்து தமிழ் மக்களிடம் வாக்குக்கேட்கும் தமிழ் வேட்பாளர்களும் கிழக்கில் தமிழர்களின் அரசியல் இருப்புக்கு குந்தகம் விளைவித்து வருவதையும் அனேகமான தொழில் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். 2015இல் இடம்பெற்ற பாராளுமன்றத்தேர்தலில் தேசிய கட்சியில் போட்டியிட்ட இரண்டாம் நிலை தமிழ் வேடபாளர் தமிழ் வாக்குகளை தனது கட்சிக்குப் பெற்றுக்கொடுத்து ஈற்றில் தமிழர் அல்லாத ஒருவர் மட்டக்களப்பில் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகும் நிலையை ஏற்படுத்தி இருந்தார். தமிழ் மக்களிடம் வாக்குக்கேட்கும் உபாயமாக அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்ற ஆயுதத்தையே அவர் பயன்படுத்தியிருந்தார் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

2. **கிராம, பிரதேச அபிவிருத்தி என்ற கோசமும், தொழில் வாய்ப்பு என்ற வாக்குறுதியும்** : 2009க்கப் பின்னான தமிழர்களின் வாழ்வு “சிதைந்துபோன தமது குடும்ப, கிராமிய பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பி கௌரவமாக வாழ்வதை மையப்படுத்தியது” என்பதே தொடர்ச்சியாக தமிழ் மக்களின் பிரச்சனைகள் மட்டில் கண்ணோக்கும் அனைவரினதும் கருத்தாகும். ஆயுதப்போராட்டத்துக்கு முன்னான ஜனநாயகவழிப் போராட்டக்காலத்தில் மக்கள் தற்போதுள்ள கொடிய துயர வாழ்வைச் சுமக்கவில்லை. அடிப்படைப்பொருளாதாரத்தை அனைவரும் கொண்டிருந்தனர். ஆதலால் உரிமை மைய அணுகுமுறை தமிழர் அரசியலின் மூலாதாரமாக இருப்பதை யாரும் எதிர்க்கவுமில்லை. விமர்சிக்கவும் இல்லை. மாறாக ஆதரவு வழங்கினர். ஆனால் இன்று நிலமை வேறு. தமிழ் மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் கொடிய இடம்பெயர்வு, யுத்த அழிவு, குடும்பச்சிதைவு, உயிர் இழப்பு, பொருளாதார அழிவு எனப் பாரிய துன்ப துயரங்களுக்குள் வீழ்ந்து எழமுடியாமல் தத்தளிக்கின்றனர். இத்தகைய சூழ்நிலையில் அவர்களது புனர்வாழ்வு, மீள்கட்டுமானம், புனருத்தாரணம், குடும்ப கிராமியப்பொருளாதார மேம்பாடு, என்பனவற்றுக்கு உதவாமல் அரசியல் தீர்வு பற்றிய

செயல்பாட்டை மாத்திரம் முன்னெடுக்க முயல்வது அரசியல் சாணக்கியமற்றசெயல் என கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அத்துடன் அத்தகைய செயல் தமிழ் வாக்காளர்களை வாக்களிப்பிலிருந்து ஒதுங்கவோ அல்லது அபிவிருத்திக் கோசத்தைக் கொண்டுள்ள சிறிய தமிழ் கட்சிகளுக்குப் பின்னால் செல்லும் நிலையையோ ஏற்படுத்தலாம்.

3. **செயற்படு அரசியலின்பால் தமிழ் மக்கள் நகர்த்தப்படாமை:** இன்று தமிழ் வாக்காளர்களில் ஒருபகுதியினர் அரசியல் பார்வையாளர்களாக இருக்க இன்னுமொரு சாரார் வெறும் வாக்காளர்களாக உள்ளனர். இதனால் கொள்கை சார்ந்த அரசியல், தேவை சார்ந்த அரசியலாக மாற்றம் பெற்று வருவதுடன், தமது தேவையை யார் பூர்த்திசெய்வதாக கூறுகிறார்களோ அவர்களை ஆதரிக்கும் நிலையற்ற அரசியல் போக்கு, தமிழ் மக்களிடையே வளர்ந்து வருகிறது. இதனால் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் காத்திரமான வாக்களிப்பு வீதம், கணிசமான அளவு ஏனைய இனத்தவருடன் ஒப்பிடுகையில் தாள்நிலையில் உள்ளது. இத்தகைய போக்கை சீர்செய்யத் தமிழ் மக்கள் அரசியற் செயற்பாடுகளில் உள்ளீர்க்கப்படுதல் அவசியம். மேலும் தமிழ் மக்களின் சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளிலும் திட்டமிட்ட அடிப்படையில் தொடர்ச்சியாக அரசியற் கட்சிகள் செயற்படுதல் அவசியமாகிறது. மற்றும் தமிழ் மக்களை தெளிவான அரசியல் இலக்கு நோக்கி அணிதிரட்டவும், அணிதிரளச்செய்யவும் தேவையான தொடர் வேலைத்திட்டம், கட்சிகளுக்குள்ளும் வெளியிலும் தலைமை ஏற்போரால் முன்னெடுக்கப் படல் அவசியம்.

4. **இருபக்கத்தொடர்பாடலும் பல்முனைப்புக்கருத்தாடலும்:** நவகால வாக்களிப்பில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகள், ஒருவர் பற்றிய நல் அபிப்பிராயம், பரஸ்பர நம்பிக்கை, உறவு, கருத்தொற்றுமை, அவரது நேர்மை மற்றும் கொள்கை என்பனவற்றை தொடர்பூடகங்கள்வாயிலாகக் கட்டி ஏழுப்புதல் என்றால் மிகையாகாது. இதனாலேயே சமூக வலைத்தளங்கள், இலகுவளி இலத்திரனியல் தொடர்பூடகங்கள் மக்கள்மத்தியில் செல்வாக்குமிக்க இருவழித்தொடர்பூடகங்களாக வலம்வருகின்றன. பல்தரப்பட்ட மக்களும் ஆர்வத்துடன் பயன்படுத்துகின்றனர். தமிழ்நாட்டை எடுத்தால் அரசியல் செய்ய பதிப்பு ஊடகங்களும், இலத்திரனியல் ஊடகங்களும் ஒவ்வொரு அரசியல் கட்சியாலும் சொந்தமாக இயக்கப்படுகின்றன. இதனையே போராளிகளும் நம்பினர்.செயல்படுத்தினர். ஆனால் தற்போதைய தமிழ் அரசியல் கட்சிகள் தமக்குச் சாத்தியமான தொடர்பூடகப் பயன்பாட்டை சிந்தனை அளவிலேனும் எடுத்துக்கொள்ளவில்லை என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பல்வேறு தரப்பினரும் தமது தேவைகளுக்காக பயன்படுத்தும் தன்நிலைச் சார்பு தொடர்பூடகங்களையே தமிழ் தரப்பும் தங்கியிருக்கிறது. இதனால் மக்களை தம்பக்க நியாயத்தின்பால் ஈர்த்து தொடர்ந்தும் தம்முடன் வைத்திருக்க இயலாதவர்களாக தமிழ் தரப்பார் உள்ளனர்.

5. **சமூக வலைத்தளப் பயன்பாடும் மக்களை அணிதிரட்டலும்:** நகர்ப்புற தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரையில் சமூக வலைத்தளங்கள் ஏனைய சமூகத்தவரைப்போன்று செல்வாக்கு மிக்கனவாக அவர்களுக்கு இருந்து வருகின்றன. இருந்தபோதிலும் தமிழ் அரசில் பரப்பில் மக்களை ஒரு கருத்தின்பால் அணிதிரட்டும் அளவுக்கு செல்வாக்குமிக்கதாக அவை பயன்படுத்தப்படவில்லை.சிங்கள, முஸ்லிம் சமூகத்துடன் ஒப்பிடுகையில் கருத்தேற்றம் செய்யும் அரசியல் குழுக்கள் திட்டமிட்டு சமூக வலைத்தளங்களில் தமக்கு விரும்பிய கருத்துக்களை பரப்பி அக்கருத்துக்களின் பால் மக்களை ஒன்றுகுவிய வைக்கின்றன. பொதுவாக மக்களை உணர்ச்சியூட்டும் விடயங்களைப் பகிர்ந்து எப்போதும் விறுவிறுப்புடன் மக்கள் தமது குழுக் கருத்தியலில்பால் நாட்டம் கொண்டிருக்கும் வண்ணம் செயல்பட்டு வருகின்றன. இவ் உத்திகளை தமிழ் சமூகம் அரசியல் நோக்கிற்காக பெரிதாகப் பயன்படுத்துவதில்லை என்ற கருத்தை வலைத்தளங்களை ஆய்வுசெய்வோர் தெரிவிக்கின்றனர். நீண்டகால போரியல் பாதிப்பும் போர்கால சூழ்நிலையில் உருவாக்கப்பட்ட பய உளவியலும் இன்றும் தமிழ் மக்களை பகிரங்கமாக கருத்தாடலில் ஈடுபடுவதில் தயக்கத்தை கொடுக்கின்றது. காரணமற்ற பயம் கவ்விக்கொண்டதனால் தமிழ் அரசியல் தவிர்ந்த சமய, சினிமா பொழுதுபோக்கு விடயங்களைப்பகிர்ந்து கருத்தாடலில் செலவிடும் பழக்கத்தை சமூகவலைத்தள தமிழ் பாவனையாளர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஒதுங்கியிருத்தலும், விலகி இருத்தலும் பாதுகாப்பு என்ற கருத்தியலின்பால் நின்று தமது ஆதங்கங்களைக்கூட வலைத்தளங்களில் பகிராது சுயவிளம்பர படங்களை தரவேற்றம் செய்து அதில் மகிழ்ந்து பொழுதைப்போக்கும் நிலையே அதிகம் உள்ளது. இதற்குப்புறநடைகளும் உண்டு. இருந்தபோதிலும் பொறுப்புவாய்ந்த வகையில் தொடர்ச்சியாக சமூக வலைத்தளங்களை தமிழர் இருப்பியல்சார்ந்த வேலைத்திட்டங்களுக்கு பயன்படுத்த தமிழ் சமூகமும் அரசியல்வாதிகளும் முயலவேண்டும்.

## பகுதி- 3

## கிழக்குத் தமிழ் மக்களின் நிலைப்பாடு

கடந்த சிலவருடங்களாக குறிப்பாக 2015க்குப் பின்னான கிழக்குத் தமிழ் அரசியல் களத்தில்,பேசுபொருளாக கொழும்பின் நல்லாட்சி ( ஊழல் ஆட்சி),தமிழ் அரசியல் கட்சிகள், அவற்றின் செயற்பாடுகள், உள்ளக முரண்பாடுகள், தேசிய கட்சிகளின் வேலைத்திட்டம், சக இனத்தவரின் அரசியல் செல்வாக்கு, அவர்களது கட்சிப் பிரமுகர்களின் வேலைத்திட்டங்கள், காணி விடுவிப்பும் அபகரிப்பும், இப்படி ஏராளமான கருத்தாடல் கருப்பொருட்கள் செல்வாக்குச்செலுத்தி வருகின்றன. இதனிடையே 2018 ஆரம்பத்தில் ஓர் உள்ளுராட்சி மன்றங்களுக்கான தேர்தலும் இடம்பெற்று முடிந்துள்ளது.இவையாவும் தமிழ் மக்கள் தாம் கொண்டிருந்த பல்தரப்பட்ட நிலைப்பாடுகளின்மீது செல்வாக்குச்செலுத்தி, மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர். அதனடிப்படையில் தமிழ் வாக்காளர் சமூகத்தின் கூறுகளாக விளங்கும் பல்வேறு தொழில்சார் சமூகங்கள், சமய, சமூக நிறுவனங்கள், அதன் வழிகாட்டிகள், கற்றோர் சமூகம், உயர்புலமை வாய்ந்த புத்திஜீவிகள், சட்டத்துறையினர், மகளிர்

அமைப்புக்கள், விசேட தேவையுடையோர், சாதாரண பொது மக்கள் என ஏராளமானோரை 25 வினாக்களடங்கிய வினாக்கொத்தின் வாயிலாக அணுகி அவர்களது நிலைப்பாடுகள் உரசிப்பார்க்கப்பட்டுள்ளன. அவற்றின் தொகுப்பில் மேலெழுந்த முக்கியமான உணர்வுகளும், கருத்துக்களும், அபிப்பிராயங்களும், பரிந்துரைகளும் கீழே தரப்படுகின்றன.

மேலும் வினாக்கொத்தைப் பயன்படுத்தியோர் மூன்று மாவட்டங்களிலிருந்தும் 1523 பேர் ஆக இருந்தபோதிலும் முறையாக நிரப்பி மீளக்கையளித்தோர் 1509 ஆக இருந்தது. எனவே 1500க்கு எத்தனை பேர் வினாவின் கருத்தொன்றுக்கு ஆதரவாக உள்ளனர் என்ற அடிப்படையில் மக்களின் நிலைப்பாடு கணிக்கப்பட்டுள்ளது. மேலும் வினாக்கொத்தைப் பயன்படுத்தியோர் தமது கருத்தையும் எழுத்துருவில் இடையிடையே பதிவு செய்துள்ளனர். அக் கருத்துக்கள் அவர்களது அர்த்தம் கெடாமல் அப்படியே நடுநிலைமையுடன் ஒவ்வொரு வினாவின் கீழும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் அத்தகைய தொகுப்பில் குழுக்கலந்துரையாடல்களில் கலந்துகொண்டோரின் விமர்சனங்கள், ஆதங்கங்கள், கோபங்கள் எழுத்துருவில் இணைக்கப்பட்டுள்ளன.

மேலும் இவ் ஆய்வறிக்கையின் ஆரம்பம் முதல் இறுதிவரை தமிழ் வாக்காளர்களின் உணர்வுகள் விரவிக்கிடக்கின்றன. அவை சிலவேளை தனிப்பட்ட கட்சிகளை தாக்குவனவாகவும் உள்ளன. இருந்தபோதிலும் அனேகர் தெரிவித்த அத்தகைய விமர்சனக் கண்ணோக்குகளே எடுத்தாளவும் பட்டுள்ளன. சிறுபான்மைக் கருத்துக்கள் அவற்றின் உண்மைப் பெறுமானத்தின் அடிப்படையில் சேர்க்கவோ அல்லது நீக்கவோ பட்டுள்ளன.

**அ. கிழக்கு தமிழர்களின் சமகால அரசியல் போக்குப் பற்றி: தமிழ் மக்களின் நிலைப்பாடு ....**

பொதுவில் பார்க்கின்றபோது தமிழர் தரப்புக்குக் கிடைக்கும் வாக்குகள் கிழக்குத் தமிழரின் அரசியல் போக்கு (Trend) முன்னோக்கிச்செல்வதாகவே காட்டுகின்றன. ஆனால் எதிர்மறையாக கிழக்குத் தமிழ் அரசியல் என்பது கருத்தியலைக் கடந்து "தமிழர்" என்ற உணர்வரசியலின் பால் பட்டதாகவே தோன்றுகின்றது. தமிழர் என்பதற்காக வாக்களித்துவிட்டு கடுமையான விமர்சனங்களையும் வெறுப்பையும் தன்னகத்தே அனைத்துத் தமிழ் தரப்பு வாக்காளர்களும் கொண்டுள்ளதாகவே தோன்றுகிறது. இதன்பேறாக தமிழர் அரசியல்மந்தநிலையில் மக்களிடையே அதிகம் ஊடுருவாத, மக்களுக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் இடையில் பாரிய இடைவெளி கொண்டதாக உள்ளது என்பதை ஆய்வில் கலந்து கொண்ட அனைவருமே முதலில் வெளிப்படுத்திஉள்ளனர். ஆய்வில் கலந்துகொண்டோரின் வெளிப்படுத்தல்களில்முதலாம் இரண்டாம் வினாக்களான **"கிழக்கின் சமகால தமிழ் அரசியல் போக்கு"** பற்றிய கருத்தாடலில்,**மந்தமாக உள்ளது** என **1035 பேர் (69%)** கூற,**பின்னோக்கிச்செல்கிறது** என **465 பேர் (31%)** கூறியுள்ளனர்.

**இதனை நோக்கும்போது தமிழ்த் தரப்பு தமிழ் அரசியல் இருப்பைத் தக்கவைக்க தமிழ் மக்களை தம்பால் நம்பிக்கைகொள்ளச்செய்யும் செயற்பாடுகளை காலதாமதமின்றி உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்பது புலனாகிறது..**

தமிழ் அரசியல் மந்தமாக உள்ளது, பின்னோக்கிச் செல்கிறது என்ற பங்குபற்றுனர்களின் நிலைப்பாட்டுக்கு அடித்தளமாக "தமிழரின் துன்பியல் வாழ்வில் தமிழ் அரசியல் கட்சிகள் குறிப்பிடும்படியாக எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. தமிழ் மக்கள் அரசியல் பங்காளிகளாக நடத்தப்படுவதில்லை. வேலை வாய்ப்பு, கிராம அபிவிருத்தி, தொழில்துறை அபிவிருத்தி, சமூகநலச்சேவைகள், பொதுச்சேவைகளில் முன்னேற்றம் இப்படி ஏராளமான விடயங்கள் தமிழ் பகுதிகளில் அதிகம் இடம்பெறுவதில்லை"என்ற எதிர்மறை மனநிலையே உள்ளதாக கருதப்படுகிறது.

மேலும் தமிழ் கிராம மட்டங்களிலும் எல்லைப்புற பிரதேசங்களிலும் வாழும் வாக்காளர்கள் தமது கருத்துப்பகிர்வில் "கிழக்குத் தமிழ் அரசியல், சக இனத்தவர்களிடம் அடகு வைக்கப்பட்டுள்ளது. அது மீட்கப்படவேண்டும். நல்லிணக்கம் என்ற போர்வையில் நாம் எமது அபிவிருத்திக்கான உரிமை, கிடைக்கும் சொற்ப வசதி வளங்கள், வாய்ப்புக்களை இழந்து வருகின்றோம். பேரம்பேசி எமது மக்களுக்கு எதனையும் செய்ய இயலாத நிலையில் எமது தமிழ் அரசியல்வாதிகள் உள்ளனர். தமிழ் வாக்காளர்களும் வறுமை, பொருளாதாரத்தேவை காரணமாக அனைத்து அரசியல்வாதிகள் பின்னும் செல்லும் நிலை தோன்றியுள்ளது. கொடிய யுத்தத்தால் நாசமாகிப்போன எமது தமிழ் மக்களின் வாழ்வை யாராவது மீட்டுத்தரமாட்டார்களா? அல்லது நாமாகவே மீட்டெடுக்க உதவ மாட்டார்களா என அங்கலாய்த்தவண்ணம் உள்ளனர். தமிழ் கட்சிகள் எம்மை நாடி வந்து எதனையும் கலந்தாலோசிப்பது இல்லை. தாமாகவே முடிவெடுத்து எமது பெயரால் முன்னெடுக்கின்றனர்."எனக் காரசாரமாகவே இடித்துரைத்துள்ளனர்.

**ஆ. சமகால தமிழ் அரசியல் கட்சிகளின் போக்கு, செயல்பாடுகள் பற்றிய மக்கள் நிலைப்பாடு**

வினாக்கொத்தில் 3,4,5,6 மற்றும் 7ம் வினாக்கள் இத்தலைப்பினை மய்யப்படுத்தி மக்களின் கருத்துக்களை வெளிக்கொண்டு வந்துள்ளன. 3ம் வினாவுக்கூடான கிழக்குத் தமிழ் அரசியல் கட்சிகளின் போக்குப்பற்றிய கருத்துக்கணிப்பில் **கட்சிக்குள்ளும், கட்சிகளுடனும் முரண்பாடுகள் அதிகம்** என **270 (18%)** பேரும், **கொள்கை ரீதியில் முரண்பாடுகளுக்குள் கருத்தொற்றுமை உள்ளது** என **30 (2%)**பேரும், **கட்சிகள் சுயநலத்துடன் ஏட்டிக்குப்போட்டியாகச் செயல்படுகின்றன** என **279 (18%)**பேரும்**ஆர்வத்துடன் மக்களுடன் இணைந்து செயல்படுவதில் இயக்கமின்மை** என **920 (62%)** பேரும் தமது கருத்துக்களைப்பதிவு செய்துள்ளனர். **மொத்தத்தில் தமிழ் கட்சிகள் மக்கள் எதிர்பார்க்கும் வகையில் இயக்கமற்று, கருத்தொற்றுமையற்று இருப்பதை மக்களின் அபிப்பிராயங்கள் வெளிக்கொணர்ந்துள்ளன.**

தமிழ் கட்சிகள் தம்மிடையேயும் தமது சொந்தக்கட்சிகளுக்குள்ளேயும் ஜனநாயகப் பண்புகளுடன் செயல்படவில்லை என்ற ஆதங்கமும், தமிழ் மக்களின் அபிலாசைகளைவிட அவை அவர்களுக்கு முக்கியமாக உள்ளன எனும் உணர்வும், மக்களுடன் மனவிருப்புடன் இணைந்து களத்தில் இறங்கிச் செய்யும் அரசியல் செயல்பாடுகள் உயிரற்று இருக்கிறது என்ற மனநிலையும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தமிழ் கட்சிகள், தமிழ் மக்களுடன் நெருங்கி இணைந்து சமூகப் பொருளாதர அரசியல் செயற்பாடுகளை போட்டியின்றி, ஒதுங்கியிருக்காமல், வசைபாடுவதை நிறுத்திச் செய்ய,கிராம, பிரதேச மட்ட கட்டமைப்புக்களை உருவாக்கி உடனடியாகச் செயல்படவேண்டுமென்பதே தமிழ் வாக்காளர்களின் எதிர்பார்ப்பு. அத்துடன் தமிழ் அரசியல்வாதிகளிடம் சமூக அக்கறையையும், அர்ப்பணிப்பையும், மக்களுக்கு சேவை செய்யும் மனநிலையையும் தமிழ் மக்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றனர்.

இவ்வாறு தாம் கருத்துக்களைப் பதிவு செய்வதற்கான காரணங்களாக "தமிழ் அரசியல் கட்சிகள் தமக்கிடையே தொடர்ந்தும் போட்டி அரசியல் செய்தல், வாக்குகளுக்காக பெரிய தமிழ் கட்சியை வசைபாடுவதையே ஏனைய தமிழ் கட்சிகள் வழமையாக கொண்டு செயல்படுதல், ஒருவரை ஒருவர் பலவீனப்படுத்துவதில் சில தமிழ் கட்சிகள் அதி தீவிரமாக இருத்தல், தமிழ் மக்களை மதித்து அரசியல் செய்வதில்லை மாறாக ஏமாற்றி அரசியல் செய்தல், முக்கிய பிரச்சனைகளில் தமிழ் கட்சிகளின் முக்கிய பிரமுகர்களை காணக்கிடைப்பதில்லை, கருத்தொற்றுமை இல்லைதமிழ் மக்களுக்காக விட்டுக்கொடுக்கும் தமிழ் பற்று இல்லை, தன்முனைப்புச் சிந்தனை, சுயநலம், போட்டி அரசியல் என்பதையே தமிழ் கட்சிகள் செய்தல், அபிவிருத்தி என்று பூச்சாண்டி காட்டி எம்மை ஏமாற்றி வாக்குப்பறிக்க சிலர் முயல்வது, மக்களுடன் இணைந்து மக்கள் அரசியல் செய்யத்தெரியாத தமிழ் கட்சிகள், தமிழ் மக்களுடன் நெருங்கி வேலைசெய்ய கிராம பிரதேச மட்ட கட்டமைப்புக்கள் இல்லை, இப்போது புதிதாக வரும் அனைத்துத் தமிழ் அரசியல்வாதிகளும் அதிகாரம், பணம், செல்வாக்கு என்பனவற்றைப் பெருக்கவே அரசியலுக்கு வருகின்றனர். அவர்கள் மக்களுக்கு அரசியலுக்கூடாக சேவை செய்ய வருவதில்லை, நாம் தமிழர் என்ற மட்டில் எமது இனத்தை, தேசிய கட்சிகளுக்கோ, அல்லது சிங்களத்தலைமைகளை கடந்த காலங்களில் ஏற்று அவர்கள் வழிகாட்டலில் எமது பிரதேசங்களில் தமிழர் போராட்டத்துக்கு எதிராக செயல்பட்டவர்களுக்கோ, நாம் இடமளிக்கப் போவதில்லை. தற்போதுள்ள எமது தலைமைகள் தமது நடவடிக்கைகள் பலதை மாற்றி, முறையான பலமட்டக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தி திட்டமிட்டு எமது சமூக, பொருளாதார, உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் பெற்றெடுப்பதில் நேர்மை உள்ளவர்களாக செயல்பட வேண்டுமென்பதே எமது அவா" என தமது உணர்வுகளையும் கலந்து எழுத்துருவில் கொடுத்துள்ளனர்.

5வது வினாவான தமிழ் அரசியல் கட்சிகளின் தற்போதைய செயல்பாடு கிழக்குத் தமிழர்களின் அரசியல் இருப்பு, பிரதிநிதித்துவத்துக்கு எத்தகைய எதிர்வினையை ஏற்படுத்துகின்றது என்பது மட்டில் மிகப்பாதகமானது என 840 (56%)பேரும், தீங்கு விழைவிப்பது என 330 (22%)பேரும்,ஓரளவு சாதகமானது என330 (22%) பேரும் கருத்தை பதிவு செய்துள்ளனர்.

ஆகமொத்தத்தில் பெரும் எண்ணிக்கையிலானோர்,தமிழ் அரசியல் கட்சிகளின் தற்போதைய செயற்பாடு தமிழ் மக்களின் அரசியல் இருப்பை தக்கவைக்காது. மாறாக உடன்வாழும் தமிழ்பேசும் சமூகத்தின் இருப்பையே பலப்படுத்தும் என கூறியுள்ளனர். அனைத்துத் தமிழ் கட்சிகளும் கொள்கை வேறாக இருந்தபோதிலும் தமிழ் மக்களின் அரசியல் இருப்பை தக்கவைக்கும், தமிழ் பிரதிநிதித்துவத்தை அதிகரித்து அதிகாரத்தை கைப்பற்றவல்லதாக மாற்றும் வண்ணம் விட்டுக்கொடுத்து உழைக்கவேண்டும்.

இத்தகைய கருத்துப்பதிவுக்கு காரணங்களாக " தமிழ் கட்சிகளின் முரண்பாட்டால் தமிழ் வாக்குகள் சிதறும், பிற இனத்தவர்களுக்கு அதுவாய்ப்பாக அமையும், அத்துடன் மக்களை தேசிய கட்சிகளின்பால் ஈர்த்து தமிழர் அரசியல் அடையாளத்தை இல்லாமல் செய்துவிடும், தமிழ் பிரதிநிதித்துவத்தை குறைத்துவிடும், பேரம்பேசி அதிகாரத்தில் பங்கெடுக்க உதவாது, தமிழ் மக்களின் அரசியல் இருப்பை படிப்படியாக இல்லாமல் செய்துவிடும், அத்துடன் தமது நடவடிக்கைகள் பற்றி தெளிவூட்டலையோ, கருத்துப்பகிர்வையோ தமிழ் கட்சிகள் மேற்கொள்ளுவதுமில்லை. மக்கள் மன்றக் கருத்தாடல் படிமுறையை நிராகரித்த சுய அரசியல் வியூகம், பல்மட்டச்செயற்பாடு, வெளிப்படைத்தன்மையற்ற அணுகுமுறை என்பன மக்களை தனித்துவ தமிழ் அரசியலில் இருந்து அந்நியப்படுத்தி சிங்களத்தேசத்தின் தேசிய அரசியலில் கலக்கும் நிலைக்கு தள்ளிவிடுகிறது." போன்றனவற்றை முன்வைத்துள்ளனர்.

வினாக்கொத்தில் ஏழாவதாகக் காணப்படும் **"தம்மிடையே முரண்பட்டுக்கொண்டு தமிழர் உரிமைகளுக்காக குரல்கொடுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு கிழக்கில் வாக்களிப்பது"** எனும் வினாவுக்கு எவ்விதத்திலும் பலனளிக்காது என 375 (25%)பேரும், ஓரளவுதான் பலனளிக்கும் என 495 (33%)பேரும், மாகாண பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்யும் என 630 (42%) பேரும் தமது கருத்துக்களைத் தந்துள்ளனர்.

**உண்மையில் எந்தத் தமிழ் கட்சியும் தமிழ் மக்களின் கடுமையான விமர்சனங்களைக் கடந்து காணப்படவில்லை. தமிழ் கட்சிகள்,உரிமை, தீர்வு, அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு தமிழ் பிரதிநிதித்துவம் அதிகரிக்காத வண்ணம் வாக்குகளை சிதறடிக்கவோ அல்லது வாக்களிப்பிலிருந்து வாக்காளர்கள் ஆர்வமற்று விலகி இருக்கவோதான் செய்கின்றன. எனவே மக்கள் மய்யச் செயல்பாடுகளை முன்னெடுக்கும் வண்ணம் தம்மை அனைவரும் மாற்றிக்கொள்ளவேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.**

இத்தகைய கருத்துகளுக்கான காரணங்களாக "தமிழ் கட்சிகளில் தமிழ் மானம் காக்கப் பேசக்கூடியவர்கள் உரிமைக்காக குரல்கொடுக்கும் ஒரேயோரு பெரிய தமிழ் கட்சியே அது, பலவீனம் இருப்பினும் தமிழ் மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கவேண்டும், அதேவேளை அவர்கள் மக்கள் மய்யச் செயல்பாடுகளை முன்னெடுக்கும் வண்ணம் மாற்றப்படவேண்டும்.அவர்களை வைத்தே எமது அரசியல் தீர்வையும் அபிவிருத்தியையும் காணவேண்டும்,

கொள்கைகளுக்காக முரண்படுவது சரியே ஆனால் சில விட்டுக்கொடுப்புடன் சமாளிக்கத் தெரியவேண்டும், மக்கள் பிரச்சனைகளில் ஒதுங்கி நின்று அரசியல் செய்யக்கூடாது, தேசியக்கட்சிகள் மற்றும் சிங்களத் தலைவர்களை வால்பிடிக்கும் சிறிய தமிழ்கட்சிகளிடமிருந்து எம்மைக் காப்பாற்ற பெரிய தமிழ் கட்சி முக்கியம். தமிழரின் தன்மானம் காப்போருக்கே வாக்களிக்கவேண்டும். காட்டிக்கொடுப்போருக்கு வாக்களிக்கக்கூடாது."என எழுத்துருவில் பதிவு செய்துள்ளனர்.

**இ. தேசிய கட்சிகள் பற்றிய தமிழ் மக்களின் நிலைப்பாடுகள்**

வினாக்கொத்தில் 8,9,15,16, மற்றும் 17ம் வினாக்கள் கிழக்குத் தமிழர் அரசியல் பரப்பில் காலுன்றிவரும் தேசியக் கட்சிகள் பற்றியும் அவற்றில் ஒழுங்கமைப்பாளர்கள், ஏற்பாட்டாளர்களாக உள்ள தமிழ் அரசியல்வாதிகள் பற்றியும் விவாதிக்கின்றன. கருத்துக்கணிப்பில் பங்கெடுத்தோரிடையே பலமான விசாரணைக்குஇவ்வினாக்கள் உதவியுள்ளன.

வினாக்கொத்தில் எட்டாவதாக வரும் **"ஒற்றுமை இன்றிச் செயற்படும் தமிழ் அரசில் கட்சிகளுடன் போட்டியிடும், தேசிய அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் அரசியல் வாதிகளுக்கு வாக்களிப்பது"** எனும் வினாவுக்கான பிரதிபலிப்பாக, புத்திசாலித்தனமானது. முன்னேற்றத்துக்கு அது தேவை என 135 (9%) பேரும், தமிழர் உரிமை வழங்காத சிங்கள அரசியல் தலைமை ஏற்போரின் கருத்தை வலுப்படுத்தும் என 300 (20%) பேரும், தமிழரின் தனி அடையாளத்தை பேணும் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்கும் என 405 (27%) பேரும்,கிழக்கு மாகாண தமிழர் பிரதிநிதித்துவத்தை மாகாணசபையில் மேலும் குறைக்கும் என 570 (38%)பேரும்,அதிகரித்த வளங்களைப் பெற உதவும் என 90 (6%) பேரும் தமது வாக்குகளைப்பதிவு செய்துள்ளனர்.

**அனேகமானவர்கள் தேசிய அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு வாக்களிப்பது தமிழர் அரசியல் இருப்புக்கும் தனித்துவத்துக்கும் உதவப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். இருந்தபோதிலும் தமிழ் வாக்காளர்களிடையே 15 விகிதமானவர்கள் நன்மை பயக்கும் என்றே எண்ணுகின்றனர். இத்தகைய தேசிய அரசியல் கட்சிகள் பற்றிய சார்புப்பார்வை அதிகரித்துச் செல்லுமா என்பது இப்போது கணிப்பது சுலபமல்ல. இருந்தபோதிலும் அபிவிருத்தியை முதன்மைப்படுத்தும் தமிழ் கட்சிகளை ஆதரிக்கும் விகிதத்துடன் இணைந்தால் தமிழ் வாக்குகளைச் பிரிக்கும் நிலை ஏற்படும். எனவே இப்பிரச்சனை அக்கபூர்வமான செயல்பாடுகளால் அதாவது ஏன் தமிழ் வாக்காளர் தேசிய கட்சிகளை நாடுகின்றனர், என இதயசுத்தியுடன் பார்த்து தமது அரசியல் நடவடிக்கைகளை மாற்றி தமிழ் மக்களின் பிரச்சனைகள் மட்டில் சேவைசெய்வதன் மூலம் முளையிலேயே கிள்ளி எறியப்படவேண்டியதொன்றே.**

மேலும் தமது தெரிவுக்கான காரணங்களாக "தமிழ் வாக்காளர்கள் தேசிய கட்சிகளுக்கு வாக்களிக்கவே கூடாது. ஒரு தமிழ் அரசியல்வாதி முன்னெடுத்த வேலையால் மட்டக்களப்பில் ஒருபிரதிநிதித்துவம் 2015இல் பறிபோனது,அதனை இனியும் விடக்கூடாது, அம்பாறையில் பிற சமூகத்தவருக்கு வாக்களிப்பதை தமிழ் மக்கள் விட்டுவிடச் செய்யவேண்டும், விரும்பினால் தேசிய கட்சிகளின் உதவியைப் பெறலாம்- வாக்களிப்பு என்று வந்துவிட்டால் அது தமிழ் தனித்துவம் காட்டும் பெரிய தமிழ் அரசியல் கட்சிக்கு மட்டும்தான், தேசிய கட்சிகளுடன் பகைக்காமல், மக்களை தம்பக்கம் வைத்திருக்க தமிழ் கட்சிகள் முயலவேண்டும், தேசியக் கட்சிகளில் முஸ்லிம்கள் அதிகம் உள்ளதால் தமிழருக்கு அவர்களை ஆதரிப்பது பொருந்தாது, பெரிய தமிழ் கட்சி ஏன் தமிழ் வாக்காளர் தேசிய கட்சிகளை நாடுகின்றனர், என இதயசுத்தியுடன் பார்த்து தமது அரசியல் நடவடிக்கைகளை மாற்றி தமிழ் மக்களின் பிரச்சனைகள் மட்டில் சேவை செய்யவேண்டும். தேசியக் கட்சிகள் எப்போதும் தமிழருக்கு விரோதமானவை - வாக்கைபெறவே வேடம் போடுவர்" என ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளனர்.

ஒன்பதாவது வினாவான **"தேசிய அரசில் கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் அரசியல் வாதிகளுக்கு கிழக்கில் தமிழ் மக்கள் வாக்களிக்க முயல்வது"** பற்றி மக்கள் நிலைப்பாடாகதமது பிரதேசத்துக்கு அபிவிருத்தியைக் கொண்டுவருவர் என்பதால்தான் என 390 (26%) பேரும்,அரசின் உதவிகளைப் பெற அவர்கள் உதவிபெறலாம் என்பதால்தான் என 225 (15%) பேரும்,தெரிந்தவர்கள், உறவினர்கள் என்பதால்தான் என 180 (12%) பேரும்,தமிழ் அரசியல்வாதிகள் மீதுள்ள வெறுப்பால் தான் என 270 (18%) பேரும்,ஏனைய இன அரசியல் வாதிகள் இம்முறையைப் பயன்படுத்தி தமது இனக்குழுமத்தை வளர்ப்பதைப்போன்று நாமும் ஏன் செயல்படக் கூடாது என்ற ஆதங்கத்தால்தான்என 435 (29%) பேரும் தமது வாக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

**ஆய்வில் கலந்துகொண்டோர், தமிழ் மக்கள் ஏன் தேசிய அரசில் கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் அரசியல் வாதிகளுக்கு வாக்களிக்க முயல்கின்றனர் எனும் விடயத்தில் மூன்றுவகையான உணர்வுகளை வெளிப்படுத்தி உள்ளனர். முதலாவது அபிவிருத்தி, உதவி வரும் என்ற எதிர்பார்ப்பையும், இரண்டாவது சொந்த நலன்கள் அடிப்படையிலும், மூன்றாவது அடுத்த சமூகத்தைப்போன்று நாமும் ஆகமுடியாதா என்ற ஆதங்கங்கத்தின் அடிப்படையிலும் ஆகும். இந்நிலை தமிழ் மக்கள், தேசியக்கட்சிகளால் காலங்காலமாக எப்படி நடத்தப்பட்டு வருகின்றனர் என்ற தார்ப்பரியம் அதிகம் அறியாதவர்களாக இருப்பதையே சுட்டிநிற்கின்றது. எனவே தமிழ் மக்களை இதுபற்றிய விழிப்புணர்வுக்கு உட்படுத்தவேண்டிய தேவையும் உள்ளது.**

மேலும் ஆய்வில் கலந்தகொண்டொர் தமது நிலைப்பாட்டுக்கான நியாயங்களாக "தமிழ் கட்சிகள் தேசிய கட்சிகளில் முகவர்களாக தொழிற்படுவோரை நெருங்கி வேலை செய்வதில்லை, தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் பொருளாதார கஸ்டத்தில் பங்கெடுப்பதில்லை, தமிழ் மக்கள் தமது தேவைகளை வைத்து வாக்குறுதி அளிப்பவர்களை நம்பும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர், தேசியக் கட்சிகள் பற்றிய தெளிவு தமிழ் மக்களிடம் இல்லை, வாழ்க்கையை முன்னேற்ற வழிகிடைக்காதா என்ற ஏக்கத்தில் மக்கள் உள்ளனர், ஆசை வார்த்தைகளை தேசிய கட்சிகளின் முகவர்கள் பொழிகின்றனர்" என்ற கருத்துக்களை எழுத்துருவில் வழங்கியுள்ளனர்.

இருபதாவது வினாவான **"கிழக்கில் தேசிய அரசியல் கட்சிகளின் அதிகரித்து வரும் செல்வாக்கு"**பற்றிய கணிப்பீட்டில் தமிழர்களின் தனித் தமிழ் அரசியல் அடையாளத்தை இல்லாமல் செய்யும் என 720 (48%) பேரும்,அபிவிருத்திக்கு உதவும்என 420 (28%) பேரும்,ஏனைய இன அரசியல் வாதிகளுடன் போட்டிபோட்டு அரசிடமிருந்து சலுகை பெற உதவும்என 360 (24%) பேரும் தமது கருத்துக்களைப் பதிந்துள்ளனர்.

**இங்குகூட அரைவாசிப்பேர் தேசிய அரசியல் கட்சிகளுக்கு வாக்களிப்பதை தேவைசார்ந்ததொன்றாகப் பார்க்கும் நிலை காணப்படுகின்றது. இத்தகைய பார்வை தமிழ் பிரதிநிதித்துவம் மாற்றமடைவதைப் பார்க்காது தமது வாழ்வியல் தேவைகளை முதன்மைப்படுத்தி வாக்களிக்கும் போக்கை வலுப்படுத்தலாம். இதனால் கிழக்கில் தேசியக் கட்சிகள் செல்வாக்கு மிக்கதாக மாறி கொழும்பின் தேவைகளுக்கு தமிழ் மக்கள் பயன்படுத்தப்படும் வாய்ப்பை சிங்களத் தலைவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கலாம். மேலும் தேசியக் கட்சிகளில் உள்ள முஸ்லிம்களை கையாள்வதற்கு தமிழ் மக்களும் சிங்களத் தலைமைகளால் பயன்படுத்தப்படும் வாய்ப்பு அதிகரிக்கும். ஈற்றில் பிரித்தாளும் தந்திரத்தில் தமிழ் பேசு சமூகமும் தமிழர்களும் மாட்டிக்கொள்வதை எவராலும் தடுக்கமுடியாமல் போய்விடும். அத்தகைய சூழ்நிலையிலும் தமிழ் மக்களே பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம். இத்தகைய கருத்தாடல் தமிழ் மக்களைச் சென்றடைய வேண்டும்**

மேலும் இத்தகைய நிலைப்பாட்டை எடுக்கக் காரணமாக "தமிழர்களுக்கு தேசிய அரசியல் என்றால் அது சிங்களக் கட்சிளுக்காக முகவர் அரசியல் செய்வோரை நாடுதல் என்பதுதான் என்று விளங்குவதில்லை, தமிழ் தரப்பு செய்யவேண்டியதை இம்முகவர்கள் செய்யும்போது கஸ்டத்தில் தவிப்பவர்கள் அவர்கள் பக்கம் சாய்வது யதார்த்தம், தேசிய கட்சிகளின் செல்வாக்கு அதிகரிக்கிறது என்றால் தமிழ் கட்சிகள் தோற்கின்றன அல்லது செல்வாக்கை இழந்து வருகின்றன என்பது பொருள், சாட்டுப்போக்கு கூறாது சுயவிமர்சனம் செய்து தமிழ் மக்களின் உண்மைப் பிரதிநிதிகளாக தமிழ் கட்சி மாறவேண்டும், ஆக்கபூர்வ செயல்திட்டங்கள் தமிழ் தரப்புக்கு தேவை - தமிழ் கட்சித்தரப்பு அதைச் செய்யவேண்டும்." என மக்கள் முன்வைத்துள்ளனர்.

இருபத்தோராவது வினாவான **"தேசிய அரசியல் கட்சிகளில் போட்டியிடும் தமிழ் அரசியல்வாதிகளின் செயல்பாடு"**பற்றிய தமிழ் மக்கள் நிலைப்பாட்டினை அறிதலில்,தமிழர் வாக்குகள் பிரிபடுவதுடன் அத் தேசியக்கட்சியில் கேட்கும் ஏனைய இனத்தவருக்கு அதிக வாக்குகளை பெற்றுக்கொடுத்து அவரை தெரிவுசெய்யும் நிலைக்கு தமிழர்களைத் தள்ளிவிடும்என 960 (64%) பேரும்,தமிழ் தலைமைகளுக்கு நல்ல பாடம் புகட்டப்படுவதால் தமிழருக்கு நன்மை கிட்டும்என 300 (20%)பேரும்,சிங்களத் தலைமைகளிடம் நல்லபெயர் கிடைக்கும் என (240 (16%) பேரும் தமது கருத்துக்களைப் பதிந்துள்ளனர்.

**இங்கும் அரைவாசிக்கும் அதிகமான பங்குபற்றுனர்கள், தேசிய அரசியல் கட்சிகளில் போட்டியிடும் தமிழ் அரசியல் வாதிகளின் செயல்பாடு பாதகமானது எனப்பார்க்க இன்னுமொருசாரார் வேறுவிதமாகப் பார்க்கின்றனர். தமிழ் மக்கள் தேசியக்கட்சிகளின் அரசியல் தந்திரோபாயத்தை விளங்கிக்கொள்ளும் வண்ணம் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டிய தேவையையே இங்கும் காணக்கூடியதாயுள்ளது.**

மேலும் இத்தகைய தமது நிலைப்பாடுகள் மட்டில்"தமிழ் தலைமைகளுக்கு பாடம் புகட்டப்படும் என்ற கருத்தை ஏற்கமுடியாது என்பதுடன் தமிழர் தரப்பின் தோல்வி தமிழர் அரசியல் இருப்பை இல்லாமல் செய்துவிடும் ஆதலால் தெரிவின் முதல் கருத்து முக்கியமானது. தமிழ் கட்சிகளிலுள்ள அரசியல்வாதிகளை திருத்தவேண்டுமே தவிர தேசிய கட்சிகளிலுள்ள சிங்களவர்களுக்காக வேலைசெய்யும் தமிழ் முகவர்களுக்கு ஆதரவு கொடுக்கக்கூடாது. இம்முகவர்களை மக்கள் நிராகரிக்கும் வண்ணம் தமிழ் வாக்காளர்கள் அறிவூட்டப்பட்டு பெரிய தமிழ் கட்சிகளில் நம்பிக்கை வைக்குமாறு செய்யவேண்டும். மக்கள் பணி செய்து அவர்களை பலமாக தம்பக்கம் வைத்திருக்கவேண்டும். புதிய கொள்கையும் வியூகமும் தமிழர்களுக்குத் தேவை. புதிய சிந்தனை உள்ளவர்கள் தமிழ் அரசியலுக்கு மக்கள் பணிக்கூடாக வரவேண்டும்." போன்ற கருத்துக்கள் அமைந்துள்ளன எனத் தமது நியாயங்களைப் பதிந்துள்ளனர்.

இருபத்தியிரண்டாவது வினாவான **"கிழக்கில் தேசிய அரசியல் கட்சிகளின் அதிகரித்து வரும் செல்வாக்கை குறைப்பது"**பற்றிய கணிப்பில் தமிழ் வாக்காளர்கள், தேசிய அரசியல் கட்சிகளில் போட்டியிடும் தமிழ் அரசியல் வாதிகளை ஆதரிக்கக்கூடாதுஎன 360 (24%) பேரும்,அரசியல் ஆசையுள்ள அத்தகைய அரசியல்வாதிகளை முன்னரே இனம்கண்டு அவர்களுக்கு தமிழ் கட்சிகளில் போட்டியிட சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்என 540 (36%) பேரும்,அவர்களுக்கும் அவர்கள் சார்ந்த தேசிய கட்சிகளுக்கும் எதிராக தமிழ் வாக்காளர்களுக்கு அரசியல் விழிப்புணர்வை அனைவரும் ஏற்படுத்தவேண்டும்என 600 (40%) பேரும் தமது நிலைப்பாடுகளைத் தெரிந்துள்ளனர்.

மேலும் தமது அபிப்பிராயங்களாக "வாக்காளர்களுக்கு அரசியல் கல்வி ஊட்டவேண்டும். அடிக்கடி கூட்டங்கள், மகாநாடுகள் நடத்தி மக்களை அரசியல் மயப்படுத்தவேண்டும். இளைஞர் மகாநாடுகள், செயல்பாடுகளை தமிழ் அரசியல் கட்சிகள் ஏற்பாடுசெய்து புதியவர்களை அணிதிரட்டவேண்டும், தமிழ் இளைஞர் அணியை முக்கிய தமிழ் கட்சி அமைக்கவேண்டும். தொடர்பூடகங்களைப் பயன்படுத்தி மக்களுடன் பேசவேண்டும். கருத்துப்பரிமாற்றம் முக்கியம். தமிழ் மக்களை அரசியல் செயல்பாடுகளில் உள்வாங்கவேண்டும். மக்களை அரசியல் சிந்தனைக்குள் எப்போதும் வைத்திருக்கும் உபாயம் அவசியம்,"என ஆய்வில் கலந்துகொண்டோர் முன்வைத்துள்ளனர்.

**ஈ. உரிமையா? அபிவிருத்தியா? இரண்டும் இணைந்ததா? மக்கள் நிலைப்பாடு**

பத்தாவது வினாவான **"தமிழ் அரசியல் கட்சிகள், தமிழரின் உரிமைகளைக் கோரும் அரசியலை மாவட்ட, மாகாண மட்டத்திலும் தொடர்வது"**பற்றிய கருத்துக்கணிப்பில், அது தவிர்க்க முடியாத தமிழர் தேவைஎன 345 (23%) பேரும்,இனி அது தமிழருக்கு மாவட்ட மாகாண அரசியலில் பலனளிக்காதுஎன 195 (13%) பேரும்,மாகாண, மாவட்ட, பிரதேச அபிவிருத்திக்கும் முக்கியம் கொடுத்துக்கொண்டு உரிமைக்காகவும் போராடும் தமிழர் அரசியலே எமது தேவைஎன 960 (64%) பேரும் தமது நிலைப்பாடுகளை பதிவுசெய்துள்ளனர்.

**சமகாலச் சூழ்நிலையில் அரசியல் தீர்வுக்காக உழைப்பதுடன் மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்துக்கும் உழைக்கும் இரட்டைக்கொள்கை என்பது தமிழ் மக்களின் அசைக்க முடியாத நிலைப்பாடாகும். இந்நிலைப்பாட்டை மதித்தே தமிழ் அரசியல், கிழக்கில் காத்திரமான பயணத்தை மேற்கொள்ளமுடியும்.**

அத்துடன் தமது நிலைப்பாட்டை விளக்கும் வண்ணம் "மூன்றாவது கருத்து எமக்கு முக்கியம். அதுவும் யுத்தத்தால் அனைத்தையும் இழந்த எம்மைப்போன்றவர்களுக்கு அரச உதவிகளைப்பெற தமிழ் கட்சிகள் உதவ வேண்டும், அபிவிருத்தியை கோருவதும் எமது உரிமை, அதனைத் தட்டிக்கழிக்கக் கூடாது. அரசியல் தீர்வைப்போன்று தொழில்வாய்ப்பு, தொழில் முன்னேற்றம், ஜீவனோபாயம், குடிநீர், பாதை, போக்குவரத்து, கல்வி வசதி, சுகாதார வசதி எல்லாம் பெற்றுத்தருவது எம் வாக்கைப் பெற்ற தமிழ் கட்சியின் பொறுப்பு. உங்களுக்கு வாக்களித்துவிட்டு வேறு அரசியல்வாதிகளிடம் இதைக் கேட்க முடியாது. இதைச்செய்யக் கூடியவர்களை அரசியலுக்குள் கொண்டுவர வேண்டும். எமது பொருளாதார முன்னேற்றம் இல்லையென்றால் தீர்வு வந்தும் என்ன பயன்?" எனும் கருத்துக்களை பலமாகப் பதிவு செய்துள்ளனர்.

பதினோராவது வினாவான **"அபிவிருத்திக்கு உதவி கேட்டால் எமது உரிமைகளைக் கேட்க முடியாது"**எனும் தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு பற்றிய மக்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகையில், இக்கருத்து முற்றிலும் தவறு. அபிவிருத்தியை பாரபட்சமின்றி மேற்கொள்வது அரசினதும் குறிப்பாக மந்திரிகளினதும் தலையாய ஜனநாயகக் கடமை. அதைச்செய்ய வைப்பது உரிமையை விலை பேசுவது ,அல்லஎன 660 (44%) பேரும், பிழையான கருத்து. தொடர்ச்சியாக அரசைக் கட்டாயப்படுத்துவதும் மந்திரிகளை அவர்களது அமைச்சில் சந்தித்து தமிழ் பகுதிகளுக்கு அவர்களது நிதியை கொண்டு வருவதும் தமிழ்பிரதிநிதிகளின் கடமை என 375 (25%) பேரும்,இது பொறுப்புக்களை தட்டிக்களிப்போரின் சறுக்கல்பேச்சு என 465 (31%) பேரும் தமது உடன்பாடற்ற கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்

அத்துடன் தமது மேலதிக அபிப்பிராயங்களாக "பெரிய கட்சி மனம் வைத்தால் அதனால் முடியும்- அதற்கான சாணக்கியம் தலைமையிடம் உள்ளது, இதனை அபிவிருத்தி பற்றிப்பேசும் சின்னக் கட்சிகள் கூடச்செய்யப்போவதில்லை. தேசிய அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் இதனை முன்னெடுக்கமுடியாது. உரிமை பற்றிப்பேசும் தரப்பே அபிவிருத்தியையும் ஒரு உரிமையாக்கி சிங்களத் தலைமைகளுடன் போராடி எமக்குப் பெற்றுத்தரவேண்டும். பிற சமூகத்தவரைப்போல் அரசியல் சாணக்கியம், தந்திரோபாயம் தமிழ் தரப்பிடம் இருக்கவேண்டும். அவர்கள் அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் பிரதேசங்கள், தொழில்துறைகளை கையகப்படுத்துகின்றனர் - அதனை விடக்கூடாது. தற்போது நல்லாட்சி அரசாங்கத்தைக் காப்பாற்றும் தமிழ்கட்சி அந்தச்செல்வாக்கை வைத்து எம்மை முன்னேற்ற முயலவேண்டும். எமது ஆணையைப்பெறாமலே அரசுக்கு உதவுவதால் இதனையும் தயக்கமின்றி எமக்குச் செய்ய வேண்டும்.அப்படிச் செய்யக்கூடியவர்களை கட்சிக்குள் உள்வாங்க வேண்டும்" எனக் கூறியுள்ளனர்.

பன்னிரெண்டாவதுவினாவான **"சிங்களத் தலைவர்களின் உதவியுடன் அவர்களுடன் இணைந்து கிழக்கை அபிவிருத்தி செய்து சக இனத்தவரிடமிருந்து எம்மைப் பாதுகாப்பதே புத்திசாதுரியமானது"**எனும் சில தமிழ் கட்சிகளின் கொள்கைபற்றி ஆய்வில் கலந்துகொண்டோரில், முஸ்லிம்களின் ஆதரவில் தங்கியுள்ள சிங்களத் தலைவர்களிடத்தில்தான் இவர்கள் உதவி பெற வேண்டும். அவர்கள் முஸ்லிம்களைப் பகைத்து தமிழரின் அபிவிருத்திக்கு இவர்களுக்குப் பெரிதாக உதவப் போவதில்லை என 900 (60%) பேரும், தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத சிறு தமிழ் கட்சிகள் தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குக்கேட்கும் உத்தி என 270 (18%)பேரும், அதில் உண்மை உள்ளது. உரிமைபற்றிப் பேசி காலத்தை இனியும் வீணடிக்காமல் எம்மை முன்னேற்றும் வழிகளை பார்க்கவேண்டும். அதிரடி அரசியல் செய்யும் இத்தகையோருக்கு தமிழ் வாக்காளர்கள் ஆதரவு கொடுக்கவேண்டும் என 330 (22%) பேரும் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மேலதிக கருத்துப்பதிவாக "முதல் இரண்டு கருத்துக்களையும் வைத்துத்தான் தமிழ் அரசியல் காலங்காலமாக ஓடுகிறது. உரிமைபேசுவோர் ஏன் அபிவிருத்தி செய்யமுயல்பவர்களை ஆதரிக்கக்கூடாது அல்லது செய்யவிடக்கூடாது என்ற கருத்துக்களை ஒருசாரார் பதிவு செய்ய, தாம் அங்கம் வகித்த போராளிகளின் அமைப்பையே உடைத்து நாசமாக்கி தமிழ் மக்களை நடுத்தெருவுக்கு கொண்டு வந்தவர்களா தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியை கொண்டுவரப் போகின்றனர், கொலைகளுடன் தொடர்புபட்டவர்கள் அதிலிருந்து தப்ப சிங்கள தலைவர்களுடன்தான் கூட்டுச்சேருவர் - அவர்கள் தமிழ் மக்களை அபிவிருத்தி, அதிரடி அரசியல் என ஏமாற்றுகின்றனர், இவர்களை ஆதரிப்பவர்களுக்கு தமிழ் பற்று இல்லை" என கடுமையாக மற்றைய தரப்பு வாதிட்டுள்ளது. அத்துடன் பெரிய தமிழ் கட்சி ஏதும் நல்லதை தமக்குச் செய்ய மாட்டார்களா என ஏங்கி ஈற்றில் விரக்தி உற்றவர்களே இவர்களை இப்பொழுது முன்னிறுத்துகின்றனர். அவர்களே மூன்றாவது கருத்தை ஆதரிக்கின்றனர், இக்கொள்கைகள் வெறும் வாய்ப்பேச்சு" எனும் தமது உணர்வுகளுக்கு எழுத்துரு கொடுத்துள்ளனர்.

பதின்மூன்றாவதுவினாவான**"தமிழ் மக்களுக்குத் தேவை அபிவிருத்தியே தவிர சமஸ்டியல்ல. அதிகாரத்துக்கு ஏங்கும் தமிழ் அரசியல்வாதிகளின் ஏமாற்றுவேலை சமஸ்டி"**எனும் கூற்றுப்பற்றியதாக, அபிவிருத்தி என்ற போர்வையில் கிழக்கை சிங்கள பௌத்த மாகாணமாக்கி விடலாம் எனக் கனவு காண்போரின் கூற்று. தமிழ் மக்கள் ஏமாறக்கூடாது என 600 (40%) பேரும்,அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு தமிழர் வளங்களைச் சுரண்டி விடலாம் என கனவு கண்டு வடகிழக்கை துண்டுபோடும் சக இனத்தவரின் ஆசைக்கு தூபமிடும் கருத்து என 360 (24%)பேரும்,அதில் நிறைய உண்மையுள்ளது. தமிழ் மக்கள் நடக்காத ஒன்றுக்கு ஏங்குவதைக் காட்டிலும் நடக்கக்கூடியதை நம்பி அதைசெய்பவர்களை ஆதரிக்கவேண்டும் என 495 (33%) பேரும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளனர்.

மேலும் தமது அபிப்பிராயங்களாக "இது சிங்கள பௌத்த கடும்கோட்பாட்டாளர்களின் கூற்று - சில தமிழ் கட்சிகளும் இதனை விழுங்கிக்கொண்டு இங்கு அரசியல் செய்ய விழைகின்றனர், தேசிய கட்சியிலுள்ள தமிழ் முகவர்கள் கூறும் விளக்கமே மூன்றாவது கருத்து – தமிழ் மக்கள் இவர்களுக்கு வாக்களிக்கக்கூடாது, பெரிய தமிழ் கட்சி அபிவிருத்தியிலும் இறங்கி இவர்களுக்கு ஒரு பாடம் புகட்டவேண்டும், முக்கிய தமிழ் கட்சி தமிழ் மக்களின் உரிமை தவிர்ந்த ஏனை தேவைகளையும் கவனத்தில் கொள்ளாததால் இக்கருத்துக்கள் செல்வாக்குப்பெறுகின்றன."எனப் பதிவிட்டுள்ளனர்.

பதினேழாவது வினாவான **"தமிழ் அரசியல் கட்சிகள், உரிமைகளைக் கோரும் அரசியலை மையப்படுத்தும் அதே வேளை அபிவிருத்தியிலும் உழைக்கும் இரட்டைக் கொள்கையை கடைப்பிடித்தல்"**மட்டில், அபிவிருத்திக்காகவும் உரிமைக்காகவும் உழைக்கும் தமிழர் அரசியல் கொள்கையும் அணுகுமுறையும் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் அவசியம் என 855 பேர் (57%) பேரும்,மாவட்ட, மாகாண மட்ட அபிவிருத்திக்காக முக்கியத்துவம் கொடுத்து உழைக்கும் அரசியல் கொள்கையும் அணுகுமுறையும் இனி அவசியம் என 465 (31%) பேரும்,உரிமைக்காக மாத்திரம் உழைக்கும் அரசியல் கொள்கையும் அணுகுமுறையும் தொடர்ந்தும் எல்லா மட்டங்களிலும் (மாவட்ட, மாகாண, தேசிய) அவசியம் என 180 (12%) பேரும் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி உள்ளனர்.

அத்துடன் தமது நிலைப்பாடுகளுடன் தொடர்பு பட்டதாக "முதலாவது கருத்துத்தான் தமிழ் மக்களை முன்னேற்றும். சக சமூகத்தவரிடமிருந்து எமது வளங்களைப் பாதுகாக்கும். மூன்றாவதைத்தெரிவு செய்வோருக்கு வருமானத்தில் பிரச்சனையில்லை, தொழில் உள்ளது, வீட்டுவசதி அனைத்தும் உள்ளது. எமது நிலைமை அப்படியல்ல. மேட்டுக்குடி, ஓய்வூதியம் பெற்றுக்கெண்டு பொழுது போக்குக்காக அரசியல் செய்வோரின் கருத்துக்களை தலைமைகள் ஒருபோதும் கேட்கக்கூடாது. விடுதலைப்போரில் பெரும் விலைகொடுத்த எம்கருத்துக்களே மிக முக்கியம். எமக்கு கௌரவமான வாழ்வு வாழ பொருளாதாரம், அடிப்படை வசதிகள் தேவை. அதனைப்பெற்றுத்தரும் பொறுப்பு பெரும் அரசியல் கட்சியைச் சார்ந்தது. எப்போதும் எங்கும் எவருடனும் உரிமையையும் அபிவிருத்தி முன்னேற்றம் பற்றியும் பேசவேண்டும், உதவிநாடவேண்டும், பிரதேச, மாகாண மட்டங்களில் மக்களுடன் களத்தில் இறங்கி வேலைசெய்பவர்களை முன்னிறுத்தி அரசியல் செய்யவேண்டும்." எனும் அபிப்பிராயங்களையும் வெளிப்படுத்தி உள்ளனர்.

## உ . கிழக்கில் தமிழ் பிரதநிதித்துவத்தை அதிகரித்தல் சார்பான நிலைப்பாடுகள்

பத்தொன்பதாவது வினாவான**"தமிழ் அரசியல் கட்சிகள் கிழக்குத் தமிழரின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்யவேண்டியன"**என்பது மட்டில்,இணைந்து தொகுதிப் பங்கு பிரித்து தம்மிடையே மோதிக்கொள்ளாமல் போட்டியிடல் என 495 (33%) பேரும்,தனித்துப்போட்டியிட்டாலும் தொகுதிப் பகிர்வை ஏற்படுத்தி தம்மிடையேயான மோதலைத் தவிர்த்துப்போட்டியிடல் என 495 (33%) பேரும்,செல்வாக்குள்ள அதேவேளை மோதலை ஊக்கப்படுத்தாத புதிய தமிழ் போட்டியாளர்களை இனங்கண்டு வாய்ப்பளித்தல் என 510 (34%) பேரும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளனர்.

அத்துடன் "முதலில் நல்லவேட்பாளர்களை தெரிவு செய்து ஏனைய தமிழ் கட்சிகளிடம் பேசி அவர்களுக்கு ஆதரவுத்தளத்தை ஏற்படுத்தவேண்டும். சிறிய கட்சிகளுக்கும் அவர்கள் செல்வாக்குள்ள பிரதேசத்தில் ஒருவரையாவது நிறுத்த வாய்ப்பளித்து போட்டிக்கு அங்கு இன்னுமொருவரை நிறுத்தாது பார்த்துக்கொள்ளல், கொள்கை அடிப்படையில் தமிழ் கட்சிகள் மூன்றாந்தரப்புக்கூடாக கலந்துபேசி தற்காலிக புரிந்துணர்வு அடிப்படையில் தேர்தல்களை எதிர்வு கொள்ளவேண்டும். சேறுபூசுதல், குறைகூறுதல், எதிர்மறை விமர்சனங்களை கட்டாயமாகத் தவிர்க்கவேண்டும்" போன்ற அபிப்பிராயங்களையும் வெளியிட்டுள்ளனர்.

இருபத்திமூன்றாவது வினாவான **"பிரதேச, மாவட்ட, மகாண மட்டத்தில், தமிழ் அரசியல் கட்சிகள் கட்டாயமாகச் செய்யவேண்டிய 5 விடயங்கள்"**மட்டில் பினவருவன வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (ஒவ்வொரு கருத்துக்கும் வாக்களித்தோரின் எண்ணிக்கை மாத்திரம் தரப்படுகிறது)

அ. தமிழ் வாக்காளர்களை இப்போதிருந்தே தமிழ் கட்சிச் செயற்பாட்டாளர்களும் ஏற்பாட்டாளர்களும் வீடுவீடாகச்சென்று சந்தித்து கலந்துரையாடுதல் - **510 பேர்**

ஆ. இப்போதிருந்தே மக்கள் செல்வாக்குள்ள கிழக்குத் தமிழ் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க விழையும் புதியவர்களை இனங்கண்டு இடம்கொடுத்து செயல்பட அனுமதித்தல் **-615 பேர்**

இ. தமிழ் கட்சிகளுக்குள் போட்டி, பொறாமையைக் களைய கருத்தாடலை ஆரம்பித்து, பொது இணக்கப்பாட்டை அனைவரதும் ஆதரவுடன் எட்டி பொதுக்கூட்டணி அமைத்து முன்னோக்கிச்செல்லல் **-570 பேர்**

ஈ. ஏனைய கட்சிகளுடன் கலந்து பேசி கொள்கைப்பிடிப்புள்ள அதேவேளை வெல்லக் கூடிய செல்வாக்குள்ளவர்களுக்கு தொகுதிப் பகிர்வில் கட்சி பேதமின்றி இடம்கொடுத்து ஆதரவளித்தல் **1128 பேர்**

உ. தமிழ் அரசியல் கட்சிகள் தமக்குள் கலந்து பேசி ஆளுமை, செல்வாக்குள்ள ஒரு பொது வேட்பாளரை எதிர்வரும் மாகாண சபைத்தேர்தலுக்கு நிறுத்தி அவரை அறிமுகம் செய்து அவருக்காக தமிழ் மக்களை அணிதிரளச்செய்தல் **1084 பேர்**

ஊ. மாகாணசபைக்குள்ள அதிகாரங்கள், செல்வாக்கு, வசதி வாய்ப்புக்கள், நன்மைகள், சேவை வழங்கும் வளம், திறன் என்பனபற்றி தமிழ் வாக்காளரிடையே பிரச்சாரத்தை இப்போதிருந்தே ஆரம்பிக்க வேண்டும் **718 பேர்**

எ. மாகாணசபையை கைப்பற்றவல்ல கூட்டணியை அடையாளங்கண்டு அவர்களுடன் சில உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல். அதுபற்றி தமிழர்களுக்கு வெளிப்படையாக முன்கூட்டியே வெளிப்படுத்தல் - **901 பேர்**

ஏ. தமிழ் கட்சிகள் கூட்டாக இணைந்து மாகாண சபையைப்பிடிக்கும் தந்திரோபாயத்தை வடிவமைக்கும் முகமாக இப்போதிருந்தே, முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் **-860 பேர்**

ஐ. தமிழ்கட்சிகள் இணைந்து மாகாண சபையைப்பிடிக்கும் தந்திரோபாயத்தை வடிவமைக்கும் முகமாக சிவில் அமைப்புக்கள், தமிழ் சமூக சமயத் தலைவர்கள், கிராம, மாவட்ட மட்ட அமைப்புக்களை இப்போதிருந்தே நாடுதல் - **988 பேர்**

இருபத்தினான்காவது வினாவான **"தமிழ் வாக்காளர்களை வாக்களிக்கும் வகையில் அரசியல் மயப்படுத்த செய்ய வேண்டிய 5 விடயங்கள்"**சார்பான மக்களின் நிலைப்பாடு. (ஒவ்வொரு கருத்துக்கும் வாக்களித்தோரின் எண்ணிக்கை மாத்திரம் தரப்படுகிறது)

- கிழக்குத் தமிழர் அரசியல் அடையாளம், பிரதிநிதித்துவத்தில் ஆர்வமுள்ளவர்கள் தமது மட்டத்தில் பொது மக்களை சந்தித்து தமிழ் கட்சிகளுக்கு வாக்களிக்க ஊக்கப்படுத்தல் - **984 பேர்**
- மக்கள் கூட்டங்களை ஏராளம் பொது அமைப்புக்கள் ஏற்படுத்தி மக்களை தெளிவூட்ட வேண்டும் - **847 பேர்**
- குடும்பச் சந்திப்புக்களை தமிழ் அரசியல் கட்சிகளின் தொண்டர்கள் செய்யவேண்டும் **460 பேர்**
- தமிழ் அரசியல் கட்சிகள் இளையோரை கவரும் வகையில் செயல்பாடுகளை கிராம மட்டத்தில், நகர மட்டத்தில் ஒழுங்கு படுத்தவேண்டும். **719 பேர்**
- இளையோர் அரசியல் குழுக்களை பலமட்டங்களிலும் அமைக்கவேண்டும் **917 பேர்**
- மாவட்ட, மாகாண மட்டத்தில் அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிப்பதை உறுதியாகக் கூறவேண்டும் **611 பேர்**
- மாவட்ட மட்டத்தில் மாகாண சபை செய்யக்கூடியவற்றை தெளிவாக மக்களுக்கு விளங்க வைத்து வாக்குக் கேட்க வேண்டும். **584 பேர்**
- மாவட்ட, மாகாண மட்டத்தில் பத்திரகையாளர்களை தொடர்ந்து சந்தித்து உறவைப்பேணி அவர்கள் உதவியைப் பெறல். **326 பேர்**

**இருபத்தைந்தாவது வினாவான "தொழில்சார் தமிழர் சமூகங்களை அணிதிரட்டச் செய்யக்கூடிய 3 விடயங்கள்" சார்பான மக்கள் நிலைப்பாடு**

- தொழில்சார் சமூகங்களாக அவர்களைச் சந்தித்தல் - **867 பேர்**
- அவர்களது பிரச்சனைகளை தெளிவாக தொகுத்து திரட்டி எடுத்தல். - **418 பேர்**
- தொழில்சார் சமூக பிரதிநிதிகளை மாவட்ட மட்டத்தில் அணிதிரட்டி செயல்பட வைத்தல்.- **208 பேர்**
- அரச உத்தியோகத்தர்களின் உதவியைப்பெறும் வகையில் அவர்களை உதாசீனம் செய்யாது தொடர்ச்சியாகச் சந்தித்து கலந்துரையாடி அணிதிரட்டுதல் - **478 பேர்**
- பத்திரிகையாளர்களுடன் தொடர்ச்சியாக சினேகபூர்வமான உறவைப்பேணி அவர்கள் உதவியைப்பெறல். **327 பேர்**

**பொதுவான மக்கள் விமர்சனம்:**மேற்கூறப்பட்டவை அனைத்தும் பிரதான தமிழ் கட்சிகளால் செய்யப்படவேண்டியவை. காலம் தாழ்த்தாது இப்போதிருந்தே ஆரம்பிக்கவேண்டும். தமிழ் கட்சிகள் மேற்குறிப்பிட்டவற்றை முன்னெடுக்கும் வகையில் தமது கட்சிகளை மீள ஒழுங்கமைக்கவேண்டும். தமிழ் கட்சிகள் கிராம-பிரதேச மட்ட சிறு அரசியல் குழுக்களை அமைத்து மக்களுடன் செயல்படவேண்டும். மக்களை நாடிச்செல்லவேண்டும். பத்திரிகையாளர்களை அணிதிரட்டி அவர்களது பிரச்சார உத்திகளை பயன்படுத்தவேண்டும்.

**தமிழ் அரசியல் போக்கை பலப்படுத்தி தமிழர் தரப்பு பயணிக்கவேண்டிய திசையில் செலுத்தி, மக்களுடன் இணைந்த தமது அரசியல் பயணத்தை காத்திரமாக முன்னெடுக்க,தமிழ் மக்களால் பரிந்துரைக்கப்படும் விடயங்களில் முதன்மையானவை**

**உள்ளக மறுசீரமைப்பு** :தமிழ் மக்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர்களின் மிகப்பெரிய செல்வாக்குள்ள கட்சி என்றவகையில் சமகால மற்றும் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் கட்சி மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படவேண்டும்.

- அரசியல் பணிக்கான கிராம, பிரதேச, மாவட்ட மட்ட ஆகக்குறைந்த மட்ட கட்டமைப்புக்களை நிறுவி, ஏற்பாட்டாளர்கள் செயற்பாட்டாளர்கள், தொடர்பாளர்கள், இணைப்பாளர்கள், இளையோர் குழுக்கள்,மகளிர் அணிகள்,இளையோர் பிரதிநிதிகள், அரசியல் செயற்பாட்டுக் குழுக்களை நிறுவி இயங்கச் செய்தல்.
- பிரதேச, மாவட்ட மட்ட மக்கள் அரங்கங்களை இருவழிக் கருத்தாடலுக்கு உதவியாக அமைத்து நடத்தும் சிவில் அமைப்பு செயற்பாட்டாளர்களையும் பொறுப்பாளர்களையும் தொண்டு அடிப்படையில் கண்டுபிடித்து நியமனம் செய்து அவர்களை இயங்க வைத்தல். மக்கள் கருத்தாடல் மன்றங்களில் பெறப்படும் முக்கிய கருத்துக்களை மத்திய செயற்குழுவுக்கு அறிவித்து அதற்கு தீர்வு காணும் படிமுறையை உருவாக்குதல்.(உள்ளுராட்சி மன்ற, மாகாணசபை மற்றும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களையும் மக்கள் மதிக்கும் பொது வேட்பாளர்களையும் இனங்காண இது வழிசமைக்கும். அத்துடன் மக்களின் ஆதங்கங்கள், குறைகளை கேட்டறிந்து அவர்களுக்கு முடிந்த உதவிகளைச் செய்ய இப்படிமுறை உதவும்)
- மக்களின் பொருளாதார, வாழ்வாதார, வேலைவாய்ப்புசார் பிரச்சனைகளை கேட்டறிந்து அவற்றின் மட்டில் மக்களுக்கு உதவும் கட்சியின்அபிவிருத்திக்குழுவை நிறுவி, கட்சியின் ஒரு அங்கமாக அக்குழு துறைசார் நிபுணர்கள், அழுத்தம் கொடுக்கும் குழுக்கள் அத்துடன் நிதிநிறுவனங்களுடன் செயற்படக்கூடியவர்கள்,பொது அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அமைச்சுகள் போன்றனவற்றுடன் தொடர்புபட்டவர்களுடன் தொடர்ந்து இயங்க கட்சி ஒரு கட்டமைப்பை உருவாக்கவேண்டும். உண்மையில் கட்சிக்குள் ஒரு அபிவிருத்திக்கான உயர் பீடம் நிறுவப்படவேண்டும். அது தொடர்ச்சியாக மாவட்ட மட்டத்தில் தனது கட்டமைப்புக்களை நிறுவி தமிழ் மக்களிடையே செயற்படவேண்டும்.
- கட்சியின் உயர் பீடம், மாவட்ட மட்ட அரசியல் சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகள்சார் கருத்தரங்குகள், செயலமர்வுகள்,மகாநாடுகள், இளையோர் பாசறைகள், மகளிர் மகாநாடுகள், சமயாசமய பொது நிகழ்ச்சிகளை பிரச்சார நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகவும் மக்களுடன் இணைந்து பயணிக்கும் உபாயமாகவும், மூன்று மாவட்டங்களிலும் முறையாக அனைத்து பாராளுமன்ற மற்றும் உள்ளுராட்சி மன்றப்பிரதிநிதிகளுடன் இணைந்து ஒழுங்குசெய்து நடத்தவேண்டும்.

- கருத்தறியும் சுதந்திரம் மதிக்கப்படும் ஜனநாயக அரசியல் பரப்பில் தமது தலைமைகள் உண்மையில் எத்தகைய தந்திரோபாயங்களைக் கொண்டுள்ளனர், அதிலுள்ள சாதகம், பாதகம், தமிழ் மக்களுக்கு கொண்டுவரும் நேர்தகு மாற்றம் போன்றனவற்றை அறியும் உரிமை வாக்காளர் என்றமட்டில் தமிழ் மக்களுக்கு உள்ளது. இத்தகைய விடயங்களை தமிழ் மக்களுக்கு ஒழிவு மறைவு அற்றவகையில் தெரியப்படுத்தும் பொறுப்பு தமிழ் தலைமைகளுக்கு உள்ளது. எனவே இவ் உரிமையை தமிழ் மக்களுக்கு வழங்கி கட்சி அரசியலை தமிழர் அரசியலாக மாற்றவேண்டும்
- தமக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத ஒட்டுமொத்த தமிழ்மக்களையும் தேர்தலுக்கப்பால் பொறுப்புடன் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தலைமைகள், மக்களிடம் சென்று மக்கள் எவற்றை எதிர்பார்க்கின்றனர், அவர்களது உடனடித்தேவை எவை, அவர்களது வாழ்வியல் தேவைகள் எவை எனக் கருத்தறிந்து அவற்றை

தமது உரிமை மைய அரசியல் அணுகு முறையுடன் இணைத்து தமிழ் மக்களை மையப்படுத்திய செயல்பாட்டை சிங்கள அரசுடன் முன்னெடுக்கும் தார்மீகக் கடமையில் இருந்து தமிழ் தலைமைகள் பின்வாங்கக்கூடாது. பின்வாங்கவும் முடியாது. அத்துடன் அடுத்த தலைமுறைத் தலைமைகளை இனங்கண்டு அவர்களுக்கு வாய்ப்பளித்து வளர்த்துவிடவேண்டும்.

- பொறுப்புவாய்ந்த தமிழ் கட்சிகளும் அதன் தலைமைகளும் இருவழித்தொடர்பாடலை அரசியலின் முதுகெலும்பாக நம்பவேண்டும். கிடைக்கும் தொடர்பூடகங்களைப் பயன்படுத்தி கருத்துப்பகிர்வதை விடுத்து தமக்கென கருத்துப்பரிமாற்ற முறையை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். தொடர்ந்தும் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட பத்திரகையாளர் சந்திப்புக்களை நடத்தி தமது முன்னெடுப்புக்கான கொள்கை விளக்கங்களையும் விபரங்களையும் வெளியிடவேண்டும்.

**தமிழ் அரசியல் கட்சிகளிடையே மோதல் தவிர்த்து இணைந்தும் இணையாத அரசியல் பயணம்:** தற்போது தமிழர் முன் உள்ள சேறுபூசும், ஒருவரை ஒருவர் கடுமையாத் தாக்கும், ஊடகப்போர் நடத்தும், பலமுள்ள கட்சிகளை பலவீனப்படுத்தி மக்களை ஈர்க்கும் சாணக்கியமற்ற அரசியலால் தமிழ் மக்கள் மிகவும் மோசமாகப் பலவீனப்படுத்தப்படுகிறார்கள். பிரித்து சிதறடிக்கப்படுகிறார்கள். இது கட்டாயமாக தவிர்க்கப்படவேண்டம். பின்வருவனவற்றை தமிழ் கட்சிகள் தமிழ் மக்களுக்காச்செய்து தமிழர் பலத்தை கட்டமைக்கவேண்டும்

- ஊடகங்களைப் பயன்படுத்தி தாம் விரும்பாதவர்களை, போட்டி எனக் கணிப்பவர்களை, கொள்கையில் உடன்படாதவர்களைதாக்குவதை ஒரு வழமையாகக் கொண்டிருக்கக்கூடாது. தவிர்க்கவேண்டும். மூன்றாம் தரப்புக்கூடாக பேசி அத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ளவேண்டும் அல்லது மோதல் தவிர்ப்பை செய்யவேண்டும்.
- மற்றைய அரசியல் கட்சியின் உள்ளக முரண்பாடுகள், தந்திரோபாய கொள்கை சறுக்கல், மக்களுடனான முரண்பாடுகள் போன்றனவற்றை எப்போதும் தமது தாக்குதல் அஸ்திரங்களாகப் பயன்படுத்தி சேறுபூசு அரசியலைச் செய்து தமது கொள்கைச் சறுக்கல், பலவீனம், மக்கள் செயல்வாக்கற்ற தன்மை போன்றனவற்றை மூடிமறைத்து அரசியல் செய்யும் தமிழ் கட்சிகள், அதனை தமிழ் மக்களின் விடிவுக்காகச் செய்யக்கூடாது. சமமற்ற இரு கோல்களின் உயரத்தை சமப்படுத்த உயரமான கோலை உடைத்து சமப்படுத்தும் அல்லது சிறிய கோலைப் பெரிதாகக்காட்டுவதை சில தமிழ் கட்சிகள் செய்யக்கூடாது. தமது அர்ப்பணிப்பு, மக்களுடனான இணைந்த செயல்பாடு, தெளிவான யதார்த்தமான கொள்கை போன்றனவற்றால் தம்மை மற்றக்கட்சிகளிடமிருந்து முதன்மை பெற்ற கட்சியாக மாற்றிக்கொள்ள வேண்டும். தற்போது தமிழ் மக்களுக்குத்தேவை தமிழ் மக்களின் வாக்குகளை பெருமளவில் பெற்று தமிழ் பிரதிநிதித்துவத்தை அதிகரித்து சோரம்போகாது அரசியல் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதும், அவ்வதிகாரத்தால் மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதும், அதைச்செய்யவல்ல மக்கள் செல்வாக்குள்ள தமிழ் கட்சிகளும்தான்.

## தமிழ் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க தமிழ் மக்கள் கூறும் ஆலோசனைகள்

பாராளுமன்றத்தேர்தலில்

- தமிழ் மக்களின் தனித்துவ தேசிய அடையாளம், இருப்பு,கணிப்பு இவற்றை விட்டுக்கொடுக்காது குரல் எழுப்பவல்ல தமிழ் கட்சிகளை ஏனைய சிறிய கட்சிகள் குழப்பக்கூடாது. பாராளுமன்றம் செல்லுமளவுக்கு ஒரு தேர்தல் தொகுதியில்தானும் வாக்குகள் பெறுவது கடினம் என்ற மட்டில்,விலகி நின்று அதிக தமிழ் பிரதிநிதித்துவத்தை பாராளுமன்றில் கொண்டிருக்கும் வண்ணம் கட்சி அரசியலுக்கு அப்பால் வெல்லக்கூடிய வேட்பாளருக்கு தமிழ் மக்களை வாக்களிக்க ஊக்கப்படுத்தவேண்டும்.
- இத்தகைய தேர்தலில் சுய கட்சி அரசியல் செய்யாமல் யாருக்கு வாக்களித்தால் அவர் பாராளுமன்றம் சென்று தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து நல்லது செய்வார் என ஆய்வு செய்து அவரின் செல்வாக்கை தரமிறக்காது கட்சி அரசியலுக்கப்பால் ஏனைய கட்சிகளுடன் பேசி மக்கள் ஆதரவு பெறும் வண்ணம் கூட்டாதரவைக் கொடுக்கவேண்டும்
- தேசிய கட்சிகளில் இணைந்து தேர்தலில் களமிறங்குவோருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கக்கூடாது. (இவ்வாலோசனை மட்டில் மாற்றுக் கருத்தும் ஆய்வில் கலந்துகொண்டோர் வெளிப்படுத்தினர். தேசிய கட்சியில் அதுவும் ஆட்சியமைக்கக்கூடிய கட்சியில் வாக்குக்கேட்கும் செல்வாக்குள்ள தமிழ் வேட்பாளரை ஆதரித்து வெற்றிபெறச்செய்தால் அவர் அமைச்சு அந்தஸ்த்து பெற்று தமிழ் மக்களுக்க சேவை செய்யும் வாய்ப்பு கிட்டும். அது தமிழ் மக்களுக்கு சார்பானது என்பதாகும்) குறிப்பாக வேற்று இனத்தவர் அக்கட்சியின் பட்டியலில் மேலிடத்தில் இருக்கும் பட்சத்தில் தமிழ் மக்கள் வாக்களிப்பது தற்போதுள்ள தேர்தல் முறையில் ஆபத்தானதே என்பதும் மறுதரப்பு வாதமாகும். மூன்றாத்தரப்பு வாதமாக வெல்லக்கூடிய அதேவேளை தேசிய கட்சியில் போட்டியிடும் வேட்பாளருடன் கலந்துரையாடி பொது தமிழ் வேட்பாளராக அத்தேர்தலில் களமிறக்கினால் தமிழ் பிரதிநிதித்துவம் அதிகரிக்கும் என்பதாகும்.

மாகாண சபைத் தேர்தலுக்கு
எடுகோழுக்கிணங்க ஐந்து தமிழ் கட்சிகள் களத்தில் குதிக்கும் வாய்ப்புள்ளது. 2018ம் ஆண்டு தேர்தலுக்கிணங்க 4 சிறிய கட்சிகளும் 100,000க்கும் சற்று அதிகமான வாக்குகளைப்பெறும் வாய்ப்புள்ளது. சுயேச்சைக்குழுக்கள் களமிறங்கினால் இன்னுமொரு 50,000 வாக்குகளைப் பிரிக்கலாம். மேலும் தேசிய கட்சிகளில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களும் ஒரு சிறு தொகுதி வாக்குகளைப் பிரிக்கலாம். மொத்தத்தில் கிட்டத்தட்ட 200,000 வாக்குகள் மூன்று மாவட்டங்களிலும் பிரிந்துபோனால் அது கிட்டத்தட்ட 4 தமிழ் வேட்பாளர்களைக் கொண்டுவரத்தக்க

கொள்தகுதிறனைக்கொண்டது. இருப்பினும் அளிக்கப்படும் வாக்குகள் கட்சிகளுக்கிடையில், குழுக்களுக்கிடையில் சிதறிப் பரந்து காணப்படுமாயின் தமிழ் பிரதிநிதித்துவத்தை அவ்வாக்குகள் வெளிக்கொண்டுவரப்போவதில்லை. தற்போதுள்ள சூழ்நிலையில் 60,000த்தை கடந்த வாக்குகளை கடந்த தேர்தலில் பெற்ற ஒரு சிறு கட்சி ஒரு ஆசனத்தைப்பெறும் வாய்ப்பை மட்டக்களப்பில் பெறலாம்.

ஆக ஒட்டுமொத்தத்தில் பெரிய தமிழ் கட்சி இம்முறையும் 11 ஆசனங்களைப்பெறுமா என்பது சந்தேகமே. அதிகரித்த வாக்கு வங்கியை அது கோண்டுள்ளபோதிலும் ஏனைய சமூகங்களும் தமது சமூகம்சார் கட்சிகளினதும் அவர்கள் ஆதரிக்கும் தேசிய கட்சிகளினதும் அதிகரித்த வாக்கு வங்கியையும் கொண்டுள்ளனர் என்பது இங்கு கவனிக்கப்படவேண்டியது. எனவே தமிழர் தரப்பு தம்மால் பெறக்கூடிய ஆகக்கூடிய 15 ஆசனங்களையாவது இலக்கு வைத்து அதைப்பெறும் தந்திரோபாயங்களை வடிவமைக்கவேண்டும். நடைமுறையில் எந்த ஒரு தனிக் கட்சியும் இதனை தனியே செய்யமுடியாது. ஆதலால் தமிழர் அரசியல் இருப்புப் பற்றி பேசுவோர் அனைவரும் ஒன்றிணைந்து கலந்த பேசி விட்டுக்கொடுப்புக்களுடன் தேர்தல் வியூகம் அமைத்தாலே இது சாத்தியம். அதனடிப்படையில் ஆய்வில் கலந்துகொண்டோர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

- இணைந்து தொகுதிப் பங்கு பிரித்து தம்மிடையே மோதிக்கொள்ளாமல் போட்டியிடல்,அல்லது தனித்துப்போட்டியிட்டாலும் தொகுதிப் பகிர்வை ஏற்படுத்தி தம்மிடையேயான மோதலைத் தவிர்த்து, வாக்குகள் பிரிந்துபோதலைக் கட்டுப்படுத்தி போட்டியிடல். வெற்றி பெற்றதும் கூட்டு ஆட்சியை மாகாண சபையில் ஏற்படுத்துதல்.
- முதலில் நல்லவேட்பாளர்களை தெரிவு செய்து ஏனைய தமிழ் கட்சிகளிடம் பேசி அவர்களுக்கு ஆதரவுத்தளத்தை ஏற்படுத்தவேண்டும். சிறிய கட்சிகளுக்கும் அவர்கள் செல்வாக்குள்ள பிரதேசத்தில் ஒருவரையாவது நிறுத்த வாய்ப்பளித்து போட்டிக்கு அங்கு இன்னுமொருவரை நிறுத்தாது பார்த்துக்கெள்ள வேண்டும்., கொள்கை அடிப்படையில் தமிழ் கட்சிகள் மூன்றாந்தரப்புக்கூடாக கலந்துபேசி தற்காலிக புரிந்துணர்வு அடிப்படையில் தேர்தல்களை எதிர்வு கொள்ளவேண்டும். சேறுபூசுதல், குறைகூறுதல், எதிர்மறை விமர்சனங்களை கட்டாயமாகத் தவிர்க்கவேண்டும்.
- தமிழ் அரசியல் கட்சிகள் தமக்குள் கலந்து பேசி ஆளுமை, செல்வாக்குள்ள ஒரு பொது வேட்பாளரை எதிர்வரும் மாகாண சபைத்தேர்தலுக்கு நிறுத்தி அவரை அறிமுகம் செய்து அவருக்காக தமிழ் மக்களை அணிதிரளச்செய்தல்.
- மாகாணசபைக்குள்ள அதிகாரங்கள், செல்வாக்கு, வசதி வாய்ப்புகள், நன்மைகள், சேவை வழங்கும் வளம், திறன் என்பனபற்றி தமிழ் வாக்காளரிடையே பிரச்சாரத்தை இப்போதிருந்தே ஆரம்பிக்க வேண்டும். மக்கள் வாக்களிக்கும் வண்ணம் ஆர்வம்கொள்ளச் செய்யவேண்டும்.
- கூட்டணி அமைத்து தமிழ் அரசியல் கட்சிகள் அதிகாரத்தை பிடிப்பது தவறில்லை. ஆனால் அதிகாரத்தைப் ஏனைய இனத்தவரிடம் பறிகொடுப்பதுதான் பிரச்சனை. தமிழ் கட்சிகள் தமது வியூகத்தை முன்கூட்டியே தமிழ் வாக்காளர்களுக்குக் கூறவேண்டும். பத்துப் பதினைந்துபேர் கூடிக்கதைத்து முடிவெடுத்து செயல்படக் கூடாது, தமிழ் மக்கள் முடிவுகளை ஆதரிக்கும் வண்ணம் அணிதிரட்டப்பட்டு வாக்களிக்கச்செய்யவேண்டும்.
- தமிழ்கட்சிகள் தாமாக இணைந்து அல்லது மூன்றாந் தரப்புக்கூடாக மாகாண சபையைப்பிடிக்கும் தந்திரோபாயத்தை வடிவமைக்கும் முகமாக சிவில் அமைப்புக்கள், தமிழ் சமூக சமயத் தலைவர்கள், கிராம, மாவட்ட மட்ட அமைப்புக்களை இப்போதிருந்தே தொடர்புபட்டு தமது அரசியல் வேலைத்திட்டத்தை பரவலாக்கி செயல்படவேண்டும்.

## நிறைவு

ஒரு இனக்குழுமம் அனுபவிக்கும் ஜனநாயக இடைவெளி என்பது, எப்போதும் பலதரப்பட்ட கொள்கைகள், நம்பிக்கைகள், எண்ணங்கள், நிலைப்பாடுகள், அபிப்பிராயங்கள் இப்படி ஏராளமான மானுட சமூகப் பொருளாதார, அரசியல்சார் நடத்தைகளைக் கொண்டு இயங்கும் வண்ணம் அவ் இனக்குழுமத்தின் உறுப்பினர்களை இட்டுச்செல்கிறது அல்லது அதற்கான வாய்ப்பை அளிக்கிறது.அதனால் தானாகவே எவரும் ஓரணியில் இணைவது அல்லது இணைக்கப்படுவது அல்லது நீடித்திருப்பதென்பது 21ம் நூற்றாண்டின் மிகப்பெரிய சவால். இதனை எவரும் நீதி நெறிக்குப் புறம்பே கட்டாயப்படுத்தி செய்யவும் முடியாது. எதுவுமே இலகுவாக கட்டுக்குள் நிற்கப்போவதுமில்லை. அத்துடன் தனி மனித சுதந்திரத்தின்பால்பட்டனவாகவும் இத்தகைய நடத்தைக்கோலங்களும் அவற்றுக்கான விழுமியங்களும், மனநிலைகளும் திகழ்வதால் எப்போதும் இலகுவாக மனிதர்கள் அவற்றை விட்டுக்கொடுப்பதில்லை. ஆயினும் மிக நுட்பமுடன்,நேர்மையான வினைத்திறன்மிகு திட்டம் மற்றும் அமுலாக்கல் வாயிலாக உண்மையின்பால் பட்ட கருத்துக்களை கருத்தேற்றம் செய்து பெரும்பாலான உறுப்பினர்களை ஒரு கருத்தின்பால் நம்பக்கைகொள்ளச்செய்து அணிதிரட்ட முடியும். அணிதிரள்வதற்கான சூழ்நிலையை உருவாக்கவும் முடியும்.இதனையே தமிழ் போராளிகள் செய்தனர்.வெற்றியும் கண்டிருந்தனர்.

இன்று கிழக்குத் தமிழரின் அரசியல் இருப்புக்காக, அத்தமிழர்களை வரலாறு தந்த கொள்கையின்பால்,வினைத்திறன்மிகு தொடர்செயற்பாட்டுக்கூடாக, மக்கள் அரசியல் எனும் மகுடத்தின்கீழ்ஓரணியில் அணிதிரட்டி,அக்கொள்கையை அவர்கள் நம்பி தொடர்ந்து ஏற்கும் வகையில், அதற்காக அர்ப்பணிப்புச் செய்யும்வகையில் மாற்றமுடியும். தற்போதுள்ள செல்வாக்கை முதலீடுசெய்து

அத்தகைய பேண்தகு நிலைகொண்ட நேர்தகு மாற்றங்களை ஏற்படுத்தி தமிழ் மக்களை யாரும் நிராகரிக்கமுடியாத அரசியல் சமூகமாக நிலைபெறச்செய்யமுடியும். இதில் எவ்வித மாற்றுக்கருத்துக்களுக்கும் இடமில்லை. இவ் அடைவை கொண்டுவருவதற்கு யார் அடிப்படைக் கொள்கைத்திறன் கொண்டவர்கள் என்பது தமிழ் மக்கள் முன் உள்ள வினா? யதார்த்தத்தைப் பார்க்கையில் கிழக்கில் 70 விகிதத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் செல்வாக்கைக்கொண்ட ஒரு தமிழ் கட்சி உள்ளது. அதுவே இதனை முன்னெடுக்க வேண்டுமென்பது தவிர்க்க இயலாததொன்று. இவ் ஆய்வறிக்கையினூடாக அதுவே மக்களால் பலமாக வெளிப்படுத்தப்பட்டும் உள்ளது.

## கிழக்கு வாழ் தமிழரின் அரசியல் பயணத்திற்கான தேடல்

மக்கள் பகிர்ந்து கொண்டவைகளில் இருந்து.......

- அறிமுகம்
- ஆய்வின் நோக்கம்
- வாக்காளர் வகை
- தேர்தல்களும் முடிவுகளும்
- கருத்துக்கணிப்பு வினாக்களும் பதில்களும்

## குடிசன மதிப்பீடு 2012

| | | |
|---|---|---|
| • தமிழர் | 617,295 | 39.79% |
| • முஸ்லிம் | 569,738 | 36.72% |
| • சிங்களவர் | 359,136 | 23.15% |
| • ஏனையோர் | 5,212 | 0.34%. |

கடந்த 6 வருடங்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

## அரசியல் வரலாறு

- தமிழர் உரிமைப்பிரச்சனை 1948 சுதந்திர காலத்திலிருந்தே உருவாகிவிட்டது.

காலத்திற்கு காலம் முன்வைக்கப்பட்ட தீர்வுகள்:

சமஸ்டி

சுயநிர்ணயம்

தமிழ் ஈழம்

## போராட்ட வடிவம்

- 30 ஆண்டுகள் அரசியல் ரீதியான அகிம்சை வழிப் போராட்டம்
- 1970 பிற்பட்ட காலம் ஆயுத போராட்ட சிந்தனை
- 1983 பின் ஆயுத போராட்டம்
- 2009 தீர்வற்ற நிலையில் ஆயுத போராட்டம் மௌனிக்கிறது

## இன்றைய சூழல்

- சமஸ்டி முறையிலான தீர்வு இன்றும் போராடு பொருளாக தமிழ்த் தரப்பு கொண்டுள்ளது.
- இத்தகைய வரலாற்றுச் சூழலில் வடகிழக்குத் தமிழர்கள் தமது அரசியல் எதிர்காலம், இருப்பு, அடையாளம் என்பன திட்டமிடப்பட்டவகையில் சிதைக்கப்பட்டுவிடுமோ என்ற பெரும் அங்கலாய்ப்பில் இன்று வாழ்கின்றனர்.

- இத்தகைய மனக்குமுறல் வடமாகாணத்திலிருந்து கிழக்கு மாகாணம், நிர்வாக ரீதியாக நிரந்தரமாகப் பிரிக்கப்பட்ட 2006 புரட்டாதி 16ம் நாளின் பின்னான காலத்தில் இருந்து வலுப்பெற்றதாக மாறிக்கொண்டே வருகிறது. கிழக்கின் பல் இனச் சமூகச் சூழலில், இருப்பதையும் இழந்து விடுவோமோ என்ற தவிப்பில் கடும் விமர்சனங்களை திறந்த பொதுவெளியில் தமிழ் தரப்பார் பலரும் பலவகையில் கட்சிபேதமின்றி வெளியிட்டுவருவது கண்கூடு.

- அத்தகையதொரு சூழ்நிலை, தனிக் கிழக்குத் தமிழர் அரசியலின் சமகாலப்போக்கு, இருப்பு, பிரதிநிதித்துவம், அடையாளம் பற்றிய **"மக்கள் கருத்தாடல் தளம்"** பலமட்டங்களிலும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்டதாக அமையாத சூழ்நிலையில், ஆரோக்கியமற்ற அதேவேளை எவ்வித நேர்தகு மாற்றத்துக்கும் இட்டுச்செல்லாத அத்தகைய திறந்தவெளி விமர்சனங்கள், சேறுபூசு அரசிலின்பால் பட்டதாகவே பொதுவாக உணரப்படுன்றது.

- தமிழ் வாக்காளர்களும் தமிழ் அரசியல் வாதிகளும், அவர்களது தலைமைகளும் தம்மை சுய ஆய்வுக்கு உட்படுத்தி தமது தந்திரோபாயத்தை புதுப்பித்துக்கொள்ளும் வகையில் அவை கட்டமைக்கப்பட்டு நல் மாற்றங்களை ஏற்படுத்துவனவாக உருமாற்றம் பெறவேண்டும் என்பது மறுக்கமுடியாத வரலாற்றுத்தேவை.

- கிழக்குத் தமிழர்களுக்கும் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்ய விளைபவர்களுக்குமான இருபக்கத் தொடர்பாடல் அல்லது கருத்தாடல் தளம் (கீழிருந்து மேல்நோக்கி – மேலிருந்து அடி மட்டம்வரை) ஒன்று இருப்பதாக யாரும் காணாத அல்லது எண்ணாத சூழ்நிலையில், தமிழ் கட்சிகளின் அரசியல் தொடர்ச்சியாகவே இடம்பெற்று வருகின்றமை ஆரோக்கயமற்றதென்பது வரலாறு காட்டும் உண்மை.

- அத்துடன் **பெரும்பான்மையான தமிழ் வாக்காளர்களின் ஏகோபித்த கருத்துக்கள், அபிலாசைகள், உள்ளக் கிடக்கைகளை உள்ளீர்த்த மக்கள் அரசியல்** இடம் பெறவில்லை என்ற விமர்சனம் எல்லாமட்டங்களிலும் வியாபித்து நிற்கின்றது. இத்தகைய அம்சம் விமர்சனங்களுக்கப்பால் வாக்களிப்பு விகிதாசாரம், பெறும் தமிழ் பிரதிநிதித்துவம் என்பனவற்றில் செல்வாக்குச்செலுத்துவனவாக இருந்தும் வருகிறது.

- மேலும் 2006ன் பின்னான கிழக்கு மாகாணத்தில் தமிழ் வாக்காளர்களின் வாக்களிப்பு புள்ளிவிபரத்தை முறையாக ஆராய்ந்து பெறும் பெறுபேற்றின் அடிப்படையில் வரவிருக்கும் மாகாணசபைத்தேர்தலில் தமிழ் பிரதிநிதித்துவத்தின் சாத்தியப்பாடுகளை எதிர்வுகூறுவதன் வாயிலாக சாத்தியமான முன்னேற்பாடுகளை, மாற்றங்களை, தந்திரோபாயங்களை தமிழர் தரப்பு மேற்கொள்ளச்செய்வதும் முக்கிய தேவையாக உணரப்படுகிறது.

- அந்தவகையில் ஒரு முதல்படி ஆய்வினை முன்னெடுத்து அதன் விசாரணைகளில் கண்டுகொண்ட அகஒளிக்கீற்றுக்களை மாற்றத்தை ஏற்படுத்தவல்ல அனைத்துத் தமிழ் தரப்பார் முன்னிலையிலும் சமர்ப்பித்து அனைவரையும் உற்சாகத்துடன் இன்னுமதிகமாக செயல்பட வைக்க இம்முயற்சி மேற்கொள்ளப்படுகிறது

## ஆய்வின் நோக்கம்,

- கிழக்கு மாகாணத்தில் தமிழ் வாக்காளர்களின் வாக்களிப்பு புள்ளிவிபரத்தை முறையாக ஆராய்ந்து பெறும் பெறுபேற்றின் அடிபடையில் வரவிருக்கும் மாகாணசபைத்தேர்தலில் தமிழ் பிரதிநிதித்துவத்தின் சாத்தியப்பாடுகளை எதிர்வுகூறுதல்.
- அதி உச்ச தமிழ் பிரதிநிதித்துவத்தை பெறும் தந்திரோபாயங்களை அடையாளம் காணுதல்.
- தமிழ் வாக்காளர் ஒருவர் ஏன் வாக்களிக்கவேண்டும் என தெளிவுபடுத்துவதுடன் ஒருவர் வாக்களிக்காவிடத்து ஏற்படும் பாதக நிலையினை எடுத்துரைத்தல்.
- எதிர்வரும் கிழக்கு மாகாணசபை தேர்தல் தொடர்பாக தமிழ் மக்கள் கொண்டுள்ள உண்மையான நிலைப்பாட்டினை தமிழ் அரசியல் கட்சிகளுக்கு புள்ளிவிபரத்துடன் அழுத்திக்கூறுதல்.

## 2007 பின்

- 2007இல் கிழக்கு முற்றாகப் போராளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அத்துடன் கொழும்பின் நேரடி அரசியல் காய்நகர்த்தலுக்கு முற்றாக கிழக்கு உட்பட்டது. தமிழர் உரிமைப் போராட்டம் எனும் குதிரை, பொது ஜனநாயக அரசியல் எனும் திறந்த வெளியில், தேர்தலுக்கூடாகத் தெரிவாகும் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் கைகளில் கொடுக்கப்பட்டது.

- அக்குதிரை இலக்கு நோக்கிச் செலுத்தப்படுகிறதா, ஆம் எனின் அதன் வேக வினைத்திறனை எவ்வாறு அதிகரிக்கலாம், இல்லையெனின் அதனை எவ்வாறு இலக்கைநோக்கி திசைதிருப்பலாம் என்பன போன்ற தேடல்கள் வரலாற்றுத்தேவையாக தமிழ் அரசியல் கட்சிகளைச் சாராத தமிழரின் அரசியல் இருப்பு, அடையாளம், அதிகாரம்மிகு பிரதிநிதித்தவம் பற்றி சிந்திப்போரிடையே இன்று வியாபித்து நிற்கிறது.

- இத்தகையதொரு சூழ்நிலையில், கிழக்குத் தமிழர்கள் 2019ல் ஒரு மாகாணசபைத்தேர்தலையும் 2020ல் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களையும் சந்திக்கும் சாத்தியக்கூறு உள்ளது.
- 2012ல் இடம்பெற்ற மாகாணசபைத்தேர்தல் தமிழர்களுக்கு செல்வாக்கு மிக்க அதிகார ஆட்சியை மாகாணசபையில் தந்திருக்கவில்லை.
- அத்துடன் 2015ல் நடைபெற்ற ஆட்சிமாற்றமும் நல்லாட்சி என்றகோதாவில் தமிழர் வாழ்வில் பெரிய நல்மாற்றங்களை ஏற்படுத்தவும் இல்லை என்ற பரவலான அதிருப்தியும் அங்கலாய்ப்பும் அனைத்துத் தமிழ் தரப்பினரிடையேயும் வலுப்பெற்று நிற்கிறது.

- மேலும் 2018 மாசி மாதத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் பெறுபேறுகள், கிழக்கு மாகாணத் தமிழர்களின் பிரதிநிதித்துவம், வேட்பாளர் தெரிவு, மக்கள் வாக்களிக்கும் ஆர்வம், வாக்களிப்பு விகிதம், வாக்களிக்கத் தடைகளாக உள்ளவை, வாக்களிக்கத்தூண்டுபவை, அக ஊக்கிகள் மற்றும் உந்துதல்கள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் மட்டிலும் கரிசனைகொள்ள வைத்துள்ளன.

- அத்தகைய கரிசனை எதிர்வரும் மகாணசபைத்தேர்தலை வினைத்திறனுடன், அரசியல் சாணக்கியத்துடன் எதிர்கொண்டு சிறப்பான ஆற்றல்மிகு பிரதிநிதித்தவத்தை தமிழ் தரப்பு தனதாக்கிக்கொள்ள என்ன செய்யவேண்டும், என்ற தேடலை மேற்கோள்ளும் தேவையை இன்னும் அதிகப்படுத்தியுள்ளது.

- இத்தேடலின் விளைவாக எதிர்வரும் மாகாணசபைத்தேர்தலில் கிடைக்கக்கூடிய பிரதிநிதித்துவத்தை ஊகித்தறிந்து அதனை அதிகரிக்கவல்ல தந்திரோபாயத்தை தமிழ் அரசியல் தலைவர்களும், அரசியல் கட்சிகளும், தமிழ் அரசியல்வாதிகளும், ஏன் தமிழ் வாக்காளர்களும் கடைப்பிடிக்கத் தூண்டுவதே இத்தேடலின் நோக்கமாகும்.

## தமிழ் வாக்காளர்களின் வகை

- முதலாம் வகையினர் தமிழர் விடுதலைப் பயண வரலாறு முழுவதும் தமிழரின் தன்மானம், உரிமை, விடுதலைசார் அரசியல் செயல்பாடுகள் போன்றனவற்றில் பங்குபற்றி அவற்றால் ஈர்க்கப்பட்டு பலமான ஆதரவு வழங்கிவரும் தமிழ் இனப்பற்றுக்கொண்ட வாக்காளர்கள்.
- இவர்களே இன்றும் பெரும்பான்மையான கிழக்குத் தமிழ் வாக்காளர்களாகத் திகழ்கின்றனர்.

- இரண்டாம் வகையினர் தேசிய அரசியல் கட்சிகளில் நம்பிக்கை வைத்து அவர்களது செயல்பாடுகளில் ஈர்க்கப்பட்டு அவர்களை ஆதரவளிப்பவர்கள்.
- இவர்கள் எப்போதும் தமிழ் அரசியலில் சிறுபான்மையினர்.
- அபிவிருத்தி முன்னேற்றத்துக்கு முன்னுரிமை அளிப்பவர்கள்.
- அதேவேளை உரிமை மையத் தமிழ் வாக்கு வங்கியை ஓரளவேனும் சரிக்கக்கூடியவர்களாக மெதுவாக முன்னேறியும் வருகின்றனர்.

- மூன்றாம் வகையினர் ஆயுதப்போரில் தமிழர் உரிமை விடுதலைக்காகப் போராடி பின்னான காலத்தில் பல்வேறு பாரிய முரண்பாடுகளால் இயக்கச் செயற்பாடுகளை நேரடியாகக் கைவிட்டு அரசியல் நீரோட்டத்துக்கு வந்து அரசில் கட்சிகளை கொண்டிருப்போரை ஆதரிக்கும் தமிழர்கள் ஆகும்.
- இவர்கள் ஆதரிக்கும் கட்சிகள் நிலையான வாக்கு வங்கிகளை கிழக்கில் கொண்டிருக்கவில்லை. சில கட்சிகள் வடக்கில் செல்வாக்கு மிக்கவர்களாக உள்ளனர்.

- நான்காம் வகையினர், போராளி அமைப்புக்களிலிருந்து அரசியல் கட்சியாக மாறிய மாகாணக் கட்சியை ஆதரிப்போர் ஆகும்.
- மேலும் அக்கட்சி கிழக்கில் 2008க்குப்பின்னர் தொடர்ச்சியற்று சுயமாகவும், சிலவேளை கொழும்புடன் கூட்டுச்சேர்ந்தும் அரசியல் களத்தில் உள்ளதுடன் "அபிவிருத்தியும் முஸ்லிம்களிடமிருந்து பாதுகாப்பும்" என்ற கோசத்துடன் தேசிய கட்சிகளுடன் இணைந்து செயல்பட்டும் வருகிறது.

## 2008 மாகாணசபை தேர்தல் (T- 10 ,B- 11 ,A-14)

- UPFA( TMVP, SLFP,ACMC,NC) T 59,298 B 105,341 A 144,247 TT 308,886 PC 52.21% seats T 4 B 6 A 8
- TDNA (PLOTE, EPRLF, TELO) T 00 B 7,714 A 00 TT 7,714 PC 7.71% seats B 1
- UNP T 70,858 B58,602 A 121,272 TT 250,732 PC 42.38% seats T5 B4 A 6
- JVP T 4,266 B 379 A 4,759 TT 9,390 PC 1.59% seats T 1

## 2008 தேர்தல் பற்றி ...

- கிழக்கு, இராணுவ ரீதியாக மீட்கப்பட்டு அரச கட்டுப்பாட்டில் வந்தபின் இடம்பெற்ற முதல் தேர்தலாகும். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் எனும் முன்னாள் போராளிகள் அமைப்பு 2004இன் பின் போராளித் தலைமைகளுடன் முரண்பட்டு அதனால் உருவான பிரிவிலிருந்து உருவானது.

---

- அப்போதிருந்த மகிந்த ஆட்சியை ஏற்று அவரது அரசியல் கூட்டமைப்பில் இணைந்து போராளிகளுக்கெதிராக அவர்களை ஆதரிக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கெதிராக தேர்தலில் குதித்தனர்.
- இவர்களுடன் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், சிறிலங்கா சுதந்திரக்கட்சி போன்றன இணைந்து தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களிடையே வாக்குக்கேட்டன
- கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளில் யாருக்கு யார் வாக்களித்தனர் என்பதை கண்டுகொள்ளல் மிகச் சிரமமானது.

---

- அத்துடன் இத்தேர்தல் பற்றி பல விமர்சனங்களும் உள்ளதுடன் தமிழ் தேசியக்கூட்டமைப்பு இத்தேர்தலில் பங்கெடுக்கவில்லை.
- வடகிழக்கு எனக்கூறப்படும் தமிழர் தாயகம் கூறுபோடப்பட்டதால் உருவான கிழக்கு மகாணசபை தேர்தலில் பங்கெடுப்பது தமிழ் தேசியத்துக்கு எதிரானது என்ற அடிப்படையில் அவர்கள் தேர்தலைப் புறக்கணித்தனர்.

---

- இருந்தபோதிலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அங்கம் வகித்த ஒன்றிணைந்த மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்று மகாணசபையில் ஆட்சி அமைத்தது. தமிழர் ஒருவர் முதலமைச்சரானார்.

## 2010 பாராளுமன்ற தேர்தல் (T-4,B-5,A-7)

- TNA (AITK, EPRLF,TULF, TELO) T 33,268 B 66,235 A 26,855 TT 126,358 seats T 1 B 3 A1
- TMVP T 1,712 B 16,886 A 1,490 TT 20,088 seats 00
- TULF T 00 B 4,424 A 00 TT 4,424
- UPFA T 59,784 B 62,009 A 132,096 TT 253,889 seats T 2 B1 A 4
- UNP T 39 691 B 22,935 A 90,759 TT 155,385 seats T 1 B1 A 2
- IG T 00 B 6,034 A 00 TT 6,034 seats 00

## 2010 பாராளுமன்ற தேர்தல் பற்றி

- ஆயுதப்பேராட்டம் இராணுவ ரீதியாக வெற்றிகொள்ளப்பட்ட சூழ்நிலையில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட தேர்தல் இது.
- மகாண சபையில் கூட்டாட்சியில் இருந்தபோதும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனியாகப் போட்டியிட்டு, 5 ஆசனங்களைப் பெற்ற தமிழ் தேசியக்கூட்டமைப்பிடம் ஒரு ஆசனத்தையேனும் பெறமுடியாமல் தோல்வியைக்கண்டிருந்தது.

---

- அவர்கள் வாக்கு வங்கி ஓரளவு மட்டக்களப்பில் உள்ளது என்ற போதும் மட்டக்களப்பு தமிழ் வாக்காளர்கள் இத்தேர்தலில் அவர்களை பெரிதும் ஆதரிக்கவில்லை.
- மேலும் திருகோணமலை, அம்பாறையில் கணிசமான ஆதரவை தமிழ் மக்கள் வேறு தமிழ் கட்சிகளுக்கு வழங்காது தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு வழங்கியிருந்தனர்.

---

## 2011 உள்ளூராட்சி மன்ற தேர்தல் (T-118, B-27,A-201

- TNA (AITK, EPRLF,TULF, TELO) T 34.016 B 329 A 30,108 TT 64,453 seats T 24 A 25
- UNP T 30,669 B 1,918 A 50,747 TT 83,334 seats T 19 B 1 A 36
- UPFA T 80,570 B 25,760 A 119,881 TT 226,211 seats T 30 B19 A 91
- SLMC T -- B 5,848 A 73,949 TT 79,797 seats T – B 4 A 42
- IG T 7,944 B 9,440 A 11,322 TT 28,706 seats T 3 B 4 A 4

---

## 2011 உள்ளூராட்சி மன்ற தேர்தல் பற்றி

- மூன்று கட்டங்களாக இடம்பெற்ற இத்தேர்தல் மட்டக்களப்பில் முறையாக இடம்பெறவில்லை. இருந்தபோதும் திருகோணமலை, அம்பாறையில் முன்னைய தேர்தலைக்காட்டிலும் இத்தேர்தலில் தமிழ் வாக்காளர்கள் தமது ஆதரவை தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு வழங்கியிருந்தனர். வேறு தமிழ் கட்சிகள் இத் தேர்தலில் பெரிதாக களம் இறங்கவில்லை.


---

## 2012 – மாகாண சபைக்கான தேர்தல் (Total 37 (TNA-11, UPFA-14, SLMC-7, UNP -4, NFF-1)

- TNA (AITK, EPRLF,TULF, TELO) T 44,396 (29 08%) B 104,628 (50 83%)
  A 44,769 (16 28 %) TT 193,827 (30 59%) seats T 3 B 6 A 2
- UNP T 24,439 (16.01%) B 2,434 (1 18%) A 48,028 (17 04%) TT 74,901 (11 82%)
  Seats T 1 B 0 A 4
- UPFA (TMVP,ACMC,SLFP) T 43,324 (28 38%) B 64,190 ( 31.17%) A 92,530 (33 6%)
  TT 200,044 (31 58%) seats T 3 B 4 A
- SLMC T 26,176 ( 17 15%) B 23,083 ( 11 2) A 83,658 (30 4) TT 132,917
  Seats T 2 B 1 A 4
- NFF TT 9522 (1.50%) seat 1
- Others TT 22,323 (2.52%)

---

- கிழக்கில் இடம்பெற்ற இரண்டாவது மாகாண சபைத்தேர்தல் இது.
- திருகோணமலை, அம்பாறையில் முன்னைய தேர்தலைவிட அதிக வாக்காளர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வாக்களிப்பு விகிதம் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டினர்.
- மட்டக்களப்பில்கூட முன்னைய தேர்தல்களைவிட அதிக வாக்குகளை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வழங்கியிருந்தனர்.
- UPFA கூட்டமைப்பு கூடுதல் வாக்குகளைப் பெற்றிருந்தது. TMVP யும் இவர்களுடன் களமிறங்கி இருந்தது. UNP மிகக் குறைவான வாக்குகளைப் பெற்றிருந்தது.




(இலத்திரனியல் கட்புல பாவனைக்கு மாத்திரம் உகந்தது)


உண்மையில் தமிழ் மக்களின் வாக்குகள் சரியாக நெறிப்படுத்தப்படுமாயின் வாக்களிப்பில்தமிழ்த்தரப்பு நல்லபெறுபேறுகளைப் பெறும் வாய்ப்பு அதிகம் உள்ளது என்பதை இச்சட்ட வரைபு சுட்டிக்காட்டுகிறது. இருப்பினும் அதிக வாக்குகள் பெறுதல் என்பது தமிழரின் கிழக்கு அரசியல் இருப்பினை ஆக்கபூர்வமாக உறுதி செய்யாது. உதாரணமாக மட்டக்களப்பு,2018 உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி 168,527 பெறப்பட்ட வாக்குகளுக்கூடாக பெற்றுக்கொண்ட ஆசனங்களை எடுத்துக்கொண்டால் மற்றைய கட்சிகளை விட அவை அதிகமானவை. முதலாவது இடத்தில் 82 ஆசனங்களை அக்கட்சியும்,63,196 வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 54 ஆசனங்களுடனும், மூன்றாவது இடத்தில் 61,071வாக்குகளுடனும் 53 ஆசனங்களுடனும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும், நான்காவது இடத்தில் 57,647 வாக்குகளுடனும் 50 ஆசனங்களுடனும் ஐக்கிய தேசியக் கட்சியும் உள்ளன. அதேவேளை சுயேட்சைக் குழுக்களில் போட்டியிட்டோர் 51,826 வாக்குகளுடனும் 44 ஆசனங்களுடனும் உள்ளனர். ஆதலால் பெருமளவு வாக்குகளை உள்ளுராட்சி மனறங்களில் பெறுதல் பிரதிநிதித்துவங்களை அதிகரித்து உள்ளுராட்சிமன்றங்களை தனதாக்கி ஆட்சியமைக்க உதவும் என்பதும் எப்போதும் சாத்தியமல்ல. ஆனால் பாராளுமன்றத்தேர்தலில் அது உதவும்.

மற்றும் கடந்த தேர்தல் ஒரு உண்மையையும் புலப்படுத்துகிறது. தமிழ் தரப்பில் இருந்து வேறு தமிழ் கட்சிகள், தேசிய கட்சிகளின் கூட்டமைப்புக்களுடன்அல்லது சுயேட்சைக்குழுக்களுடன் இணைந்து, கூட்டுச்சேர்ந்து தமிழ் தேசியத்தை வலியுறுத்தாத அதேவேளை சிங்களக்கட்சிகளுக்கு ஆதரவாக ஆட்சி அமைக்கவும் முடியும். இதனை 2018 உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெளிவாகப்பார்க்கலாம்.அதேவேளை அடுத்த மாகாண சபைத்தேர்தலிலும் தமிழ் வாக்குகள் பிரிக்கப்படுவதனால்அவை வேறு தரப்புக்குப்போய் அவர்களை பலப்படுத்தி தமிழ் பிரதிநிதித்துவத்தை சரித்துவிடும். இத்தகைய சூழ்நிலை, ஏற்படலாம் என்பதை 2008 மற்றும் 2011 தேர்தல் கூட்டுக்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. எனவே தமிழ் கட்சிகள் பெரும்பான்மை பலத்துடன் இருப்பதென்பதைக்காட்டிலும் அதிக பிரதிநிதித்துவத்தை தமதாக்கும் வண்ணம், சிறிய எதிர்க்குழுக்கள் வாக்குகளைச் சிதறடிக்கவிடாத தந்திரோபாயத்தையும், படிப்படியாக வாக்குவங்கியை உயர்த்தும் இராஜதந்திரத்தையும் பெரிய தமிழ் கட்சி கவனத்தில் கொள்ளவேண்டி உள்ளது.

இருந்தபோதிலும் கொள்கைகளுக்கப்பால், பொதுவாகக் தேர்தல் காலங்களில் காணப்படும் மனநிலை வாக்களிப்பில் செல்வாக்குச் செலுத்தி பெறுபெறுகளை மாற்றவல்லது. அந்தவகையில் கிழக்குத் தமிழர்களின் மனநிலை செல்வாக்குமிக்க தமிழ் கட்சியின்பால் கடுமையான விமர்சனங்களையும் அதிருப்தியையும் கொண்டதாக இருந்தபோதிலும், தமிழ் உணர்வினால் உந்தப்பட்டு, அவர்களுக்கு வாக்களிக்கும் நிலை எப்போதும் இருந்து வந்துள்ளது என்பதை கீழுள்ள சட்டவரைபு காட்டுகிறது. ஆயினும் குறிப்பிட்ட தமிழ் கட்சி மட்டில் தற்போது காணப்படும் விமர்சனங்களினதும், அதிருப்தியினதும் அளவை நோக்குகையில் அது குறிப்பிடத்தக்க வகையில் வாக்குகளை சரிக்கத்தக்கவகையில் உருப்பெறலாம் என்ற சந்தேகம் உள்ளது. அத்துடன் எதிர்மறை விமர்சனங்கள் அதிகரித்து வாக்காளர்களின் மனநிலை சார்பற்றதாக அதேவேளை கடினமுற்றதாக மாறும் அபாயமும் உள்ளது. இக்கடினமுற்ற மனநிலை கவனத்தில் கொள்ளப்பட்டு சீர்செய்யப்படவில்லை என்றால் நாளடைவில் எதிர்ப்புணர்வாக, எதிர்ப்பலையாக மாறும் அபாயம் உள்ளது. இவ் எதிர்ப்பலையே தேர்தல்களில் தமது வாக்கின் மூலம் தமது எதிர்ப்பைக்காட்டும் மனநிலைக்கு தமிழ் வாக்காளர்களை இட்டுச்செல்லலாம். அத்துடன் தற்போதுள்ள விரக்தி உணர்வை சரியாகத் திட்டமிட்டு எதிர்பலையாக மாற்றி, பிரதான தமிழ் கட்சியை எதிர்க்கும் ஏனைய சிறிய தமிழ்

கட்சிகளும் தேசிய கட்சிகளும் தமக்கு சாதகமாக்கி, வாக்களிப்பின் போக்கினை மாற்றிவிடமுடியும். இதனால் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தமிழ் தேசியம் கலந்த பிரதிநிதித்துவம் விழ்ச்சி காணும்.

**தமிழ் மக்களிடையே தமிழ் கட்சிகள் கொண்டுள்ள செல்வாக்கு 2010 தொடக்கம் 2018 வரை**




அத்துடன் பிரதான தமிழ் கட்சியின்பால் அதிருப்தியுறும் குழுக்கள் சுயேட்சைக்குழுக்களாக போட்டியிட்டு தமிழ் வாக்குகளைச் சிதறடித்து பிரதிநிதித்துவப் பெறுகையை பாழாக்கவும் கூடும். கிழக்குத் தேர்தல் பரப்பில் வேறு கட்சிகள், குழுக்கள் என்ற வட்டத்துக்குள் பெருமளவு அதிருப்தி வாக்குகள் குவிவதால் காத்தரமற்ற தமிழ் பிரதிநித்தவம் சிதறி கொள்கையற்ற, இலக்கற்ற அரசியல் குழுக்களிடையே அவை பகிரப்படும் நிலைமை இன்னும் அதிகமாகலாம். 2018 தேர்தலை எடுத்துக்கொண்டால் உதாரணத்திற்கு மட்டக்களப்பில் இத்தகைய குழுக்கள் 144, 664 வாக்குகளைப்பெற்றுள்ளன. தமிழ் பிரதேச சபைகளுக்கான இத்தேர்தலில், ஏறாவூர்பற்று, போரதீவுப்பற்று, கோறளைப்பற்று வடக்கு, மண்முனைப்பற்ற, மண்முனை தென் மேற்கு, மண்முனை தெற்கு எருவில் பற்று போன்ற பிரதேச சபைகளில் தமிழ் சுயேச்சைக்குழுக்கள் களத்தில் இறங்கி வாக்குகளை பெருமளவில் பிரித்துள்ளன. தான்வெல்லாது போனாலும் எதிரியாகக்கொள்ளப்பட்டவன் தோற்கவேண்டுமென்ற மனநிலை மேலோங்கி உள்ளதனால் தமிழ் உணர்வுகள் இரண்டாம் பட்சமாகி எதிர்ப்புணர்வு முதன்மை பெறலாம். இது தமிழ் பிரதிநிதித்துவத்தை தக்கவைப்பதில் பெரிய சவாலை தோற்றுவிக்கும் என்பது திண்ணம்.

**தமிழ் வாக்களிப்பில் உள்ள சில சவால்கள்**

இத்தகைய நிலையில் கிழக்கின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை எடுத்துக்கொண்டால் 16 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழர்கள் பொதுவாக மட்டக்களப்பில் 3, அம்பாறையில்-1, திருகோணமலையில்-1 என மொத்தமாக 5 ஆசனங்களையே நேரடி வாக்களிப்பு மூலம் பெறுகின்றனர். உண்மையில்முஸ்லிம்களைவிட 48,000மக்களை அதிகமாகக்கொண்ட தமிழ் மக்கள் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைவிட குறைந்த பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையே பெறுகின்றனர். இதற்கான முக்கிய இரு காரணங்கள் உள்ளன. ஒன்று தமிழ் வாக்காளர்கள் பாராளுமன்றத்தேர்தலில் வாக்களிக்க ஆர்வம் காட்டுவதில்லை. உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 2015 பாராளுமன்றத்தேர்தலில் 127,185 வாக்குகளையே கொடுத்து 3 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளனர். ஆனால் 2018 உள்ளுராட்சிமன்றத் தேர்தலில் 168,527 வாக்குகளை அதே பிரதான தமிழ் கட்சிக்கு அளித்துள்ளனர். இதனை 2015 பாராளுமன்றத்தேர்தலில் மேற்கொண்டிருந்தால் இன்னமொரு ஆசனத்தைப்பெற்றிருக்க முடியும். தமிழ் வாக்காள்ர்களின் அசமந்தப்போக்கும் அரசியல் மயப்படாத நிலையும் இத்தகைய போக்குக்கு பிரதான காரணமாகும்.

**மேலும் 2019இல் மாகாணசபைத்தேர்தல் இடம்பெற வாய்ப்புள்ளது. 2012இல் இடம்பெற்ற மாகாணசபைத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 104,628 வாக்குகளும் (6 ஆசனங்கள்), திருகோணமலையில் 44,396 வாக்குகளும் (3 ஆசனங்கள்), அம்பாறையில்44,769 வாக்குகளும் (2 ஆசனங்கள்) பெரிய செல்வாக்குள்ள தமிழ் கட்சிக்கு அளிக்கப்பட்டதனால்கிழக்கில் 11 ஆசனங்களைப் பெறக்கூடியதாயிருந்தது. ஆனால் 2018 இல் இடம்பெற்ற உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் இதே கட்சிக்கு மட்டக்களப்பில் 168,527 அதிகரித்த வாக்குகளும், திருகோணமலையில் 32,446 வாக்குகளும், அம்பாறையில் 24,468 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.**இங்கு மனதை உறுத்தும் விடயம் என்னவெனில் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்கள் தமிழ் வாக்குச் சரிவினை எதிர்கொண்டுள்ளன. இந்நிலை இனியும் தொடருமா என்பதாகும். அப்படித்தொடருமாயின் இவ் இரு மாவட்டங்களிலும் பிரதிநிதித்துவம் நிச்சயமாகக் குறைவடையும். அது தமிழர் அரசியல் இருப்பினை அபாயத்தில் தள்ளிவிடும். அத்துடன் 2018 தேர்தலில் இரண்டாம்நிலைத் தமிழ் கட்சியாக மாகாணத் தமிழ் கட்சியொன்று மட்டக்களப்பில் 61,468 வாக்குகளைப் பெற்றுள்ளது. 2012இல் அக்கட்சி தேசியக் கட்சிகளின் தயவில் அவர்களின் கூட்டில் தேர்தலில் போட்டியிட்டமையினால் அத்தேர்தலில் அதன் வாக்குவங்கி பற்றித் தெளிவாகக் கூறமுடியாது. மேலும் 2015

